ஜ

(முன்பு '

FORMERLY KNOW

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ.,
பத்ராதிபர்.

புஸ்தகம் 13 Vol. 13. } ஸித்தார்த்தி௵ பங்குனி, சௌத்ரி-சித்

ஜனாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச் செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

வ்யவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும், முனிஸிபாலிடிகளும் ஜனாபிமானியை வாங்கி வருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

	உள்நாடு.	அய
வர்ஷம் 1-க்கு ...	4 0 0 ...	
மாதிரி காபி ...	0 2 0 ...	

விளம்பர விகிதங்கள்

1 பக்கத்திற்கு மாஸம் ஒன்றுக்
$\frac{1}{2}$,, ,, ,,
$\frac{1}{4}$,, ,,
$\frac{1}{8}$,, ,,

வ்யாஸம் எழுதுபவர்கள்

வ்யாஸங்கள் ஒப்புக்கொள்
தும் எழுதினவர்களுக்கு த
டும். ஒவ்வொரு வ்யாஸத்
பக்கத்தில் ஒரு பாதியைவி
எழுதவேண்டும். பேசும்
மான தமிழ் உதவாது.
வ்யாஸங்களின் காபிரைட
புக்கொள்ளப்படாத வ்யா
வோர் தபால்ஸ்டாம்ப் அ

☞ **முக்ய அறிவி**
சந்தாதார்களுக்கு, எங்க
விலையில் ரூபாய்க்கு 2-அ
ளின் விலையில் ரூபாய்க்
துக் கொடுக்கப்படும். ஆர்
நம்பரைக் குறிப்பிடவேண்

கள்.

...ம் செய்தல், துணிகளிலும் ...லும் விழுந்துள்ள கறைகளைப் ...ழங்கள், புஷ்பங்கள், முட்டைகள், ...ள், புஸ்தகங்கள், முதலியவைகளைக்கெடா ...திருத்தல், பொருள்களின் தன்மையைப் ...ததல், கடியாரங்கள், ஜோடுகள், மேஜோடுகள், ...ளக்குகள், பீங்கான், கண்ணாடிப்பாத்ரங்கள், முதலியவைகளின் பராமரிப்பு, தொழில் ஸம்பந்தமான செய்முறைகள், உபத்ரவம் செய்யும் ப்ராணிகளைத் தொலைத்தல், முதலிய விஷயங்களைப்பற்றி ஸுலபமான யுக்திகள் அடங்கியிருக்கின்றன.

9. நகைப் பைத்யம். விலை அணு 2.

இதில் பெண்கள் நகைப் பைத்யத்தால் தங்களிடம் உள்ள நகைகளை எப்படி வீணுக்குகிறார்கள் என்பது கதா ரூபமாக விளக்கப்பட்டிருக்கிறது.

10. மோஹனதாஸ் காந்தி. விலை அணு 5.

இது இந்திய தேசாபிமானிகளுள் ஒருவராகிய மிஸ்டர் காந்தியின் சரித்ரமாகும். இதில் அவருடைய பிறப்பு, வளர்ப்பு, வரலாறும், அவர் தென்னுப்ரிக்காவில் பட்ட கஷ்ட நஷ்டங்களும், தென்னுப்பிரிக்கா இந்தியர்களுக்காக அவர் பாடுபேட்டதும், இந்தியாவின் முன்னேற்றத்துக்காக அவர் பாடுபட்டு வருவதும், ஆகிய பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

11. வ்யவஸாய மஞ்சரி. விலை அணு 12.

வ்யவஸாயிகளுடைய அனுபவத்தில் சிறந்தவை ... தெரியவந்த பலநூதன சாகுபடி முறை ...ாயக் குறிப்புகளும் அடங்கியது. முக்ய ...லத்தைப் பண்படுத்துதல், விதை, ...ம்பு, பருத்தி, மணிலாக்கொட்டை, ...ள், இதரபயிர்கள் முதலிய பல ...நேக உபயோகமுள்ள குறிப்பு

...கள். விலை அணு 4.

...ல்களிலிருந்து எடுத்த 36 ...டங்கியது.

...ரம். விலை அணு 12.

...லை சிறுத்தின 12 ஆழ்வார் ...லாறும் ஜீவ்யசரித்ரமும் ...து.

... விலை அணு 6.

...க.

...கள். விலை அணு 6.

...தாபங்கள் கொண்டது.

...பணி,

(Left fragment:)

...5.
...ாம்ப
...ஆகிய
...த்துப்
...ப்ரி
...தால்
...ளை
...வாழ

...2.
...காட்

நூதன தமிழ்ப் புஸ்தகங்கள்.

OFFICE OF ... 30 JUN 1920

ரூ அ

51. ரவீந்த்ரநாத் தகூர் இயற்றிய சிறு கதைத் தோகுதி
3-ம் பாகம் 12 0
வி. வி. எஸ். ஐயர் மொழிபெயர்த்தது.

17. மந்தரியின் மகள் 0 6 0
ஓ. ஸம்பத் எழுதிய பாரஸீகக்கதை.

18. இந்த்ய ஸ்த்ரீரத்னஙகள் 0 6 0
ப்ரஸித்தி பெற்ற இந்திய வீர ரமணிகளின் ப்ரதாபங்கள் கொண்டது.

19. மஙகளேச் வரி 0 8 0
மிஸஸ் ராஜம்மாள் இயற்றிய நாவல்.

25. கர்ணன் 0 2 0
ஸுந்தரராகவ ஐயங்கார் இயற்றியது.

58. மைதிலி 0 12 0
கே. ருக்மணியம்மாள் எழுதிய நாவல்.

75. புத்த சரித்திரம் 0 8 0
வெ. ஸாமிநாதய்யர் இயற்றியது.

125. ஆனந்தமடம் 0 12 0
பங்கிம் சந்த்ர சட்டர் ஜி. எழுதிய வங்காள நாவலின் தமிழ் மொழி பெயர்ப்பு. திருச்சிற்றம்பலம் பிள்ளை எழுதியது,

150. ஆதிலக்ஷ்மி. 1 12 0
அல்லது அன்பின் மாட்சி, வா. மகாதேவமுதலியார் இயற்றிய நாவல்.

178. கீதமஞ்சரி. 0 8 0
ப ஸம்பந்தமுதலியார் இயற்றிய நாடகங்களில் வந்துள்ளபாட்டுகளின் தொகுதி.

184. ஞானப்ரகாசம். 1 8 0
டி. எம். பொன்னுஸாமி பிள்ளை இயற்றிய நாவல்.

198. இந்த்ரஜித்தன் 1 4 0
ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்.

241. ஆழ்வார்கள் சரித்ரம் 0 12 0
வைஷ்ணவ மதத்தை நிலை நிறுத்திய பன்னிரண்டு ஆழ்வார்களின் சரித்ரம் கொண்டது. கே. டி. ஸுந்தர ராஜ ஆசார்யார் இயற்றியது.

69. காட்ரோஜன் 0 3 0
கே. துரைஸாமி அய்யங்கார் இயற்றிய நாவல்.

474. பாரஸிக ரத்னஙகள் 0 1 0
ரஸமான பாரஸீகக் கதைகள் பல அடங்கியது.

771. தாமோதரன் 0 12 0
டாம் ஜோன்ஸ் என்னும் இங்க்லீஷ் நாவலை ஒட்டி அமையப் பெற்ற கதை.

1014. விஜயபாஸ்கரன் 1 0 0
எ. எஸ். பாரதி இயற்றிய ஒரு நாவல்.

1145. தேடாத செல்வம் 0 3 0
ஸ்ரீ சைலர் இயற்றிய ஒரு நாவல்.

1147. பஞ்சரத்னம் 0 12 0
கோவிந்த ஸாமிராஜா இயற்றியது.

1148. மரகதவல்லி 0 8 0
பி. வி. கோவிந்தஸாமி ராஜா இயற்றிய நாவல்.

1151. நளன் 0 2 0
வெங்கடராம சாஸ்த்ரியார் இயற்றியது.

1152. புறநாட்டுக் கதைகள் 0 2 0
ஸோம ஸுந்தரம் பிள்ளை இயற்றியது.

1154. கர்ணன் 0 3 0
வெங்கடராம சாஸ்த்ரி இயற்றியது.

1155. யயாதி 0 3 0
எ. வி. சாஸ்திரிகள் இயற்றிய கதை.

1156, துஷ்யந்தன் 0 3 0

1157. புதிதுரைத்த பழங் கதைகள் 0

1158. ஸ்ரீராமர் 0

1159. ஸெபன்னிஸா 0 6
ஒரு சரித்ர ஸம்பந்தமான கதை. வா. வெ[illegible]ட்டராம சாஸ்த்ரியார் இயற்றியது.

1180. பாதுகாபட்டாபிஷேகம் 1 0 0
வி. டி. ஸம்பந்தம் இயற்றிய நாடகம்.

1181. வீரரத்ன பாஜிப்ரபு 0 3 0
ஒரு சரித்ர ஸம்பந்தமான கதை.

1183 ஸ்த்ரீரத்னம் 1 0 0
எஸ். ராமஸ்வாமி ஐயர் இயற்றிய நாவல்,

ஜீ. எ. வைத்யராமன் அண்டு கம்பெனி

ஹைக்கோர்ட்டுக்கு எதிரில் 3. 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.

ரூ. அ. பை

90. மண்ணிப் படிக்கரைப் புராணம் 0 8 0
91. தனியூர்ப்புராணம் 0 2 0
93. வண்டு விநோது 0 2 0
149. தோல் காப்பியம். இளம் பூரணம் 1 0 0
வ. உ, சிதம்பரம் பிள்ளை பதிப்பு. பொருளதிகாரம் அகத்திணையியலும் புறத்திணையியலும் கொண்டது.
1149. ஆத்திசூடி 0 0 ½
மூலமும் உரையும்
1150. நல்வழி 0 0 ½
மூலமும் உரையும்
1153. நறுந்தொகை 0 3 0
மூலமும் உரையும்
21. கிழக்கும் மேற்கும் 0 8 0
ஸ்வாமி விவேகாநந்தர் எழுதிய வ்யாஸத்தின் மொழி பெயர்ப்பு, ஸுப்ரமண்ய சிவா மொழிபெயர்த்தது.
23. பக்தி விளக்கம் 0 12 0
223. சிகாகோ ப்ரஸங்கம் 0 5 0
ஸ்வாமி விவேகாநந்தர் செய்த ப்ரஸங்கத்தின் மொழி பெயர்ப்பு,
258 ஸ்ரீராமக்ருஷ்ண சரித்ராம்ருதம் 1 2 0
259 ஷை ரப்பர்பைண்ட் 0 14 0
498 வேதாந்த ரகஸ்யம் 1 8 0
ஸுப்ரமண்யசிவா இயற்றிய வேதாந்த நூல்
1080. விஷ்ணு ஸகஸ்ர நாமம் 0 12 0
மூலமும் நாமாவளியும் க்ரந்தத்திலும் உரைதமிழிலும் உள்ளது. பாஷ்யக்குறிப்புகள் கொண்டது.
1161. கோயிலொழுகு 0 6 0
[illegible] வைராக்ய ஸூர்யோதயம் 0 6 0
[illegible] வசனபூஷணம் 2 4 0
[illegible]ன் குருநாதன் 0 8 0
[illegible]வாமி விவேகாநந்தர் ராமக்ருஷ்ண பரமஹம்[illegible]ப்பற்றிச் செய்த உபன்யாஸம்.
1141. ஆர்யமத உபாக்யானம் முதல் பாகம் 0 8 0
1142 ஷை 2-ம் பாகம் 0 10 0
1144. ராமாயண ஸாரம் 1 0 0
சேஷகிரி சாஸ்த்ரி இயற்றியது

வால்மிகி ராமாயணம் தமிழ் வசனம்

• சரியான மொழிபெயர்ப்பு, பல வ்யாக்யானக் குறிப்புகளுடன் கூடியது

1164 பாலகாண்டம் 1 4 0

ரூ. அ. பை.

1165, அயோத்யாகாண்டம் 1 4 0
1166. ஆரண்யகாண்டம் 1 4 0
1167 கிஷ்கிந்தா காண்டம் 1 4 0
1166. ஸுந்தரகாண்டம் 1 4 0
1159. யுத்தகாண்டம் முதல்பாகம் 1 4 0
1170. ஷை 2-ம் பாகம் 1 4 0

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் மொழி பெயர்ப்பு. பல வ்யாக்யானக் குறிப்புகளுடன் கூடியது.

1171. முதல் பாகம் 1 0 0
1172. 2-ம் பாகம் 1 4 0
1173: 3-ம் பாகம் 1 0 0
1174. 4-ம் பாகம் 1 0 0
1175. 5-ம் பாகம் 1 4 0
1176. 6-ம் பாகம் 2 12 0
16. தன்னம்பிக்கை 0 8 0
எமர்ஸன் எழுதிய வ்யாஸத்தின் மொழி பெயர்ப்பு.
22. கந்த புராண வசனச் சுருக்கம் 0 8 0
ஸுப்ரமண்ய சிவாச்சார்யர் இயற்றியது.
90. இந்தியக் கைத்தொழில் சிறப்பு 1 0 0
இந்திய கைத்தொழில் கமிஷனில் கனம் மாளவியா எழுதிய சிறப்புரையின் மொழி பெயர்ப்பு
91. ராஜ ஸேவையும் இந்தியாவும் 2 0 0
240. சுய ஆட்சி 0 8 0
வி, எஸ், ஸ்ரீநிவாஸ சாஸ்த்ரியார் இயற்றிய இங்க்லீஷ் நூலின் தமிழ் பெயர்ப்பு
770. இந்திய கால நிர்ணயச் சட்டம் 0 8 0
1143. இயற்கை அற்புதங்கள் 0 8 0
எஸ். கஸ்தூரிரங்கய்யர் இயற்றியது.
1146. வியாஸ விதானம் 0 12 0
எஸ். கஸ்தூரிரங்கய்யர் இயற்றியது.
1160. ஹிந்து பாகசாஸ்த்ரம் 0 6 0
பி. வி. ஜகதீசய்யர் இயற்றியது.
1182. நோயற்ற வாழ்வே வாழ்வு 1 6 0
டி. எஸ். ஸால்வாடி யற்றியது.
34. ஸ்ரீமத் சங்கராசார்யர் 0 5 0
வி. ஆர், ஸ்ரீநிவாஸய்யங்கார் இயற்றியது,

ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி

ஹைக்கோர்ட்டுக்கு எதிரில் 3. 4, கொண்டிசெட்டித் தெரு மதராஸ்

அழகானது! சுதேசியமானது!! உபயோகமானது!!!

அழகான 1920 கியாலண்டர்

ஜனவரி மீ 31உ தேதிக்குள்ளாக எங்கள் டிபோ மருந்துகளை
6 ரூபாயிக்கு ஒரே தடவை வாங்குபவர்களுக்கு

ஒரு கியாலண்டர் இனாமாக அனுப்பப்படும்.

தனியாக கியாலண்டர் 1-க்கு வி. பி. யோடு 0-6-0.

மொத்தமாய் வேண்டுமானால் விலை சாசமாய்க் கொடுக்கப்படும்.

வி. பி. இல்லாமல் முன்னதாய் தபால்பில்லை அனுப்புவோருக்கு கியாலண்டர் சேராமல் போனால் அதற்கு நாங்கள் ஜவாப்தாரரல்ல.

சிலபிரதிகள் மாத்திரமே அச்சிட்டிருக்கிறோம். வேண்டியவர் உடனே வரவழைத்துக்கொள்ளவும்.

படை மருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு 0—6—0.	டப்பி 1-க்கு 0—2—0.	புட்டி 1-க்கு 0—12—0.

அமிர்தாஞ்சனம் எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல்,
ஒத்தைதலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாம்ருதம்.

விலை டப்பி 1-க்கு 0—8—0, டஜன் 1-க்கு 5—6—0, வி. பி. வேறு.

அம்ருதாஞ்சனம் டிபோ, } 109, ப்ரோரோட், பொம்பாய்.
6, தம்புசெட்டி தெருவு, மதராஸ்.

ஆயுர்வேத மருந்துகள்.

கஸ்தூரி குளிகை.—ச்வாஸம், இருமல், விக்கல், பிதற்றல் முதலியவைகளை உடனே குணப்படுத்தும். அசதி, ப்ரக்ஞையின்மை, மூர்ச்சை முதலியவைகளில் கைகண்டது. டஜன் மாத்திரை 12-அணா.

மர்ம குளிகை.—தேகத்தின் மெலிவான பாகங்களாகிய மர்மஸ்தானங்களில் பலமான காயங்கள் அல்லது வேறு கெடுதிகள் ஏற்படும்போது இந்த குளிகை மிகவும் பயன்படும். ப்ரஜ்ஞையின்மை, மூர்ச்சை, தளர்ச்சி முதலியவைகளால் ப்ராணனுக்கு ஆபத்து நேரிடும்போலிருந்தால், அப்போது இதை உள்ளுக்குக் கொடுக்கலாம். மேகம், நீர்க்கடுப்பு, மூத்ர ரோகங்கள் ஆகிய இவற்றிலும் இது உபயோகப்படும். எரிச்சல், தலைவலி, நீல்வாயு ஆகிய இவைகளில் நெய்யில் குழைத்து வெளியில் தடவுவதாலும் குணமேற்படும். 12 மாத்திரைகளின் விலை ரூபா 1—8—0.

விஷூசிகாரி குளிகை.—வாந்திபேதி, கழிச்சல், வயிற்றுக்கடுப்பு ஆகிய இவைகளில் இது கைகண்ட மருந்து. ஜீரகக் கஷாயத்திலாவது தேனிலாவது கலந்து உட்கொள்ளவும். வ்யாதியின் ஆரம்பத்தில், வேறு மருந்துகள் கொடுப்பதற்கு முன்னமேயே இதைக் கொடுக்கவேண்டும். வ்யாதியின் கடுமைக்குத் தகுந்தபடி இரண்டு மூன்று குளிகையை அரைமணி நேரத்துக்கு ஒரு தடவையாகக் கொடுத்தால் ப்ராண பயம் ஏற்படாதென்பது நிச்சயம். மூன்றுதடவை கொடுத்தும் வயிற்றுக்கடுப்பும், வாந்தியும் நிற்காவிட்டால், நமது விஷூசிகாரி த்ராவகத்தை பூரா டோஸ் ஒன்று கொடுத்தால், வ்யாதியை உடனே நிறுத்தும். ஆனால் த்ராவகத்தை முதலிலேயே கொடுக்கக்கூடாது. 12 குளிகையின் விலை 12-அணா.

மதன காமேச்வர லேஹ்யம்.—நபும்ஸகத்துக்குக் கைகண்டமருந்து. அஜீர்ணம், குன்மம், வாந்தி முதலிய அன்னாசயக் கோளாறுகளைப் போக்கவும் இது பயன்படும். இது தாதுவை வ்ருத்திசெய்வதுடன் புஷ்டியும் பலமும் உண்டாக்கும். இரவில் $\frac{1}{8}$-தோலா முதல் $\frac{1}{4}$-தோலாவரையில் சாப்பிட்டு பால் சாப்பிடவும். $\frac{1}{4}$-ராத்தல் ரூ. 2-10 1-ராத்தல் அல்லது 40-தோலா 10 ரூபா. ஷை இரண்டாம் தினுசு ஒரு ராத்தல் ரூபா 5—0—0; $\frac{1}{4}$-ராத்தல் ரூபா 1—6—0.

ப்ரங்காமலக தைலம்.—தூக்கமின்மை, தலைஉஷ்ணம், தலைவலி, உற்சாகமின்மை, அதிகவேலையால் அசதி இவைகளுக்கு தலைக்குத் தேய்த்துக்கொள்ள உயர்ந்த மருந்து. 16-ஔன்ஸ் கொண்ட புட்டி முதல்தரம் தைலம் ரூபா 3—8—0 ஷை இரண்டாம்தரம் ரூபா 3—0—0.

இதர மருந்துகளின் விலை விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர், ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல், தென் மலையாளம்.

(80 2. c.) The Manager, **Arya Vaidyasala, Kottakal,** (*S. Malabar.*)

ஸ்திரீகளுக்கு

கேஸரியின்

"லோத்திரா"

இந்த "லோத்ரா" ஔஷதமானது ஸ்திரீகளுக்குள்ள கஷ்டங்களை நீக்கும்.

பஹிஷ்டைகாலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை மிக்க ஆச்சரியத்தை உண்டுபண்ணி நிவர்த்திக்கும். இந்த ஔஷதத்தினாலேயே அது சம்பந்தமான எல்லாவித குற்றங்களும், சந்தான மின்மை, தலைநோய், உடம்புவலி, அஜீரணம், இரக்தஹீனம், பலஹீனம், மலபந்தம், சரீரம் இளைக்கும் தன்மை முதலான அநேக ஸ்திரீகளின் வியாதிகள் வெகு நம்பிக்கையாய் நிவர்த்தியாகும்.

24	அவுன்ஸ்	புட்டி	ரூ.	5	0	0
12	,,	,,	,,	3	0	0
6	,,	,,	,,	1	10	0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,
39, போலீஸ் கமிஷனர் ஆபீஸ் ரோட்டு, எழும்பூர்.
சென்னை.

(75 2. C.) KESARI KUTEERAM,
Head Office, Egmore, Madras.

பால்லிவாலாவின் திவ்ய மருந்துகள்.

க்வினைன் டப்ளீன். 1-க்ரெயின் மாத்ரைகள் 100-உள்ள புட்டி. 2-க்ரெயின் மாத்ரைகள் 100-உள்ள புட்டி.

மலைஜ்வரம், ஜ்வரம் முதலியவைகளுக்கான குளிர் ஜ்வர மிக்சரும், மாத்திரைகளும்.

தாதுபுஷ்டி மாத்திரைகள்.
பல்பொடி.
கடிமருந்து.

டாக்டர் ஹெச். எல். பாட்லிவாலா ஸன்ஸ்
அண்டு கோ., லிமிடெட்,
நெ. 309, வார்லி, 18-பம்பாய்.

Dr H. L. Batliwala, Sons & Co., Ltd.,
(81-4-19) *No. 309, Warli 18, Bombay.*

பொட்டக்ராப் படங்கள்.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டக்ராப் படம் பிடிப்பதிலும் சிறிய படங்களை பெரியதாக்கிக் கொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்த்ரி,
பொட்டக்ராப் பிடிப்பவர், கர்னடிக் ஸ்டுடியோ,
மவுண்ட் ரோட், மதராஸ்.

P. S. SASTRI,
Artist and Photographer,
Mount Road, Madras.
(85 2. C)

Hair Destroyer Sun Soap.

ரோம ஸம்ஹாரி ஸன் ஸோப்பு,

இதை ஒரு தடவை போட்டால் தேகத்தில் எந்த இடத்திலிருந்தாலும் மயிரை சுத்தமாய் எடுத்துவிடும். வலியுமில்லை. கறை படுவதுமில்லை. இந்த ஒரு ஸோப்புத்தான் தோலின் வர்ணத்தை பளபளப்பாய் வைக்கிறது.

மூன்று கட்டிகளுள்ள பெட்டி 1-க்கு ரூ. 1-4-0.
வி. பி. சார்ஜ் 4 அணா.

தனி ஏஜெண்டு:—

மேட்டா புருஷோத்தம் மூல்ஜி,
வாஸனைகள், மருந்துகள்,
பித்தளை காண்டில் ஸ்டாண்ட் வ்யாபாரம்,
29, சைனாபஜார் ரோட்,
பூக்கடை பக்கம், மதராஸ்.

Metha Purushottam Moolji,
Perfumer, Druggist, & Brass Candle Stand Manufacturer, 29, China Bazaar Road,
(79.2 C.) *Near Flower Bazaar, Madras*

உயர்ந்த ரத்தசுத்தி மருந்து

டாக்டர் வாமன் கோபாலுடைய

அயோடைஸ்ட் ஸார்ஸபரில்லா.

ஆயிரக்கணக்கான வ்யாதிஸ்தர்கள் இந்த மருந்தை உபயோகித்துப் பலன் கண்டிருக்கிறார்கள். இது மற்ற ரத்தசுத்தி மருந்துகளைவிட ரொம்ப உயர்ந்த தென்றும் கைகண்ட தென்றும் அனுபவத்தில் தெரிய வந்திருக்கிறது. காள்பட்ட கீல்வாயு, தோலைப்பற்றிய வ்யாதிகள், பலஹீனம் ஆகிய இவைகளுக்கு உயர்ந்த மருந்தென்று அரை நூற்றாண்டாக ப்ரஸித்திபெற்றிருப்பது. உலகமெங்கும் புகழ்ப்பெற்றது. மேலும் இது உயர்ந்த ரஸாயனமாகும் (டானிக்). தினந்தோறும் இதை உபயோகித்து வந்தால் மனமும் தேகமும் சுறுசுறுப்படையும்.

பாக்கிங் போஸ்டேஜ் உள்பட ஒரு பாட்டில்
ரூபா 1—11—0
ஷை ஷை 4-பாட்டில்கள் ,, 4—13—0

டாக்டர் கௌதம ராவ் கேசவ அண்ட் ஸன்,
533, தாகுர்த்வார், பம்பாய்.

Dr. Gowtam Rao Keshav & Son,
533, *Thakurdwar, Bombay.*
(2. C. Feb.' 20.)

Aletris Cordial.

அல்லெட்ரிஸ் கார்டியல்.

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து.

உலகம் முழுவதும் எல்லா டாக்டர்களாலும் ஸ்திரீகளுக்குள்ள தொந்தரவுகளுக்கு உபயோகிக்கப்பட்டது. ருதுவாகும் தருணத்திலுள்ள பெண்களுக்கு மிகவும் சிறந்தது. ஒரு தேயிலைக் கரண்டி மருந்தை வெந்நீரோடு கலந்து சாப்பாட்டுக்கு மத்தியிலேயும், படுக்கப்போகும் ஸமயத்திலேயும் சாப்பிடவேணும். இது பிரவித்திபெற்ற மருந்தாகையால், இதைப்போல் அனேகம் பேர்கள் போலியாக செய்து வருகிறார்கள். ஏமாந்து போகமல்,

Celerina

ஸிலரீணா.

சீவனில்லாதவர்களுக்கு அரட்டை, புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சைபோகுதல், நரம்புத் தளர்ச்சியாலுண்டான அஜீரணம், குடியால் ஏற்பட்ட தீமைகள் இவைகளுக்கு ஸிலரீணா கைகண்டமருந்து. சாப்பாட்டுக்கு ஒரு மணிக்கு முன்னமேயும், படுத்துக் கொள்வதற்கு முன்னேயும் தினம் மூன்று தடவை தேயிலைக் கரண்டி அளவு சாப்பிடவேணும்.

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY ,U. S. A.

என்ற லேபிலைப் பார்த்து வாங்கவேண்டும். எந்த மருந்து ஷாப்பிலும் கிடைக்கும். (87)

ஜகப் பிரசித்திபெற்ற ஜின்டான் மாத்திரை.

இது அதிமேலான மூலிகைகளினால் தயாரிக்கப்பெற்றவை. இதை உபயோகிப்பதினால் பலவியாதிகளைக் கண்டித்தும், அண்டவொட்டாமல் தடுத்தும் சரீர ஆரோக்கியத்திற்கும், ரட்சணைக்கும் இன்றியமையாதவை என்பதை யாவரும் அறிந்தவிஷயம் பெரியபெரிய டாக்டர்கள் இதைப்பரிசீலனை செய்து இதின் உத்தமகுணங்களைப் புகழ்ந்து வருகிறார்கள். உடனே உபயோகித்து வரவும். கபம் சீதளம் ஜ்வரம் அஜீரணம் மந்தம் இருமல், வாந்தி, துர்நாத்தம், மல பந்தம் சோம்பல் முதலிய பல வியாதிகளைக் கண்டித்து அதிக குணம் செய்வதில் இதற்கிணையில்லை.

1920 ௵ ஜனவரிமாசம் 18 தி முதல் புதியபொட்டணங்கள் ஸப்ளை ஆகி வருகிறது.

சிறுபொட்டளம் 1 அணா நடுத்தரம் சாதா டப்பியுடன் 4 அணா; பெரிய பொட்டளம் கண்ணாடி டப்பியுடன் ரூ. 1 எல்லாக் கடைகளிலும் கிடைக்கிறது.

ஸோல் ஏஜண்டுகள். எஸ், வைத்யா அண்டுகோ, பார்க் டவுன், மதராஸ்.
பிராஞ்சிகள் கொண்டிசெட்டித் தெருவு, எஸ்ப்ளனேட், மதராஸ்; அவினியு ரோட், பங்களூர் பேட்டை; திருச்சிக் கோட்டை; கொழும்பு. விவரம் வேண்டுவோர்க்கு காடலாக் அனுப்புகிறோம்.

ஸான் மெட்டோ.

SANMETTO.

வைத்தியர்களுக்கு அறிக்கை.



இந்த ஔஷதம் உற்பத்தி அவயவங்களுக்கும் மூத்திர அவயவங்களுக்கும் தீபனத்தையும் பலத்தையும் கொடுத்து, மூத்திரத்தை மெதுவாயும் சாந்தமாயும் வெளிப்படுத்தும்.

இந்த மருந்தில் ஒன்றுக்கொன்று பொருத்தமாயுள்ள சரக்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதை உபயோகப்படுத்துவதினால் மூத்திர அவயவங்களின் ரோகங்கள் நிவர்த்தியாகி மேற்படி அவயவங்கள் தம் தம் சுபாவ ஸ்திதியை அடையும். இதைத் தனியே யாயினும் மற்ற ஔஷதங்களுடனும் உபயோகிக்கலாம்.

இந்த மருந்தில் மூத்திரத்தைக்கட்டி, கிருமிகளைக்கொன்று, மூத்திர அவயவத்தின் சதையை அழுகிப் போகும்படி செய்யும் மருந்து ஒன்றும் இல்லை. இதனால் எரிச்சல் நேராது. ஆகையால் நாள்பட்ட வியாதிகளுக்கு நன்றாய் சௌக்கியமாகிற வரைக்கும் இதை உபயோகப்படுத்தி வரலாம். அப்படிச் செய்வதுதான் உசிதம்.

மூத்திரப்பிண்டம், மூத்திரப்பை இவைகளிலுண்டாகும் சகல உபத்திரவங்களுக்கும் ஸான்மெட்டோவை உபயோகப்படுத்தலாம். இது மூத்திரத்தைச்சாந்தமாகவும் எரிச்சலில்லாமலும் வெளிப்படுத்தும்.

இது அடியிற்கண்ட வியாதிகளுக்கும் விசேஷமாய் உபயோகமுள்ளது :— வயது சென்றவர்களுக்கு அடிக்கடி நீர் இறங்கச்செய்யும் நீர்த்தாரை கிரந்தியின் ரோகங்களுக்கும் கர்ப்பம் உண்டாயிருக்கும் ஸமயங்களில் ஸ்திரீகளுக்கு சம்பவிக்கும் மூத்திர ரோகங்களில் வெள்ளைக்கரு அதிகப்படாமல் சமனப்படுத்தவும், வலிப்பு உண்டாகக்கூடிய காரணங்களைத் தணிக்கவும்; அவயவங்களைக் கத்தியினால் அறுத்து குழந்தைகள் இரவில் வேலைசெய்து ஆயுத சிகிச்சையின்றி மற்ற இதர காரணங்களால் தானே தனக்குத் தெரியாமல் மூத்திரம் வெளிப்படுத்தும் ரோகங்களுக்கும்; நீர்ப்பை எரிச்சலுக்கும் அல்லது உஷ்ணத்திற்கும்; ஸ்திரீ புருஷாள் இருவருக்கும் வலியுடனும் அல்லது கஷ்டப்பட்டு நீர் இறங்குவதற்கும்; எல்லாவித குறிப்பிட்ட அல்லது குறிப்பிடாத நீர்த்தாரை எரிச்சலுக்கும்; முக்கியமாய் நாள்பட்ட எரிச்சலுக்கும்; சக்தியற்ற அல்லது பலஹீனத்தையுடைய மூத்திர அவயவங்களின் கருவிகளுக்கு பலத்தைக் கொடுத்து, அவைகளில் நீர் சுரக்கும் குணத்தை விருத்தி செய்வதற்கும், தங்கள் சுபாவதன்மையை யடைவதற்கும் ஸான்மெட்டோ மிகவும் உபயோகம்.

ஸான்மெட்டோ 8 அவுன்ஸ் பாட்டிலாகத்தான் கிடைக்கும். ஒவ்வொரு பாட்டிலின் விலை ரூ. 3-6-0 அல்லது மார்க்கட்டில் விற்கிறபடி, எங்கும் எல்லா மருந்து வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

ஆட். கெம். கம்பெனி,
61, பாரோத் தெரு, ந்யூ யார்க்,
அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள்.

OD. CHEM. CO.,
61, Barrow Street, New York, U.S.A.

எஸ். வைத்தியா அண்டு கோ, மதராஸ்.

நாடெங்கும் பிரசித்த பெற்ற பரோடா அலம்பிக் ரஸாயன சாலையில் தயாரிக்கப் பெற்ற அதிமேலான பேடென்டுகள். ரசனைத் திரவியங்கள் டாயிலட்கள், மருந்துகள். ப்ரொபஸர் டி. செ. கஜ்ஜரவர்களால் அதி உன்னத முறையில் தயாரித்து சுலபமாய் யாவருக்கும் உபகாரமாகி வரும் கைகண்ட குடும்ப ஔஷதங்கள், ப்ளேக் காலரா இன்ப்ளுயன்ஸா முதலிய தொத்து வியாதிகளை வேரோடு களைந்தும் வியாதிகளை முன்னுகவே தடுத்தும், குணப்படுத்தியும் பத்தியம் முதலியவைகள் இல்லாமல் சுலபமாக உபயோகிக்கக்கூடியவை, விலை சரசம், எல்லா இடங்களிலும் மிகக்கியாதி பெற்றவை.

காலரா ஸொலுஷன்.	0—10—0	மலேரியா ,, ,,	0-10—0
ப்ளேக் ,,	0—10—0	லீவர், (சகல மலபந்தங்களுக்கும்)	1—4—0
ஜர்மிஸைட் (கிருமிநாசினி)	0—10—0	ரத்த சுத்த நிவாரிணி	1—4—0
ஜ்வரத்துக்கு ஸொலூஷன்	0—10—0	இது சகல மேக தோஷங்களையும் எடுத்து இரத்தத்தை சுத்தி செய்யத்தக்கது.	

படை மருந்து; மூல மருந்து, மேகரண மருந்து; சொரி சிறங்கு மருந்து இவைகள் எரிச்சல் இல்லை, கைகண்ட குணமானவை மேலுக்கு பூச. ஒவ்வொன்றின் விலை 0—5—0

உயர்ந்த பல்பொடி பல்லின் வியாதிகளை கண்டிப்பதோடு, வடவொட்டாமல் தயார் செய்யப்பட்டது. உபயோகித்தால் உண்மை தெரியும். 0—4—0

மூலிகா ஷர்பத்து (குன்மம் அஜீர்ணம்)		,,	1—4—0
ஹைபோ பாஸ்பேட்	,,	,,	1—4—0
க்ளிஸரோ பாஸ்பேட்	,,	,,	1-10—0
அயோடைட் ஸரஸா	,,	,,	0-14—0
இஸ்டன் ஷர்பத்	,,	,,	0--12—0
பாலாமிருதம் குழந்தைகளுக்கு		,,	0--12—0
ஹீலிங்குபாம் இது ஸகல மூத்திர வியாதிகளுக்கும்			2—8—0

எஸ். வைத்யா அண்டு கோ, பார்க்டவுன், மதராஸ.

மதனமஞ்சரி மாத்திரை.

ராஜவைத்திய நாராயணஜீ கேசவஜீ,

தேகத்தில் எவ்வித அசத இருந்தபோதிலும், அஜீரணம், மலச்சிக்கல், ரத்தக்குறைவு, அசுத்தமான ரக்தம், இடுப்புவலி, ஞாபகமின்மை நரம்புத்தளர்ச்சி நபும்சகத்துவம் இவை போன்ற கொடிய வியாதிகள் நீடித்திருந்த போதிலும் நம்முடைய மதனமஞ்சரி மாத்திரைகள் சீக்கிரம் குணப்படுத்தும்.

விலை டப்பி ரூ. 1—0—0

ஜாம்நகர், கத்தியவார்.

மதனமஞ்சரி மாத்திரை.

BALMITRA PILLS.
பால மித்திர

சிசுஸகா அல்லது குழந்தைகளின் தோழன்.
துர்ப்பலமான குழந்தைகளுக்குச் சிறந்த மருந்து.

இம்மாத்திரைகள் குழந்தைகளுக்கு உயிரைக்கொடுக்கும் ஜீவதாதுக்குச்சமானம். அவர்களுடைய ஜீரணசக்தியை யதிகரித்து தேக புஷ்டியைக் கொடுத்துக் காப்பாற்றுவன. குழந்தைகளின் பலத்தையும் சந்தோஷத்தையும் தேக காந்தியையும் அதிகரிப்பதை இவைகளைக் காட்டிலுஞ் சிறந்த மருந்து வேறு கிடையாது. தேகத்துக்கு மூலாதாரமான இரத்தத்தை விருத்திசெய்கின்றன. ஜ்வரம், இருமல், கபம், பேதி, அஜீரணம், மாந்தம் முதலிய குழந்தை வியாதிகளுக்கு இவைகள் தான் எடுத்தவை. தேகாரோக்கிய முடைய குழந்தைகள்கூட இவைகளையுபயோகிக்கலாம்.

300 மாத்திரைகளடங்கிய டப்பி.1-க்குரூ. 1.

இன்னும் விவரம் வேண்டுவோர் எங்கள் புதிய கியாட்லாக்கை வாங்கி வாசியுங்கள்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
157, பிராட்வே, மதராஸ்.

ஒரு ஸ்திரீயின் சிறந்த ஆபரணம்

அழகிய அடர்ந்த கூந்தலே.

அடர்த்தியாய், பட்டுப்போல் ம்ருதுவாய், பளபளப்பாய், படிப் படியாய் தொங்கும் அழகிய கூந்தல்!—எந்த ஸ்த்ரீ தான் தனது கூந்தல் இப்படி யிருக்கவேண்டுமென்று விரும்பமாட்டாள்!

ஒரே ஒரு கூந்தல் தைலந்தான் கூந்தலை மேற்சொன்ன லக்ஷணங்களுள்ளதாகச் செய்கிறது. அது ப்ரஸித்திபெற்ற

காமினியா ஆயில்

(ரெஜிஸ்டர்ட்) தான். இந்தத் தைலத்தை உபயோகிப்பதால் உஷ்ணங்கொண்ட தலை குளிர்ந்து போகிறது. தலைவலி பறக்கிறது. பொடுகுகள் இருந்தவிடந்தெரியாமல் மறைகின்றன. இவைகளோடு இந்தத் தைலம் ரொம்ப வாஸனையுள்ளது.

இது ரொம்ப உயர்ந்ததென்று மைஸூர் பொருள்காட்சியில் ஒரு மெடல் கொடுத்திருக்கிறார்கள். தேசமெங்கும் இதை வாங்கி வருகிறார்கள்.

இதை இதுவரையில் நீங்கள் உபயோகித்திராவிட்டால், ஒரு தடவை வாங்கிப் பாருங்கள். மற்றவர்களைப் போலவே இதை எப்போதும் வாங்கி உபயோகித்து வருவீர்கள்

ஒரு பாட்டிலின் விலை ரூ. 1 0 0 வி. பி. சார்ஜ் 0 7 0 ப்ரத்யேகம்.
3 பாட்டிலின் விலை ரூ 2 10 வி. பி. சார்ஜ் 0 15 0 ப்ரத்யேகம்.
இப்போதே எழுதுங்கள். தாமஸிக்கவேண்டாம்.

நூதனமானது! ஸுகந்தங்களுக்கு அரசன்! நூதமானது!!

ஆட்டோ தில்பஹார்

ரெஜிஸ்டர்ட்

இந்த ஸெண்ட் (வாஸனை) ஸுவாஸனையுள்ளது; நாஸூக்கானது; வெகு நாள் வாஸனை போகாதது. ஆனால் மிதமிஞ்சின வேகமில்லாதது. ரொம்ப ஸுகமானது.

ஒட்டோ தில்பஹார்.

ஸெண்டில் (வாஸனை) சாராயமாவது அல்கஹாலாவது சேரவில்லை. இது ஆயிரம் வகைப் புஷ்பங்களின் ஸாரமாகும்.

ஒட்டோ தில்பஹார் ஏராளமாய் விலையாகி வருவதைக்கொண்டு, இது மற்ற வாஸனைகளைவிட ரொம்ப உயர்ந்ததென்று வ்யக்தமாய் ஏற்படுகிறது. தவிர பங்களூர் முனிஸிபல் பொருள்காட்சியில் இதற்கு உயர்ந்தமெடல் கொடுக்கப்பட்டது.

ஒரு தடவை இந்த ஒட்டோ தில்பஹாரை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். இதன் மனோரம்யமான வாஸனையும், அதிகநாள் வாஸனை நிற்குமென்பதையும் அனுபவத்தில் கண்டறியலாம் சிறு வீஸா விலை. அணு 8.

நடுத்தர அளவுள்ள வீஸா அ. 12 பெரிய வீஸா (½ அவுன்ஸ் கொண்டது) ரூ. 2.
வாஸனைர் டஜன் 10 அணு. வி. பி. சார்ஜ் 4 அணு.

ஸோல் ஏஜெண்டுகள்:—ஆங்கிலோ இண்டியன் ட்ரக் அண்ட் கெமிகல் கம்பெனி,
நெ. 155, ஜம்மா மஸ்ஜித் மார்க்கெட், பம்பாய்.

மதராஸ் ஏஜெண்ட்:—மேட்டா புருஷோத்தம் முல்ஜி,
பார்க்டவுன், நெ. 29, சைனுபஜார் ரோட், பூக்கடைப்பக்கம், மதராஸ்.

SOLE AGENTS:—**Messrs. The Anglo-Indian Drug and Chemical Co.,**
155, Jumma Musjid, Market, Bombay.

(72,73 2. c.)

ஜனாபிமானி.

தபால் சார்ஜ் உள்பட	
வர்ஷ சந்தா	ரூபா
உள்நாடு	4.
வெளிநாடு	6.

THE JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
கொண்டி செட்டித்தெரு,
மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.
EDITOR.

புஸ்தகம் 13. Vol. 13. } 1920 ஷு-மார்ச்சு, ஏப்ரல், மீ — MAR., APR., 1920. { ஸஞ்சிகை 3, 4. Nos. 3, 4.

OFFICE OF T... MADRAS 30 JUN 1920

MADRAS ELEMENTARY EDUCATION BILL.

சென்னை எலிமெண்டரி கல்வி மசோதா.

நமது ராஜதானியில் எலிமெண்டரி கல்வி போதுமான அளவு அபிவ்ருத்தி யடையவில்லை. ராஜதானி முழுவதிலும் உள்ள சிறுவர்கள் எல்லாரும் கல்வி கற்கும்படி செய்ய வேண்டுமானால், இப்போது அது விஷயமாய் நடந்துவரும் முயற்சிகளை ஒழுங்குபடுத்த வேண்டும் அதோடு, அதற்காக அதிக பணமும் செலவழிக்க வேண்டும். இதை உத்தேசித்து மாகாண கவர்ன்மெண்டார் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் முக்ய அம்சங்களை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

வித்யா கௌன்ஸில்கள்.

ஒவ்வொரு ஜில்லாவிலும், அல்லது இந்த சட்டத்தக் கென்று ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு பிரிவிலும் ஒரு வித்யா கௌன்ஸில் ஸ்தாபிக்கப்படும். இந்தக் கௌன்ஸிலுக்கு ஜில்லா கலெக்டர் ப்ரெஸிடெண்டாக இருப்பார். அல்லது வித்யா கௌன்ஸிலின் மெம்பர்களுள் ஒருவரை கவர்ன்மெண்டார் ப்ரெஸிடெண்டாக நியமிக்கலாம். அல்லது கவர்ன்மெண்டார் இஷ்டப்பட்டால், கௌன்ஸில் மெம்பர்களே தங்களுக்குள்ளிருந்து ஒருவரை சில நிபந்தனைகளின் பேரில் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுர்கலாம். அந்தந்த வித்யா ஜில்லாவிலுள்ள ஸ்கூல் இன்ஸ்பெக்டரும், ஸ்கூல் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டரும் வித்யா கௌன்ஸிலில் மெம்பராக இருப்பார்கள். ஜில்லா கலெக்டர் ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டாக இராவிட்டால், ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டும் ஜில்லா போர்டிலுள்ள உத்யோகஸ்தரல்லாத மெம்பர்களில் ஒருவரை ஜில்லா போர்டு தெரிந்தெடுக்க அவரும் வித்யா கௌன்ஸிலில் மெம்பர்களாக இருப்பார்கள். ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்ட் ஜில்லா கலெக்டராக இருந்தால். ஜில்லா போர்டார் இரண்டு மெம்பர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

வித்பா ஜில்லாவில் உள்ள ஸ்தலஸ்[illegible]னங்கள் கவர்ன்மெண்டால் குறிப்பிட்ட ஸங்க்யைக்கு ப்ரதிநிதிகளை தெரிந்தெடுத்து வித்யா கௌன்ஸிலுக்கு மெம்பர்களாக அனுப்ப வேண்டும். இவைகளைத் தவிர கவர்ன்மெண்டார் சில மெம்பர்களை நியமிக்கலாம். மேலும், எலிமெண்டரி ஸ்கூல்களை நிர்வகித்து வரும் ப்ரைவேட் ஸ்தாபனங்களுக்கும், ப்ரைவேட் எலிமெண்டரி ஸ்கூல்களின் மானேஜர்களுடைய ஸங்கங்களுக்கும் தங்களில் ஒருவரையோ அதிகமானவர்களையோ வித்யா கௌன்ஸிலுக்கு மெம்பர்களாகத் தெரிந்தெடுக்க கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுக்கலாம். ஆனால் கவர்ன்மெண்டார் நியமிக்கும் மெம்பர்களின் தொகை, உத்யோகப் பாங்கில் மெம்பர்களாக ஏற்பட்ட மெம்பர்களைத் தவிர இதர மெம்பர்களின் தொகையில் கால்வாசிக்கு மேல் போகக்கூடாது.

வைஸ் ப்ரேஸிடேண்ட்.

கவர்ன்மெண்டார் வித்யா கௌன்ஸில் மெம்பர்களுள் ஒருவரை வைஸ் ப்ரெஸிடெண்டாக நியமிக்கலாம். அல்லது கௌன்ஸிலேயே ஒரு வைஸ் ப்ரெஸிடெண்டைத் தெரிந்தெடுக்கச் சொல்லலாம். வித்யா கௌன்ஸிலின் மெம்பர்களுடைய உத்யோக காலம் 3-வர்ஷமாகும். ஆனால் ஸ்தல ஸ்தாபனங்களின் ப்ரதிநிதிகள் ஸ்தல ஸ்தாபனங்களின் மெம்பர் ஸ்தானத்தை விட்டு விட்டால், கௌன்ஸில் மெம்பர் ஸ்தானத்தையும் விட்டு விடவேண்டும்.

இந்தக் கௌன்ஸில் குறைந்தது இரண்டுமாஸத்துக்கு ஒரு தடவை கூடவேண்டும். எந்த விஷயமும் மெஜாரிடியின் அபிப்ராயப்படி தீர்மானிக்கப்படும். மீட்டிங்குகளின் நடவடிக்கைகள் ஜில்லா கெஜட்டில் ப்ரசுரம் செய்யப்படும். நிர்வாக அதிகாரம் கௌன்ஸிலுடைய ப்ரெஸிடெண்டினிடம் விடப்படும். அவர் தமது அதிகாரங்களை வைஸ் ப்ரெஸிடெண்டுக்குக் கொடுக்கலாமென்றாலும், பொறுப்பு ப்ரஸிடெண்டைத்தான் சேர்ந்தது.

கௌன்ஸிலின் கடமைகள்.

(1) ஒவ்வொரு ஜில்லா வித்யா கௌன்ஸிலும் அதன் அதிகார எல்லைக்குள் இருக்கிற எல்லா எலிமெண்டரி ஸ்கூல்கள், ஸெகண்டரி ஸ்கூல்களிலுள்ள ப்ரைமரி பிரிவுகள் ஆகிய இவைகளின் ஜாப்தா ஒன்று தயார்செய்யவேண்டும்.

(2) அவ்வப்போது எலிமெண்டரி கல்விக்கு உள்ள ஸாதனங்களின் மதிப்பு, எல்லா சிறுவர் சிறுமிகளுக்கும் எலிமெண்டரி கல்வி கிடைக்கும்படி செய்யவேண்டுமானால் இன்னும் என்னென்ன ஸாதகங்கள் செய்துகொடுக்கவேண்டுமென்பது ஆகிய இவைகளுக்கு விவரம் தயார்செய்யவேண்டும்.

(3) ஒவ்வொரு தாலுகா போர்டிலும், முனிஸிபல் ப்ரதேசத்திலும் எலிமெண்டரி கல்வியைப்பரவச்செய்ய அந்தந்த ஸ்தாபனங்களோடு சேர்ந்து யோசித்து ஸ்கீம்கள் தயார்செய்யவேண்டும்.

(4) அந்த ஸ்கீம்கள் நிறைவேறுவதற்காக அதிகாரிகளுடனும், வித்யா எஜென்ஸிகளுடனும் கலந்து யோசித்து, புது ஸ்கூல்கள் ஏற்படுத்தவும் ஏற்கனவேயுள்ள ஸ்கூல்களை விசாலப்படுத்தவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

(5) எலிமெண்டரி ஸ்கூல்களுச்கு அங்கீகாரம் கொடுத்தல்.

(6) ப்ரைவேட் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு க்ராண்ட் கொடுக்க உத்தரவு செய்தல்.

(7) க்ராண்ட் கொடுக்க வித்யா டிரெக்டரால் கொடுக்கப்படும் பணத்தை விநியோகம் செய்தல்.

(8) எலிமெண்டரி ஸ்கூல் உபாத்யாயர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் போதனா முறைப் பள்ளிக்கூடங்களின் விவரமடங்கிய ஜாப்தா ஒன்று வைத்திருக்கவேண்டும்.

(9) பயிற்சிபெற்ற உபாத்யாயர்களின் தொகையை அதிகரிக்க ப்ரேரணைகள் தயார்செய்து வித்யா டிரெக்டருக்கு அனுப்புதல்.

(10) எலிமெண்டரி ஸ்கூல்களிலுள்ள பயிற்சியும் ஸெர்டிபிகேட்டும் பெற்ற உபாத்யாயர்களின் ரெஜிஸ்டர் ஒன்று தாயார்செய்து வைத்துவருதல்.

(11) வித்யா டிரெக்டரால் ஆலோசனைக்கு அனுப்பப்பட்ட, எலிமெண்டரி ஸ்கூல் ஸம்பந்தமான ப்ரச்னைகளைப்பற்றி ஆலோசனை சொல்லுதல்.

வித்யா கௌன்ஸிலுக்குப் பணம்.

வித்யா கௌன்ஸிலுக்கு பண்ட் ஒன்று ஏற்படுத்தப்படும். அதில் (1) எலிமெண்டரிஸ்கூல்களின் க்ராண்டுக்காக கவர்ன்மெண்டால் கொடுக்கப்படும் பணங்கள், (2) வித்யா கௌன்ஸிலின் ஆபீஸ் செலவுக்காக கவர்ன்மெண்டால் கொடுக்கப்படும் பணம், (3) வித்யா கௌன்ஸிலின் ஆதினத்திலுள்ள வித்யாஸம்பந்தமான தான ஸொத்துக்களிலிருந்து வரும் வரும்படி. (4) இந்த ஆக்ட் ஸம்பந்தமாக வித்யா கௌன்ஸிலுக்கு வரும் இதர பணம் ஆகிய இவைகள் சேரும். வித்யா கௌன்ஸிலுக்கு ஏற்படும் செலவெல்லாம் இந்த பண்டிலிருந்து தான் பட்வாடா செய்யப்பட வேண்டும்.

ஸ்தல ஸ்தாபனங்களின் வித்யா பண்ட்.

இந்த ஆக்ட அமுலுக்கு வந்துள்ள ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு ஸ்தலஸ்தாபனத்திலும் ஒரு எலிமெண்டரி கல்வி பண்ட் ஏற்படுத்த வேண்டியது. அதில் சேரும் தொகைகளாவன:—(1) இந்தச் சட்டத்தின்படி போடப்படும் வரிவஸூல் தொகை (2) எலிமெண்

டரி கல்விக்காக கவர்ன்மெண்டார் கொடுக்கும் பணம் (3) இந்தச் சட்டத்தின்படி போடப்படும் அபராதத் தொகைகள், (4) எலிமெண்டரிக்கல்விக்காகச் செய்யப்பட்டவையும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஸொந்தமானதும் அவைகளின் நிர்வாகத்திலுள்ள வையுமான தான ஸொத்துகளின் வரும்படி (5) அந்த ஸ்தலஸ்தாபனங்களின் மேற்பார்வையிலுள்ள எலிமெண்டரி ஸ்கூல்களில் வஸூலாகிற மாணவர் சம்பளம் (6) இந்தச் சட்டத்தின்படி ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கிடைக்கும் இதர வரும்படிகளும், அவைகள் இதற்காகக் கொடுக்கும் தொகைகளும்.

ஸ்தல ஸ்தாபனங்கள் வரிபோடுதல்.

எலிமெண்டரி கல்வி பண்ட் ஏற்படுத்தியுள்ள ஸ்தல ஸ்தாபனங்களில் கவர்னருடைய அனுமதியை முன்னாடியே பெற்று பின் வருமாறு வரிபோடலாம்.

(1) சென்னை முனிஸிபாலிடியிலும் இதர முனிஸிபாலிடிகளிலும், ஏற்கனவே போடப்பட்டுள்ள ஸொத்துவரி, கம்பெனிவரி, தொழில் வரிகளில் நூற்றுக்கு 25 க்கு மேல்படாமல் வரி போடலாம்.

(2) யூனியன்களில் வீட்டு வரியில் நூற்றுக்கு 25-க்கு மேற்படாமல் வரிபோடலாம்.

(3) இதர இடங்களானால் நிலத் தீர்வையில் ரூபாய்க்கு 1 அணாவுக்கு மேல்படாமல் வரி போடலாம். இது வரியின் உயர்ந்த அளவு. அந்தந்த ஸமயத்துக்குத்தகுந்தபடி, மேற் சொன்ன அளவுக்கு மேல்படாமல் எவ்வளவு வரி போடவேண்டுமென்பதை ஸ்தலஸ்தாபனங்கள் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

ஸ்தல்ஸ்தாபனங்களில் எலிமெண்டரிக் கல்வி பண்ட் ஏற்பட்டால், மேலே சொன்ன வரி வஸூலால் எவ்வளவு தொகை ஸ்தல ஸ்தாபனத்துக்குக் கிடைக்கிறதோ அந்தத் தொகைக்குக் குறையாமல் கவர்ன்மெண்டார் ஷை பண்டுக்கு பணம் கொடுத்து உதவுவார்கள். ஆனால் இந்தத் தொகையானது, அந்த ப்ரதேசத்தில் கவர்ன்மெண்டாலும் ஸ்தல ஸ்தாபனங்களாலும் நிர்வகிக்கப்பட்டு வரும் ஸ்கூல்களுக்காக இந்த ஆக்ட் அமுலுக்குவரும் வர்ஷத்துக்கு முந்திய வர்ஷத்தில் செலவுசெய்யப்பட்ட தொகையைத் தவிர அதிகப்படியாகக் கொடுக்கப்படும்.

கட்டாயப்படுத்திக் கல்வி கற்பித்தல்.

இந்தச் சட்டத்தின் நிபந்தனைகளுக்கு உள்பட்டு, எந்த ஸ்தல ஸ்தாபனமும், அதன் அதிகாரத்திலுள்ள ப்ரதேசம் முழுமையிலுமோ, அல்லது அதன் ஒருபாகத்திலோ பள்ளிக்கூட வயதுள்ள (1) எல்லாக் குழந்தைகளுக்குமோ (2) அல்லது எல்லா ஆண் குழந்தைகளுக்குமோ (3) அல்லது எல்லாப் பெண்களுக்குமோ எலிமெண்டரிக் கல்வியைக் கட்டாயப்படுத்திக் கற்றுக்கொடுப்பதாக தீர்மானிக்கலாம். அப்படித் தீர்மானம் செய்ய அதற்கென்று ஸ்தலஸ்தாபனத்தார் ஒரு மீடிங் கூட்டவேண்டும். அதில் வந்திருக்கும் மெம்பர்களில் 3-ல் இரண்டு பாகத்துக்குக் குறையாத மெம்பர்கள் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவேண்டும். அப்படிச்செய்த தீர்மானத்தை வித்யா கௌன்ஸிலின் மூலமாக ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னருக்கு அனுப்பவேண்டும். அவர் அதை அங்கீகரிக்கவோ மறுக்கவோ செய்யலாம்.

(1) அப்படிக் கட்டாயக் கல்விக்காகும் செலவுக்காக கல்விவரி போடத் தயாராக இருப்பதாக ஸ்தலஸ்தாபனம் தீர்மானம் செய்திருந்தாலும்,

(2) பயிற்சிபெற்ற உபாத்யாயர்கள் போதுமான அளவு கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஸ்தலஸ்தாபனம் செய்திருப்பதாக கவர்னர் திருப்தியடைந்தாலும்,

(3) குறிப்பிட்ட ப்ரதேசத்தில் பள்ளிக்கூடம்போக லாயக்குள்ள மாணவர்கள் [illegible]வருக்கும் போதுமான பாடசாலைகள் இருப்பதாகவோ அல்லது அவை கூடிய சீக்ரம் ஏற்படுமென்றோ கவர்னருக்குத் தோன்றினாலும் தவிர,

இதர ஸந்தர்ப்பங்களில் கவர்னர் ஷை தீர்மானத்தை அங்கிகரிக்க மறுத்துவிடவேண்டும். மேலும் ஸ்தல ஸ்தாபனத்தின் தீர்மானம் ஆண் அல்லது பெண்ணின் கல்வியைப்பற்றிமாத்ரம் கவனிப்பதாயிருந்து, மற்ற குழந்தைகளின் கல்விக்கு வேண்டிய கல்வி ஸாதனம் இல்லாமலோ, அல்லது கூடிய சீக்ரம் செய்யப்படுமென்ற நிச்சயமில்லாமலோ இருந்தால், கவர்னர் அந்தத் தீர்மானத்தை அங்கீகரிக்க மறுத்துவிடலாம்.

கவர்னர் தீர்மானத்தை அங்கீகரித்த பின், அப்படி அங்கீகரித்ததாக போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டிலும், ஜில்லா கெஜட்டிலும் விள

ம்பரம் ப்ரசுரிக்கவேண்டும். அதன் பிறகு பின்னால் சொல்லப்படும். கார்டியன்களுடைய பொறுப்பு, அட்டெண்டன்ஸ் கமிட்டி, கட்டாய கல்வி ஏற்பாடு பாதிக்காதவர்கள் இவைகளைப் பற்றிய நிபந்தனைகள் அமுலுக்கு வரும்.

கட்டாய ஏற்பாடு பாதிக்காதவர்கள்.

கவர்னர் எந்த நபரையும், எந்த வகுப்பாரையும், மேலே சொன்ன விளம்பரத்தால் பாதிக்கப்படாதவர்கள் என்று தீர்மானிக்கலாம்.

கார்டியன்களின் பொறுப்பு.

விளம்பரத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு ப்ரதேசத்திலுமுள்ள, பள்ளிக்கூடம் போகும் வயஸுள்ள குழந்தைகளின் கார்டியன்கள், அந்த ப்ரதேசத்திலுள்ள ஒரு எலிமெண்டரி ஸ்கூலுக்குக் கல்விக்காக குழந்தைகளை அனுப்பக் கடமைப் பட்டவர்கள். ஆனால் குழந்தை எந்த மதத்தைச் சேர்ந்ததோ அதற்கு மாறுபாடான வேறு மத போதனை கட்டாய பாடமாக இருக்கிற ஒரு பள்ளிக்கூடத்துக்குக் குழந்தையை அனுப்பும்படி கார்டியன்களைக் கட்டாயப் படுத்தக் கூடாது.

மேலும் பின்வரும் ஸந்தர்ப்பங்களில் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும்படி கட்டாயப் படுத்தக் கூடாது.

(1) குழந்தை இருக்கும் இடத்திலிருந்து 2 மைல் தூரத்துக்கு உள்பட்டோ, அல்லது கவர்ன்மெண்டால் தீர்மானிக்கப்பட்ட ஒரு தூரத்துக்கு உள்பட்டோ எலிமெண்டரி ஸ்கூல் இல்லாவிட்டாலும்,

(2) குழந்தைக்கு வ்யாதியோ, அங்கஹீனமோ இருந்தாலும் அல்லது ஸ்தல ஸ்தாபனத்தால் ந்யாயமான காரண மென்று ஒப்புக்கொள்ளப்பட்ட வேறு ஸந்தர்ப்பங்களிலும்,

(3) கவர்ன்மெண்டால் குறிப்பிட்ட ஒரு உத்யோகஸ்தர் குழந்தை வேறு வழியில் த்ருப்திகரமான கல்விகற்று வருகிறதென்று ஒப்புக்கொண்டாலும்,

(4) குழந்தை ஏற்கனவே எலிமெண்டரி கல்வி கற்றிருந்தாலும், எலிமெண்டரிக் கல்வியின் அளவுக்கு வேறு விதத்தில் கல்வி கற்றிருந்தாலும்,

(5) கவர்ன்மெண்டால் குறிப்பிட்ட காரணங்களின் மேல் குழந்தை பள்ளிக்கூடம் போக வேண்டிய அவச்யமில்லை யென்று ஏற்பட்டிருந்தாலும்,

கார்டியன்களைக் கட்டாயப் படுத்தக் கூடாது.

ஆஜர் கமிட்டிகள்.

சிறுவர் சிறுமிகளைப் பள்ளிக்கூடம் வரும்படி கட்டாயப்படுத்துவது ஸ்தல ஸ்தாபனங்களின் கடமையாகும். இதற்காக ஆஜர் கமிட்டிகள் ஏற்படுத்தவேண்டும்.

ஒரு கார்டியன் தகுந்த காரணங்களில்லாமல் தமது குழந்தையைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பாமலிருந்தால், அவர் மேல் ஆஜர் கமிட்டி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ப்ராது செய்யலாம்.

பிராது தக்க ஆதாரமுள்ளது என்று மாஜிஸ்ரேட்டுக்குத் தோன்றினால் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு பையனை அல்லது பெண்ணை க்ரமமாகப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும்படி கார்டியனுக்கு உத்தர விடவேண்டும். தகுந்த காரணங்களில்லாமல் கார்ட்டியன் மாஜிஸ்ட்ரேட்டின் உத்திரவுப்படி நடக்கத் தவறினால் ஆஜர் கமிட்டியார் அவர் மேல் மறுபடி வழக்குத் தொடரலாம். குற்றவாளி யென்று ஏற்பட்டால், மாஜிட்ரேட் கார்டியனுக்கு 10-ரூபாய்க்கு மேல் படாமல் அபராதம் விதிக்கலாம். இப்படி 2 அல்லது அதற்கு மேற்பட்ட தடவை தண்டிக்கப்பட்டிருந்து, பிறகு மறுபடி குற்றவாளி யென்று ஏற்பட்டால், 100 ரூபாய்க்குக் குறையாத அபராதமோ, 2-மாஸத்துக்கு மேல் படாத சிறை வாஸமோ விதிக்கப்படும்.

மதக்கல்வி.

பண உதவி பெறும் ப்ரைவேட் எலிமெண்டரி ஸ்கூலில் எந்த மதக் கல்வியாவது கற்பிக்கும்போது, பிள்ளைகள் வகுப்பில் ஆஜராக இருக்கவேண்டு மென்று இருந்து, அந்தப் பள்ளிக் கூடத்தில் வாசிக்கும் பிள்ளைகளின் கார்டியன்களில் பத்து பேர்கள், பையன்கள் மத போதனைக்கு வராமல் எலிமெண்டரி கல்வி பெற ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஜில்லா வித்யா கௌன்ஸிலுக்கு மனு செய்து கொண்டால், வித்யா கௌன்ஸிலார் அருகில் மதபோதனையைப் பற்றிய கஷ்டம் இல்லாத வேறு தக்க எலிமெண்டரி ஸ்கூல்கள் இல்லை யென்று தெரிந்தால் பின் வரும் விதமாக ஏற்பாடு செய்யவே

ண்டும். (1) மத போதனை நடக்கும் பள்ளிக்கூடத்து மானேஜருடன் மத போதனைக் காலத்தில் மனுச் செய்து கொண்ட கார்டியன்களின் பிள்ளைகள் வகுப்பில் வரவேண்டிய அவச்யமில்லையென்று ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். (2) அது முடியாவிட்டால், ஷை கார்டியன்களுடைய பையன்கள் இருக்குமிடத்துக்கு 2 மைலுக்கு உள்பட்டோ, அல்லது வேறு குறிப்பிட்ட தூரத்துக்கு உள்பட்டோ பப்ளிக் பள்ளிக்கூடம் ஏற்படுத்தும்படி ஸ்தல ஸ்தாபனத்துடன் ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஒப்பந்தம் செய்து கொள்ள இஷ்டப்படாத பள்ளிக்கூடத்துக்கு இந்தக் காரணத்தால் க்ராண்டுகொடுப்பது நிற்காது.

இந்தச் சட்டம் எந்தப்ரதேசத்துக்கு எந்தத் தேதியில் அமுலுக்கு வரவேண்டுமென்பதை ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னர் விளம்பர மூலமாகத் தெரிவிப்பார்.

எலிமெண்டரி கல்வி என்பது என்ன? எலிமெண்டரி ஸ்கூல் என்பது என்ன? என்பவைகளைப் பற்றியும், வித்யா கௌன்ஸிலில் ப்ரஸிடெண்டைத் தெரிந்தெடுக்கும் முறையைப்பற்றியும், வித்யா கௌன்ஸிலுக்கு ஸ்தலஸ்தாபனங்கள் எத்தனை மெம்பர்கள் தெரிந்தெடுத்து அனுப்பவேண்டுமென்பதைப் பற்றியும், ஸ்கூல்களின் அங்கீகாரம், அவைகளுக்குப் பண உதவி இவைகளைப் பற்றியும், ஆஜர்கமிட்டியின் நியமனத்தைப் பற்றியும் கவர்ன்மெண்டார் ரூல்கள் செய்யலாம்.

LABCUR COMMSSIONER.

வேலையாட்களை கவனிக்கும் கமிஷனர்.

1916-ம் வர்ஷத்தில் சென்னை கவர்ன்மெண்டார் தாழ்ந்த வகுப்பார்களின் நிலைமையை உயர்த்த என்ன செய்யப்பட்டுவருகிறது, இன்னும் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். அந்த ஆராய்ச்சி முடியுமுன் 1919-ம் வர்ஷம் மார்ச் மாஸத்தில் அவர்கள் மிஸ்டர் பாடிஸனை தாழ்ந்த வகுப்பார்களின் நிலைமையை உயர்த்த வேண்டியவைகளைச் செய்யும்படி நியமித்தார்கள். ஆனால் அவர் இதர வேலைத் தொந்தரவால் அந்த வேலையை முற்றிலும் கவனிக்க அவகாசப்படவில்லை. அவர் செய்யவேண்டியிருந்த வேலையாவன:—தாழ்ந்த வகுப்பார்களின் பொருளாதார நிலைமையை அறிதல், அவர்களுடைய நிலைமையை உயர்த்த ப்ரேரணைகள் தெரிவித்து இது விஷயமாய் முயன்று வரும் பரோபகார ஸங்கங்களுக்கு வேண்டிய பொருள் உதவி கவர்ன்மெண்டினிடமிருந்து கிடைத்து வருகிறதா என்றுபார்ப்பது, தாழ்ந்த வகுப்பார்களிடம் கல்வியைப் பரவச்செய்தல், அவர்களுக்குக் குடியிருக்க வீடுகள், கிணறுகள் ஏற்படுத்திக் கொடுத்தல், கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்துதல், அவர்கள் வேலைசெய்யும் நிபந்தனைகளை உயர்த்துதல் ஆகிய இவைகளாகும்.

இந்த நோக்கங்களை அனுஸரித்து, தஞ்சாவூரிலும் கோதாவரி ஜில்லாவிலும் இரண்டு டெபுடி கலெக்டர்கள் இந்த வேலைக்காக நியமிக்கப்பட்டார்கள். அநேக க்ராமங்களில் மனைகள் வாங்க ஏற்பாடு நடந்துவருகிறது. வீடுகள் வாங்குவதற்கு ஸௌகர்யம் செய்துகொடுப்பதற்காக 48 கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தாழ்ந்த வகுப்பார்களிடம் கல்வி, ஸுகாதாரம் இவைகளை அதிகமாக அபிவ்ருத்திசெய்ய முடியவில்லை. இதற்குக்காரணம் இவைகளுக்குப்பணம் அதிகமாக அகப்படாமையே.

ஆனால் இதுவரை தாழ்ந்த வகுப்பார்கள் என்று பொதுவாய்ச் சொல்லப்படும் பஞ்சமர்களுடைய நிலைமையைப்பற்றித்தான் கவர்ன்மெண்டார் கவனித்துவந்தார்கள். இது போதாதென்று எண்ணி அவர்கள் எல்லா தாழ்ந்த வகுப்பார்களுடைய நிலைமையையும்; அதாவது பொதுவில் வேலைசெய்பவர்கள் எல்லாருடைய நிலைமையையும் உயர்த்தவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்தியா இப்போது ஸர்வதேச வேலையாள் ஸங்கத்தில் ஒரு மெம்பராக இருப்பதால், அன்ய தேசத்தார் நம்மைக் குறை கூறாமலிருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ளவே

ண்டியதாகிறது. இதை உத்தேசித்து மிஸ்டர் மாண்டேகு வேலையாள்களைப்பற்றி அதிகம் கவனிக்கவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். இதை உத்தேசித்து சென்னை கவர்ன்மெண்டார் முன்பு தாழ்ந்த வகுப்பார்களுக்கென்று நியமித்த உத்யோகஸ்தருக்கு பொதுவாக வேலையாட்களின் நிலைமையைப்பற்றி கவனிக்கும் வேலைகளைக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். அவருக்குக் கொடுக்கப்படும் வேலைகளைக் கீழே குறிப்பிடுகிறோம்.

நமது ராஜதானியில் ஏஜென்ஸி ப்ரதேசங்களிலும் இதர இடங்களிலும் அநேக பூர்விக ஜாதிகள் இருக்கிறார்கள். அவர்கள் திடீரென்று நாகரீகமுள்ளவர்களோடு பழகும்போது அவர்களுக்குச் சில கெடுதிகள் ஏற்படக்கூடும். ஆகையால் அவர்களுடைய நிலைமையை முதலில் உயர்த்தி நாகரிகத்தில் கலக்கத் தயார்செய்யவேண்டும். ஏஜென்ஸி ப்ரதேசங்கள் நிர்வாக விஷயமாகத் தனியாக கவனிக்கவேண்டிய விஷயமாகையால், அவை ஒழிந்த இதர இடங்களிலுள்ள பூர்விக ஜாதியாரின் அபிவ்ருத்தி விஷயம் கமிஷனர் வசம் விடப்படும். உதாரணமாக இப்போது கர்நூல் ஜில்லாவில் நல்லமலையில் செஞ்சு ஜாதியாரிடம் கல்வியும் மதுபான விலக்கும் இதர நன்மைகளும் பரவச்செய்வதற்காக ஒரு உத்யோகஸ்தர் நியமிக்கப் பட்டிருக்கிறார். இவை போன்ற வேலைகளை இனி கமிஷனர் கவனிக்கவேண்டும்.

இன்னொரு விஷயம் குற்றம் புரியும் வகுப்பாரின் முன்னேற்றம். அவர்களை நல்வழிக்குக் கொண்டுவருவதற்காக ஒரு சட்டம் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கிறது. இப்போது அவர்களை தனியான ப்ரதேசங்களில் குடியேறச்செய்து, அவர்களை வ்யவஸாயத்தில் பழக்கிவர முயற்சி நடந்துவருகிறது. இந்த வேலைகளை இனி கமிஷனர் கவனித்து வருவார்.

தொழில் சாலைச் சட்டம் ஸம்பந்தமான வேலைகளை இதுவரை ரெவின்யூ போர்டார் கவனித்து வந்தார்கள். அந்த வேலைகளை இனி கைத்தொழில் டிபார்ட்மெண்ட் கவனித்து வரவேண்டுமென்று இந்திய கைத்தொழில் கமிஷன் சிபார்சு செய்தது. ஆனால் பொதுவாய் வேலையாட்களை கவனிக்க கமிஷனர் என்று ஒரு உத்யோகஸ்தர் நியமிப்பதால், அவரே இதை கவனிக்க வேண்டுமென்றும், தொழில் சாலையிலுள்ள வேலையாட்களின் ஸௌகர்யத்தை கவனிக்கும் பாக்டரி இன்ஸ்பெக்டர் அவர் கீழிருந்து வேலை செய்யவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

இவைகளோடு, கூலி விகிதக் கணக்குகள் தயார்செய்தல், கூலியாட்கள் இதர இடங்களுக்குக் குடியேறிப்போதலை கவனித்தல், வேலையாட்களின் ஸங்கங்கள், கோவாபரேஷன் முறையில் விடுகட்டுதல் முதலிய வேலைகளையும் கமிஷனர் கவனிக்கவேண்டும்.

மேலே சொன்ன கமிஷனர் கவனிக்கவேண்டிய வேலைகள் அதிகமாக இருக்கிறதால், அவருக்கு உதவியாக ஒரு டெபுடி கமிஷனரும் நியமிக்கப்படுவார். மேலும் தாழ்ந்த வகுப்பார்களுக்குக் கோவாபரேஷன் முறையில் வீடு கட்டுதல், ஸுகாதாரம் முதலியநன்மைகளைச்செய்து கொடுக்கச் சில டெபுடிகலெக்டர்கள் உதவியாக நியமிக்கப் படுவார்கள். இவர்களுக்கு அஸிஸ்டெண்ட் கமிஷனர் என்ற பெயர் கொடுக்கப்படும்.

வேலையாள் கமிஷனருக்கு வேண்டியபோது ஆலோசனை சொல்ல ஒரு ஆலோசனை ஸபை ஏற்படுத்தப்படும்.

PURE WATER FOR DOMESTIC PURPOSES.
வீட்டு உபயோகத்துக்கு சுத்த ஜலம்.

ஜலம் பல பொருள்களை ஸுலபமாகக் கரைத்துக் கொள்ளக் கூடிய தாகையால், அது சுத்தமாகக் கிடைப்பது அரிது. அதில் பற்பல கன பதார்த்தங்களும் த்ரவ பதார்த்தங்களும் வாயுக்களும் கரைந்து விடும். சில பதார்த்தங்கள் கரையாவிட்டாலும், ஜலத்தில் கலந்து நிற்கின்றன. தாது வர்க்கப் பொருள்களேயன்றி தாவர வர்க்கத்துப் பொருள்களும் அழுகி மாறுபட்டு ஜலத்தில் கரைந்தும் கரையாமலும் ஜலத்தில் சேர்ந்திருக்கின்றன. பாக்டீரியாக்களும் ஜலத்தில் ஸுலபமாய்ச் சேர்ந்து வ்ருத்தியாகின்றன.

ஜலத்தின் மூலமாக அநேகவ்யாதிகள் ஜனங்களிடம் பரவக் கூடுமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் முக்யமான சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம். மலச்சிக்கல் குல்மம், அதிஸாரம், வயிற்றுக் கடுப்பு, காலரா, டைபாய்ட் ஜ்வரம், எண்டரிக் ஜ்வரம், நாக்குப் பூச்சிகள், நரம்புச் சிலந்தி முதலியவை.

இப்படி ஜலத்தால் பல வ்யாதிகள் பரவக்கூடுமாகையால், சுத்தமான ஜலத்தையே உபயோகிக்க வேண்டியது ரொம்ப அவச்யமாகிறது.

ஜலாதாரங்களை அவைகளின் சுத்தத்தைக் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கலாம். சரியானபடி சேகரம் செய்த மழை ஜலம், ஆழ்ந்த ஊற்று நீர், ஆர்டீஷியன் கிணற்று நீர், ஆழ்ந்த கிணற்று நீர் ஆகிய இவைகள் ரொம்ப சுத்தமானவை. மேட்டுப்பாங்கான இடங்களிலிருந்து வரும் ஜலம், சாகுபடியாகும் இடங்களிலிருந்து வரும் ஜலம், சேகரித்து வைக்கப்பட்ட மழை ஜலம் ஆகிய இவைகள் இரண்டாந்தரமாகும். இவைகள் ஸந்தேகப்படக்கூடியவை. சாக்கடை ஜலம் சேரும் ஆற்று நீர், ஆழமில்லாத கிணற்று நீர், நிலத்தில் மேல் மட்டத்தில் உள்ள ஊற்று நீர் ஆகிய இவைகள் மூன்றாந்தரமாகும். இவைகளை உபயோகிக்கக் கூடாது.

குடிப்பதற்கு யோக்யமான ஜலத்தில் இந்த்ரிய வஸ்துக்கள் கொஞ்சமும் இருக்கக் கூடாது. அதில் கெடுதலுண்டு பண்ணும் உலோகங்கள் ஸம்பந்தப்பட்ட பொருள்கள் கரைந்திருக்கக் கூடாது. சுண்ணாம்புக் கல் ஸத்து கரைந்திருப்பதுங் கூடாது. முதல் வகையில் சொன்ன ஜலங்கள் இந்தக் குறைகளில்லாதவை. குடிப்பதற்கு யோக்யமானவை.

இப்படிப்பட்ட நல்ல ஜலம் சில இடங்களில்தான் கிடைக்கும். இதர இடங்களில் நல்ல ஜலம் கிடைப்பது கஷ்டம். பட்டணங்களில் ஜல வஸதி ஏற்பாடு இருப்பதாலும், அது சுத்தமாகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமாகையாலும், இதர இடங்களில் சுத்த ஜலம் அடைவதைப் பற்றி இங்கு எழுதுவோம். அங்கே அதிக செலவில் ஜலாதாரங்களை சுத்தம் செய்வதென்பது முடியாது. சில பட்டணங்களிலும் இன்னும் ஜல வஸதிக்கான ஏற்பாடு செய்யப்படவில்லை.

ஜலத்தை சுத்தம் செய்து உபயோகிக்க இரண்டு தொட்டிகள் வேண்டும். ஒவ்வொன்றும் 3 முதல் 3½ அடி உயரமும், 1 முதல் 1½ அடி சுற்றளவும் உள்ளதாயிருக்கவேண்டும். ஒன்று துத்தநாகம் பூசிய இரும்புத்தகட்டாலும், மற்றது சுத்தமான செம்புத்தகட்டாலும் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒரு தொட்டியில் அடியிலிருந்து 9 அங்குல உயரத்தில் வையர்காஸ் (Wire gauze) என்று சொல்லப்படும் கம்பிச் சல்லடைத்துண்டை அமைக்கவும். 4½ அங்குல உயரத்தில் தொட்டியின் பக்கவாட்டில் ஒரு த்வாரம் செய்து அதன் வழியாக ஒரு குழாயை உள் செலுத்தி சல்லடையைத் தாண்டி தொட்டியின் மேற்பக்கத்திலிருந்து அரையடி ஆழம் வரையில் கொண்டுபோக வேண்டும். சல்லடையின் மேல் 3 அங்குலகனத்துக்கு கல்லைப் பரப்பவேண்டும். கல் சுக்கன் கல்லாகவாவது ஸ்படிகக் கல்லாகவாவது இருக்க வேண்டும். கல்லின்மேல் இரண்டடி கனத்துக்கு பொடிமணல் போடவேண்டும். மணலின்மேல் சுடாத சுண்ணாம்புக் கல் கொஞ்சம் போடவேண்டும். இதனால் ஜலம் ஊற்றும்போது மணல் கலைந்து போகாமல் இருக்கும். மேலும்ஜலம் ம்ருதுவடையும். குழாயை வீட்டு ஜலம் வரும் குழாயுடன் ஸம்பந்தப்படுத்தி விட்டால், ஜலம் குழாய்வழியாக உயரப்போய் வழிந்து முதலில் சுண்ணாம்புக் கல்லில் தங்கிப் பிறகுமெல்லிய மணல் வழியாகக் கீழேபோய் பருமணலைத் தாண்டி கம்பிச் சல்லடைக்குக் கீழே விழும். குழாய் ஜலமில்லாத இடங்களில் தொட்டியின் நடுவில் குழாய் வைக்கவேண்டியதில்லை. மற்றபடி வையர்காஸ், கல், மணல், இவைகள் போடவேண்டும். கீழேவிழும் ஜலத்தை வெளியே கொண்டுவர தொட்டியின் அடியில் ஒரு த்வாரம் செய்து அதில் ஒரு சிறிய குழாயைப் பொருத்தி அதன் மூலமாக இரண்டாவது தொட்டியில் விழச் செய்யவேண்டும். இரண்டாவது தொட்டியில் இப்படி சுத்தம் செய்த ஜலம் இருக்குமாகையால் அதை எப்போதும் மூடிவைத்திருக்க வேண்டும். சுத்த ஜலத்தை எடுத்து உபயோகிக்க, அந்தத் தொட்டியில் மூடித் திறக்கக் கூடிய ஒரு டாப் (Tap) குழாய் ஒன்று அமைக்கவேண்டும். முதல் தொட்டியையும் மூடிவைத்திருக்க வேண்டியது அவச்யம். தொட்டிகளை சுத்தம் செய்யும்போதுதான் திறக்கலாம். மாஸத்துக்கு ஒரு தடவை மண்ணையும் சிறுகற்களையும் வெளியிலெடுத்து சுத்தம் செய்யவேண்டும். வாரத்துக்கு ஒருதடவையோ இரண்டு வாரத்துக்கு ஒரு தடவையோ சுண்ணாம்புக் கற்களை மாற்றவேண்டும்.

இந்த மாதிரி வடிகட்டும் கருவி செய்ய 20 அல்லது 30 ரூபாய் செலவழியும். 10-வர்ஷத்துக்கு இது உழைக்கும்.

இந்தச் செலவும் செய்ய முடியாதவர்கள் ஜலத்தைக் காய்ச்சி 24 மணிநேரம் செப்பு பாத்ரத்தில் ஊற்றி வைத்திருந்து பிறகு குடிக்க உபயோகிக்கலாம். இல்லாவிட்டால் காய்ச்சி விட்டு, ஆறவைத்தாவது குடிக்கவேண்டும்.

ஜலத்தைக் காய்ச்சுவதால் எல்லா க்ருமி ராசிகளும் இறந்து போகின்றன. ஜலம் சொதித்தால் பாக்டீரியாக்கள் உயிருடன் இருக்க முடியாது. ஆனால் ஜலத்தை சுடவைப்பதில் பயனில்லை. அது தளதள வென்று கொதிக்கவேண்டும்.

DISEASES AND CONSTITUTION OFTHE BODY.

வ்யாதிகளும் தேக அமைப்பும்.

தொற்று வ்யாதிகள் பரவியிருக்கும் காலத்தில் சிலருக்கு வ்யாதி சீக்ரமாக வருகிறது. சிலருக்கு மரணம் நேரிடுகிறது. சிலருக்கு வ்யாதி தாமஸித்து உண்டாகிறது. சிலருக்கு வ்யாதி வருவதேயில்லை. சிலர் வ்யாதி நேரிடக்கூடிய நிலைமையில் அதிகமாக இருந்தபோதிலும் வ்யாதிக்கு ஆளாவதில்லை.

இதற்குக் காரணம் அவர்களுடைய தேக நிலைமை வ்யாதியை வரவொட்டாமல் தடுக்கக் கூடியதாக இருப்பதே. அதெப்படி என்பதை விவரிக்கிறோம். வ்யாதி வந்தபோது தேகம் ஒரு போர்க்களமாக இருக்கிறது. போர் ஸாதாரணப் போர்போலவே ரொம்ப கடுமையாக நடக்கிறது. சென்ற ஐரோப்பிய யுத்தத்தில், தேசியத் திறமையும், ராணுவ முன்ஜாக்ரதையும், இதர தேசங்களின் உதவியும் எப்படி உபயோகமாக இருந்தனவோ அப்படியே தேகத்திலுள்ள வ்யாதி நிவாரண அம்சங்களும் உதவியாக இருக்கின்றன.

வ்யாதி உற்பத்திக்கு பாக்டீரியா என்றும் வ்யாதி க்ருமிகள் என்றும் சொல்லப்படும் பூச்சிகள் முக்ய காரணங்களாக இருக்கின்றன. அப்படியே வ்யாதி நிவாரணத்திலும் அவை உபயோகமுள்ளவைகளாக இருக்கின்றன.

வ்யாதி க்ருமி தேகத்தில் புகுந்ததும் தேகத்திலுள்ள ரக்தமும், ரக்தத்திலுள்ள ஜீவ அறைகளும் வ்யாதி க்ருமியைத் தடுக்க முன் வருகின்றன. இப்படி வருவதற்குக் காரணம் ஜீவராசிகளின் தேகத்தில் இயற்கையாகவே வ்யாதியைத்தடுக்க ஒரு சக்தியிருப்பதே. அந்த சக்தியால் தூண்டப்பட்டே அவைகள் வ்யாதியைத் தடுக்க முன் வருகின்றன. இப்படி தேகத்தில் அந்த சக்தி குறையாமலிருக்குமானால் அதிகக் கடுமையாக இராத வ்யாதிகளை தேகம் தடுத்து விடும்.

மேற்சொன்னபடி ரக்தமும் வேறுசில ஜீவ அறைகளும் வ்யாதியைத் தடுத்துக் கொண்டிருக்கையில், சில ஜீவ அறைகள் வ்யாதி க்ருமிகளின் கெடுதியை மாற்றக்கூடியவையான சில வகைப் பொருள்களை உண்டாக்குகின்றன. இந்தப் பொருள்களும் வ்யாதி க்ருமிகளும் ப்ரமாதமான யுத்தம் செய்கின்றன. எந்தக் கக்ஷி ஜெயிக்குமென்பது எதற்கு பலம் அதிகமென்பதையும், எது அதிக காலம் விடாமல் எதிர்த்துப் போராடுமென்பதையும் பொறுத்திருக்கிறது.

இந்த வ்யாதி யுத்தத்தில் முதல் முதலில் போருக்குக் கிளம்புவது ஒய்ட் கார்ப்பஸின் என்னும் ஜீவ அறைகளாகும். அவைகள் ரக்தத்தில் இருக்கின்றன. அவைகள் தேகத்துக்கு ஆபத்துத் தோன்றிய உடனேயே கெடுதியைத் தடுக்க தாமாகவே முயலுகின்றன. அவைகள் வலுவுள்ளவைகளாக இருப்பதால் தான் தேகத்துக்கு இயற்கையாகவே வ்யாதியைத் தடுக்கும் சக்தி ஏற்படுகிறது. இந்தசக்தி இயற்கையாகவே தேகத்தில் இருப்பதாகும். தேகத்தில் செயற்கை சக்தி ஏற்படும்படியும் செய்யலாம். சில வ்யாதிகளை வரவொட்டாமல் தடுக்க வாக்ஸைன் என்னும் மருந்தை ரக்தத்தில் செலுத்துகிறார்கள். உதாரணமாக டைபாய்ட் என்னும் ஜ்வரத்தில் அதற்கேற்ற வாக்ஸைனை ரக்தத்தில் செலுத்துகிறார்கள். இவைகளை வ்யாதி வருவதற்கு முன்னாலேயே உபயோகிக்கிறார்கள்.

அம்மைபோன்ற வ்யாதிகள் வந்து தப்பினவர்களுக்கும் இவ்வித சக்தி ஏற்படுகிறது.

இப்படி தேகத்தில் புதிதாக உண்டான சக்தி இருவகைப்படும். ஒன்று வெகுகாலம் தேகத்திலேயே இருக்கிறது. மற்றது ஸ்வல்ப காலமிருந்து பிறகு தேகத்திலிருந்து வெளிப்படுத்தப்படுகிறது. முதல் வகைக்கு டைபாய்ட் வாக்ஸினையும், அம்மைவந்து தப்பினதால் ஏற்பட்ட சக்தியையும் சொல்லலாம்.

டிப்தீரியா வாக்ஸைன் என்னும் வகைமருந்து சில காலமே தேகத்திலிருக்கும். அதுவும் அது போன்ற மருந்துகளும் இரண்டாவது வகையாகும்.

இதுவரை தேகத்தில் இயற்கையாகவே உள்ள, வ்யாதியைத் தடுக்கும் ஸாதனங்களைச் சொன்னோம். இனி வெளியிலிருந்து தேகத்தில் ப்ரயோகிக்கப்படும் ஸிரம் என்னும் வ்யாதி நிவாரணஸாதனங்களைப்பற்றிச் சொல்லுவோம். முன்பு சொன்ன வாக்ஸைன்கள் வ்யாதியில்லாத காலத்தில் வ்யாதி வராமல் தடுக்கும் முன் ஜாக்ரதை முறைகளாகும். வாக்ஸைன் என்பது செத்துப்போன வ்யாதி க்ருமிகளாகும். அவைகளை தேகத்தில் செலுத்தினதும் வெள்ளைக் கார்ப்பஸில்கள் வ்யாதி க்ருமிகளை உயிருள்ளவை என்று எண்ணி அவைகளை எதிர்க்க முன்வருகின்றன. இதனால் அவைகள் வ்யாதிப் போருக்குத் தயாராக ஆகின்றன.

ஸிரம் ப்ரயோகத்திலோ என்றால், ஸிரம் என்பது வ்யாதிப்பட்ட ம்ருகத்தின் தேகத்தில் வ்யாதியை நிவாரணம் செய்யக்கூடியதாய், உண்டான விஷ நிவாரண மருந்தாகும். ஒரு குதிரையின் தேகத்தில் ஒரு வ்யாதியின் விஷத்தை ப்ரயோகிப்பார்கள். அந்த வ்யாதியின் வேகத்தால் குதிரையின்தேகத்தில் வ்யாதி நிவாரண அம்சங்கள் உண்டாகும். அந்த அம்சங்கள் ஆண்டி டாக்ஸின் எனப்படும். அவைகளுக்குப் பொதுவாய் ஸிரம் என்று பெயர். அந்த ஸிரத்தை அந்தக் குறிப்பிட்ட வ்யாதிகண்டவர்களுடைய ரக்தத்தில் ப்ரயோகித்தால், தேகத்தில் ஏற்கனவேயுள்ள வ்யாதி நிவாரண சக்திக்கு உதவியாக இருந்து வ்யாதியைப்போக்கடிக்க ஸாதகமாக இருக்கும். இந்த அன்ய உதவி இருக்கும்போது தேகத்தில் வ்யாதி நிவாரண ஸாதகங்கள் இன்னும் அதிகமாக உண்டாகின்றன. இதனால்வ்யாதிமுற்றிலும் ஸ்வஸ்தமாகிறது.

PROPAGATION OF FLIES

ஈக்களின் ஸந்ததி வ்ருத்தி

ஒரு ஈ பிறந்தது முதல் 70 நாள் ஜீவிக்கிறது. அது இறக்குமுன் அதனால் எத்தனை ஈக்கள் உண்டாகின்றன வென்பதைப்பற்றி மிஸ்டர் ஆர். கோபாலய்யர் 'தமிழர்நேச'னில் பின்வருமாறு எழுதுகிறார்.

பெண் ஈ குறைந்தது 70 நாள் ஜீவிக்கிறது என்றும், இடப்படும் முட்டைகளெல்லாம் பொரித்து புழுவாகிறதென்றும், பொரிக்கும் முட்டைகளில் பாதி பெண் ஈக்களாக ஆகின்றனவென்றும், பாதி ஆணாகின்றன வென்றும் நினைத்துக் கணக்கிடுவோம்.

ஒரு பெண் ஈப்புழு வளர்ந்து ஈயாகி தானும் முட்டையிட 22 நாள் செல்லும். பிறகு வாழ் நாட்களில் மிகுந்திருக்கும் 48 நாட்களில் 4 தடவை முட்டையிடுகிறது. ஆக தான் முட்டையிலிருந்து வெளிவந்து 22-ம் நாள் முதல் குவியல் முட்டைகள் 150-ம், 34 ம் நாள் 2-ம் குவியல் முட்டைகள் 150-ம், 46-ம் நாள் 3-ம் குவியல் முட்டைகள் 150-ம், 58-ம் நாள் 4-ம் குவியல் முட்டைகள் 150-ம், 70-ம் நாள் 5-ம் குவியல் முட்டைகள் 150-ம் ஆக 5 × 150=750 பெண்பிள்ளைகளை தான் இறக்குமுன் பெறும்.

இந்த முட்டைகளில் 58, 70-ம் நாளில் இடப்பட்ட 4வது, 5-வது முட்டை குவியல் வெடித்து வளர்ந்து முட்டை யிடுவதற்கு முன் தாய் இறக்குமாதலால், அவைகளின் பெண் பிள்ளைகள் கணக்கில் சேரா.

46-வது நாளில் மூன்றாவது குவியலாக இடப்பட்ட 150 முட்டைகளில் பெண் புழுக்களாக வெடிக்கும் 75 புழு 22 நாள் வளர்ந்து 68 நாளில் 75×150 முட்டைகளிடும். இவை தாயாகிய முதல் ஈக்கு பேரன் பேர்த்தியாகும்.

34 ம் நாளில் தாய் ஈயினால் 2-ம் குவியலாக இடப்படும் 150 முட்டைகளில் 75 பெண் ஈக்களாகி 22 நாள் வளர்ந்து 56-வது நாளில்

150 முட்டைகளும் 68-ம் நாளில் 150 முட்டைகளுமிடும்.



With Acknowledgments to "*Tamilians Friend*"

ஒரு பெண் ஈயின் இனப்பெருக்கை காட்டும் படம்.

பெண், பிள்ளை		750
பேரன், பேர்த்தி	3×75×150+75×150	67500
கொள் பேரன், கொள் பேர்த்தி	75×150×75	[8,43,750
மொத்தம்		9,12,000

இவை தாய் ஈயின் பேரன் பேத்திகளாகும். இம்முட்டைகள் வெடித்து வளர்ந்து முட்டையிடும் முன்னமே தாய் இறக்குமாதலால் இவைகளின் பிள்ளை பெண்கள் கணக்கில் சேரா.

22-ம் நாளில் இடப்படும் முதல் குவியலாகிய முட்டைக் குவியல்கள் 44-ம் நாளில் ஒரு குவியலும், 66-ம் நாளில் ஒரு குவியலும் இடும். இவைகளெல்லாம் பேரன் பேர்த்தியாகும்; ஆகவே 6×75×150=67,500 பேரன் பேர்த்திகள் ஆகின்றன.

தாய் ஈயினால் 22-ம் நாளில் உண்டான முட்டைகள் வளர்ந்து ஈக்களாகியிடும் 3 முட்டைக் குவியல்களில் முதலாக 44-ம் நாளில் இடப்படும் முட்டைக் குவியல்களுக்கே பாட்டி ஈ இறப்பதற்கு முன் முட்டையிடக் காலம் இருக்கும். இவைகளில் பாதி பெண் ஈக்களாக வளர்ந்து 66-ம் நாளில் ஒவ்வொன்றும் 150 முட்டைகளாக 75×75×150 கொள் பேரன் கொள் பேர்த்தி முட்டைகளிடும்.

இக்கணக்கு முழுவதையும் சுருக்கமாகப் படத்தில் காட்டியிருப்பதைக் காண்க.

இதனால் 70 நாள் வாழும் ஒரு பெண் ஈக்கு 750 பிள்ளை பெண்களும், 67,500 பேரன் பேர்த்திகளும், 8,43,750 கொள்பேரன் பேர்த்திகளும் உண்டாகும்.

இவ்விதமே ஈக்கள் எல்லாக் காலத்திலும் விருத்தியாகி வருகிறதென்று இதனின்று ஊகிக்கக்கூடாது. காலமும், இடமும், உணவும் சரிவர நேருமாயின் மிக வேகமாய் விருத்தியாகும் என்பதைக் காண்பிக்கவே இவ்விதம் சொல்லப்பட்டது.

இவ்வளவு வேகமாய் அதிகரிப்பதினாலேயே நாமும் மற்ற ஜந்துக்களும் எவ்விதமாய் ஈக்களை அழித்தாலும் அவற்றின் தொகை குறைவுபடுவதாய்ச் சிறிதும் தோன்றவில்லை.

MUSK AND MUSK DEER.

கஸ்தூரியும் கஸ்தூரி மானும்

கஸ்தூரி என்னும் உயர்ந்த வாஸனைப்பொருள் அப்பெயர்கொண்ட ஒரு வகை மானிலிருந்து கிடைக்கிறது. கஸ்தூரி மான் மத்ய ஆசியாவிலும் சீனாவிலும் ஹிமாலய ப்ரதேசங்களிலும் வஸிக்கிறது. அது ஸாதாரணமாக 8,000 அடி உயரம் முதல் 14,000 அடி உயரம் வரையுள்ள மலை ப்ரதேசங்களில் காணப்படும்.

அது ஸுமார் 20 அங்குலம் உயரமுள்ளது. காதுகள் நீளமுள்ளவை. கால்கள் நீளமாக இருக்கும். முன்னங்கால்களை விடப் பின்னங் கால்கள் சற்று நீளமானவை. அதற்கு இதர மான்களுக்கு இருப்பதுபோல் கொம்புகள் கிடையா. ஆண் கஸ்தூரி மான்களுக்கு மாத்ரம் கடைவாய்ப் பற்கள் நீண்டு சிறு தந்தங்கள்போ லிருக்

கும். தந்தங்கள் மூன்று நான்கு அங்குல நீளமிருக்கும்.

கஸ்தூரி மான் கூட்டமாக வஸிக்கிறதில்லை. தனியாகவே காலங் கழிக்கிறது. சில ஸமயங்களில் ஆணும் பெண்ணுமாய் சேர்ந்து வஸிக்கும். அதன் தேகம் ரொம்ப உறுதியானது. ரொம்ப அபாயகரமான இடங்களிலும் பயமில்லாமல் நடந்துபோகும். அது புல், பாசி, இலைகள், பூக்கள் முதலியவைகளைத் தின்று வளரும்.

ஜனவரி மாஸத்தில் மான்கள் ஸந்ததி வ்ருத்திக்கு ஆரம்பிக்கின்றன. அக்காலத்தில் ஆண் மான்களின் அடிவயிற்றில் ஒருவகைப் பையில் கஸ்தூரி உண்டாகிறது. இதர காலங்களில் கஸ்தூரி அதிகமாக உண்டாவதில்லை. கஸ்தூரி அப்போது திரிந்துபோன ரத்தம்போல் எண்ணெய்ப் பசையுள்ளதாயும் அதிக வாஸனையுள்ளதாயும் இருக்கும். வர்ஷம் ஆக ஆக கஸ்தூரி அதிகமாகச் சேரும்.

கஸ்தூரி மான் காடுகளில் யதேச்சையாய் வஸித்து வருவதாலும், அது மனிதர்களைக் கண்டு ஓடிவிடுவதாலும், வேடர்கள் அதைக் கண்ணிவைத்துப் பிடிக்கிறார்கள். சில ஸமயங்களில் நாய்களைக் கொண்டும் பிடிக்கிறார்கள். துப்பாக்கியால் வேட்டையாடுவது முண்டு.

கண்ணிவைத்துப் பிடிக்கிறவர்கள் மான்கள் வருகிற இடங்களைக் கண்டறிந்து, அங்கே கண்ணிவைப்பார்கள். அவைகள் இலைகளையும் புல்களையும் தின்னும் ஸ்வபாவத்தைக்கொண்டு, எந்த இடங்களில் அவைகள் வருவது வழக்கம் என்பதை யறிந்து கொள்ளுகிறார்கள்.

மான்களை எப்போது வேண்டுமானாலும் வேட்டை யாடலாமென்றாலும் மழை காலத்திலும் இலையுதிர் காலத்திலும் தான் கஸ்தூரி உயர்ந்ததா யிருக்குமாதலால், அப்போது மான் வேட்டை யாடுவதே ச்லாக்யம். ஆனால் விலை விஷயத்தில் இரண்டிற்கும் வித்யாஸமிருப்பதில்லை.

கண்ணிகளில் இரண்டுவகை யுண்டு. ஒருவகையில் மான்கள் இறந்துபோகின்றன. மற்ற வகையில் மான்களை உயிருடன் பிடித்துக்கொள்ளலாம். இரண்டாவது முறையில் ஒரு ஸௌகர்யமுண்டு. பெண் மான்களிடம் கஸ்தூரி கிடையாதாகையால், அவைகளை விட்டுவிடலாம். அவைகளால் மறுபடி மான் வம்சம் அழியாமல் வ்ருத்தி யடைந்துவரும். இளங் கன்றுகளில் கஸ்தூரி நன்று யிராது. ஆகையால் அவைகளைப் பெரியதாக விட்டுவிடலாம். ஆனால் எல்லாவேடர்களுமே இவ்விதம் யோசித்து நடப்பதில்லை. மேலும் மானின் இறைச்சி உயர்ந்ததாகையால், செத்தவைகளெல்லாம் உணவுக்காகுமாகையால், அநேகம்வேடர்கள் முன்யோசனையின்றி எல்லாவற்றையும் கொல்லக்கூடிய முதல் வகைக் கண்ணிகளையே உபயோகிக்கிறார்கள்.

மான்கள் மூன்றுவது வயஸிலிருந்து கஸ்தூரி உண்டாக்குகின்றன. அதன் பிறகு ஒவ்வொரு வர்ஷமும் கஸ்தூரி அதிகமாகப் பையில் சேருகிறது. மூன்றுவது வயஸு முதல் 7-வது வயஸு வரையுள்ள மான்களையே தெரிந்த வேடர்கள் பிடிக்க முயலுகிறார்கள். ஏழு வயஸுக்கு மேல்பட்ட மான்கள் அகப்படுவது அரிது. அவைகளில் கஸ்தூரி ஒன்று முதல் இரண்டு ஔன்ஸ் வரை யிருக்கும். ஏழு வயஸுக்குள்பட்ட மான்களில் அரை முதல் ஒரு ஔன்ஸ் வரைதான் கிடைக்கும். சில வயதான மான்களில் கஸ்தூரியானது காய்ந்து பாம்புத் தலைபோலிருக்கும். அது ரொம்ப உயர்ந்ததாம். விலையும் அதற்கு அதிகம்.

வர்ஷந்தோறும் கஸ்தூரி மான்கள் அதிகம் இறந்து போவதாகச் சொல்லலாம். சீனாவில் மாத்ரம் வர்ஷந்தோறும் லக்ஷம் கஸ்தூரி மான்கள் கொல்லப்படுவதாகத் தெரிகிறது.

கஸ்தூரி மானைக் கொன்றபின் கஸ்தூரியுள்ள தோல் பையை எடுத்து, பையுடனேயே அதை விற்பார்கள். பையின் மேலே மயிரடர்ந்திருக்கும். பையின் வாய் சிறிது திறந்திருக்கும்.

கஸ்தூரியில் கலப்படம் செய்வது விசேஷமாக உண்டு. கஸ்தூரிக்கு விலை அதிகமாதலால் ஸ்வல்ப கலப்படம் செய்தாலும் கிடைக்கும் லாபம் அதிகம். வேடர்களே கலப்படம் செய்யவேண்டிய பொருள்களைத் திணித்துவிடுவார்கள்.

கடலை, பார்லி, கோதுமை முதலிய தான்யங்களை அதில் அடைத்துவிடுவதுண்டு. இதனால் கஸ்தூரி கெடுவதில்லை. ஏனென்றால் கஸ்தூரியைப் பையிலிருந்து எடுக்கும்போது தான்யங்களை எடுத்துவிடலாம். ஆனால் அநேக ஸந்தர்ப்பங்களில் வறுத்த கல்லீரலையும், பொடிசெய்த மாட்டிறைச்சியையும், சில விதைகளின் பொடியையும் கலந்துவிடுவதுண்டு. அப்போது கலப்

படத்தைக் கண்டு பிடிப்பதும், பிரித்தெடுப்பதும் கஷ்டம். மேலும் கஸ்தூரி குணத்திலும் கெட்டுப்போகிறது.

சீனாவில் ஒரு ஊரில் ஒரு கம்பெனியார் போலிக் கஸ்தூரி தயார்செய்து வருகிறார்கள். அது மணத்தைத் தவிர மற்றெல்லாவிஷயங்களிலும் ஸ்வய கஸ்தூரியைப் போலவே இருக்கும். மணத்துக்காக அஸல் கஸ்தூரியை வேண்டிய அளவு கலப்பார்கள். இதை சில வ்யாபாரிகள் வாங்கி, நிறை குறைவான கஸ்தூரிப் பைகளில் திணிக்க உபயோகிக்கிறார்கள்.

கஸ்தூரி சீனாவிலும் இந்தியாவிலும் மருந்தில் உபயோகப்படுகிறது. எல்லா இடங்களிலும், வாஸனைப் பொருளாகவும் உபயோகப்படுகிறது. இதர வாஸனைகள் செய்வதில் உபயோகித்தால், வாஸனைகள் வெகுகாலம் உபயோகத்துக்கு வரும்.

கஸ்தூரி மானில் முக்யமான பாகம் கஸ்தூரிதான் என்றாலும், மானின் இதர பாகங்களும் உபயோக முள்ளவைகளே. அதன் தோலைப் பதனிட்டால் ம்ருதுவான தோல் கிடைக்கும். தோலிலுள்ள மயிர் மெத்தை, தலையணைகளுக்கு அடைக்க உபயோகப்படுகிறது. அதன் இறைச்சி நல்ல உணவாகுமாம்.

LEATHER FROM MARINE ANIMALS.

கடல் ப்ராணிகளிலிருந்து தோல்.

தற்காலம் ஆடுமாடுகளின் தொகை குறைந்துபோயிருப்பதாலும், தோல் அநேக வேலைகளில் உபயோகப்படுவதாலும் தோலுக்கு அதிக க்ராக்கி ஏற்படுமென்று தெரிகிறது. அமெரிக்காவில் இப்போது தோலின் விலை ரொம்ப ஏறியிருக்கிறது. அங்கே வேலைகளுக்குப் போதுமான அளவு தோல் கிடைக்கவில்லையாம். இதர மேல்நாடுகளிலும் தோல் குறைவாகவேதான் கிடைக்கிறதாம். அமெரிக்கர்கள் தோலுக்கு ஆடுமாடுகளை நம்பி யிருப்பதில் பயனில்லையென்று எண்ணி கடல் ப்ராணிகளின் தோல்களைப்பதனிட்டு ஜோடு முதலிய தோல்ஸாமான்கள் செய்யலாமா என்று ஆலோசித்து வருகிறார்கள். ந்யூயார்க்கில் இதற்காக ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது, தோல் எடுக்க உதவும் மீன் முதலிய நீர்ப்ராணிகள் அநேகம் இருக்கின்றன. பார்ப்பஸ் என்ற ஜாதி மீனிலிருந்து நல்ல தோல் கிடைக்குமாம். இங்கிலண்டில் வெகுகாலமாக வெள்ளைத் திமிங்கலம் என்று சொல்லப்படும் பெலுகா என்னும் கடல் ப்ராணியிலிருந்து நல்ல தோல் தயார்செய்து வருகிறார்கள். அந்தத் தோல் ஸாதாரணமாக 18 அடி நீளமும் 10 அல்லது 12 அடி அகலமும், உள்ளது. யந்த்ரங்களுக்கு பெல்ட்செய்யவும் ஜோடுகள் செய்யவும் உபயோகப்படுகிறதாம். பெலுகா என்னும் திமிங்கலம் வட அமெரிக்காவின் வடக்குப் பாகங்களிலுள்ள கடல்களில் ஏராளமாக இருக்கிறது.

சென்ற சிலகாலமாக, சுறாமீன், ரே, டாக்பிஷ், ப்ளாக்பிஷ், முதலிய மீன்களிலிருந்து தோலெடுத்து, பதனிட முயன்றார்கள். ஆனால் தோலைப் பதனிட சுண்ணாம்பு ஜலத்தில் ஊறப்போடுவதில் சில கோளாறுகள் ஏற்பட்டு பதனிட்ட தோல் நன்றாயிராமல் போயிற்று. இதனால் சில காலம் வரையில் இந்தத் தொழில் தடைபட்டுப்போயிற்று. இப்போது பதனிட சரியான முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. முன்பு மீன்தோலை எப்படித் தயாரித்தாலும் மீன் நாற்றம் கொஞ்சம் இருந்துவந்தது. இப்போது மீன் நாற்றத்தைநம் போக்க வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

500 ராத்தல் நிறையுள்ள சுறாமீனிலிருந்து 10 சதுர அடி உள்ள தோல் கிடைக்கும். இதைத்தவிர அதன் இரைப் பையிலிருந்து ஆட்டுக்குட்டித் தோலைப்போன்ற ம்ருதுவான, ஆனால் உறுதியுள்ள தோலும் கிடைக்கிறது. ரேஎன்னும் மீனிலிருந்து 100 சதுரஅடி தோல் கிடைக்கிறது. பார்ப்பஸ் என்னும் ப்ராணியிலிருந்து 10 முதல் 20 சதுர அடி உள்ள தோல் கிடைக்கும். அதன் குடலிருந்தும் ஒருவகைத் தோல் கிடைக்கறது.

இப்படி நீர் ப்ராணிகளிலிருந்து தோலையன்றி இதரப் பொருள்களும் கிடைக்கின்றன. சுறாமீன் டாக்பிஷ் முதலிய மீன்களிலிருந்து காட்லிவர் ஆயிலைப்போல் மருந்து குணமுள்ள

எண்ணெய்கள் கிடைக்கின்றன. அவை ஸோப் செய்யவும், வர்ணங்களை கூட்டவும், சில தோல்களைப் பதப்படுத்தவும் உதவுகின்றன. 500 ராத்தல் நிறையுள்ள சுராமீனில் பத்துப் பதினைந்து காலன் எண்ணெய் கிடைக்கும். ஒரு காலன் எண்ணெய் 1½ ரூபாய் வீதம் விலைப் போகும். அதன் பற்களும் ஆபரணங்கள் செய்வதில் உபயோகப்படுகின்றன. சுராமீனின் இறைச்சி மனிதர்களுக்கு உணவாகவும் உபயோகப்படும். அந்த இறைச்சியை எருவாகவும், கால்நடைகள், கோழிக்குஞ்சுகள் இவைகளுக்கு உணவாகவும் தயார்செய்யலாம். சுராமீனின் இறைச்சியில் அம்மோனியாவும் பாஸ்பாரிக் ஆஸிடும் அதிகமாக இருப்பதால், அது நல்ல எருவாகும். சில சுராமீன்கள் 2000 ராத்தல் நிறைவரை இருப்பதுமுண்டு. ரேமீன் 3000 ராத்தலும் இருக்கும்.

பார்ப்பஸ் என்னும் கடல் ப்ராணியிலிருந்து மூன்றுவகை எண்ணெய்கள் கிடைக்கின்றன. அவைகளில் உயர்ந்தது காலன் 150 ரூபாயாக விற்கிறது. அது கடியாரம் முதலிய நுட்பமான யந்த்ரங்களுக்கு எண்ணெய்போட உதவுகிறது.

பதனிட முடியாத தோல்களில் சில வற்றிலிருந்து உயர்ந்த வஜ்ரம் செய்யலாம். சில ப்ராணிகளின் ரத்தத்திலிருந்து தண்ணீரால்கெடாத வஜ்ரம் செய்யலாம்.

OFFICE OF THE ... 1-JUN ... MADRAS

SUGAR CANE CULTIVATION.

கரும்பு சாகுபடி.

கரும்பு சாகுபடி செய்வதில் வ்யவஸாயிகள் இடத்துக்கிடம் வெவ்வேறு முறைகளை யனுஸரிக்கிறார்கள். இதற்கு நல்ல ஜலவஸதியுள்ள நன்செய் நிலங்களையே எடுத்துக் கொள்ளுகிறார்கள். நெல்லிக்குப்பத்தில் வ்யவஸாயிகள் புன்செய் நிலங்களையும் கிணற்று இறவையால் கரும்பு சாகுபடிக்கு உபயோகித்து வருகிறார்கள். சில க்ராமங்களில் நிலத்தை நன்றாய் உழுது சேறுக்கி 1 அல்லது 1½ அடி தூரத்துக்கு ஒன்றாக கரும்புத்துண்டுகளை நடுகிறார்கள். சில வ்யவஸாயிகள் நெல் அறுவடையானவுடன், ஜலம் விடாமலே நிலத்தை உழுது, 1½ அடி தூரத்துக்கு ஒன்றாக வரப்பும் பள்ளமுமாகச் செய்து, பள்ளத்தில் கரும்பை நடுகிறார்கள். சில க்ராமங்களில் ஸௌகர்யமான அளவில் பாத்திகள் கட்டி, அந்தப் பாத்திகளில் கால்வாய் போன்ற பள்ளங்கள் வெட்டி, அவைகளில் கரும்பை நடுகிறார்கள். வேறு சில இடங்களில் ஒருஅடி அகலம் ஒரு அடி ஆழம் உள்ள கிடங்குகளில் கரும்பை ரொம்ப நெருக்கமாக நடுகிறார்கள்.

எரு விஷயமாய் வ்யவஸாயிகள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம். சில வ்யவஸாயிகள் நிலத்தில் ஆட்டுக்கிடை மறித்தும் தொழுவத்தெரு போட்டும் வருகிறார்கள். கரும்பு வளரத் தொடங்குகையில் புன்கன் தழையும் பூவும் போடுகிறார்கள்.

புன்கன் பிண்ணாக்கையும் சாணத்தையும் ஒரு குழியில் போட்டு ஜலத்தில் ஊறவிட்டு, ஒரு வாரத்துக்குப்பிறகு, அதிலிருந்து கசியும் நீரை கரும்புப் பயிருக்குப் பாயவிடுகிறார்கள். வேறு சில இடங்களில் வேர்க்கடலை, ஆமணக்கு புன்கம் பிண்ணாக்குகளை கரும்பு நடும்போதும், நட்டபிறகு 5-ம் மாதம் வரையில் வேண்டிய போதும் எருவாக இடுகிறார்கள்.

விதைக் கரும்புக்கு சிலர் கரும்புத் தோகைகளை உபயோகிக்கிறார்கள். வேறு சிலர் பூராக் கரும்பையும் துண்டுகளாக வெட்டி உபயோகிக்கிறார்கள். சில ரயத்துகள் ஏக்கருக்கு 9000 துண்டுகள் நடுகிறார்கள். வேறு சிலர் ஏக்கருக்கு 30,000 துண்டுகள் நடுவதுண்டு. ஜலம் வேண்டிய அளவு கிடைப்பது ஸந்தேகமாயிருந்தால், வ்யவஸாயிகள் நாணல் கரும்பை நடுகிறார்கள். அது 8 முதல் 9 மாஸத்துக்குள் வெட்டத் தயாராயிருக்கும். இதர இடங்களில் நாமக்கரும்பு நடுகிறார்கள். நெல்லிக்குப்பத்திற்கு ஸமீபத்தில், வ்யாவஸாய டிபார்ட்மெண்டார் கொண்டுவந்த மொரீசு கரும்பு, ஜாவா கரும்பு, பார்படாஸ் கரும்பு, பிஜிகரும்பு ஆகிய இவைகளைப் பயிரிடுகிறார்கள். இவைகள் அதிக லாபம் தரக் கூடியவையாயிருக்கின்றன. சிலர் கரும்புக்கு ஆதாரவாக மூங்கில் கழிகளை நட்டு அவைகளில் கரும்பைக் கட்டிவிடுகிறார்கள்.

சில யோசனைகள்.

நிலத்தின் தன்மையும் ஜலவஸதியும் இடத்துக்கிடம் வித்யாஸப்படுவதால், எல்லா நிலத்துக்கும் ஏற்றதாக ஒரு முறை தெரிவிப்பது முடியாத கார்யம். ஆனால் கரும்பு சாகுபடி செய்பவர்கள் லாபம் பெற வேண்டுமானால் அவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில உண்டு.

நிலம் தெரிந்தெடுத்தல்.

கரும்புக்கு ஜலம் யதேஷ்டமாக வேண்டும். நிலம் ரொம்ப வளமையுள்ளதாக இருக்கவேண்டும். அல்லது எருவாவது அதிகம் போடவேண்டும். இதை உத்தேசித்து ரயத்துகள் நல்ல புன் செய் நிலமாக அல்லது உயர்ந்த வண்டல் நிலமாகத் தெரிந்தெடுக்கிறார்கள். ஆனால் அந்த நிலத்தில் ஜலம் சரியாக வடியுமா என்று பார்ப்பதில்லை. மேற்சொன்ன நிலங்களில் ஜலம் சரியாக வடிவது கஷ்டம். ஆனால் புல புலப்பான மணல்பாங்கான நிலங்களிலோ, ஜலம்ஸுலபமாக வடியும். ஆனால் எரு அதிகமாகப் போடவேண்டியிருக்குமாதலால் எருவிஷயமாக செலவு அதிகமாகும். ஜலக்கஷ்டம் ஏற்பட்டால் பயிருக்கு ரொம்ப கெடுதி உண்டாகும். என்றாலும் நாம் ஒரு விஷயம் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். கரும்புக்கு ஜலம் வேண்டியது அவச்யமென்றாலும், வடிகால் வஸதியிராவிட்டால் கரும்பு நன்றாய் வளராது. கரும்பு நட்டவுடன் மழை பெய்தோ ஜலம் பாய்ந்தோ நிலத்தில் நீர்த்தேக்கம் ஏற்பட்டு விட்டால், கரும்பு முளைக்காமல் அழுகிப் போகும். வடிகால் வஸதியில்லாத நிலங்களில் கரும்பின் இலைகள் மஞ்சளாகவும் நோய் பிடித்தாற்போலும் இருக்கும். இதற்குக்காரணம் கரும்பின் வேர்களுக்குக் காற்றுக் கிடைக்காமல் போவதே. வேர்கள் ஆழத்தில் போய் குளிர்ந்த ஈரமான மண்ணை அடைந்தால் அவைகளுக்குக் காற்றும் கதகதப்பும் இல்லாமல் போகும். இதனால் வேர்கள் ஆழமாகப் போகாமல் மேல் மட்டத்திலே பரவி நிற்கும். கரும்பு வளர்ந்து பெரியவையானால் காற்றுக்காலத்தில் சீக்ரம் கீழே தள்ளப்பட்டுப் போகும். கீழே விழுந்த கரும்பில் சர்க்கரை ரொம்ப குறைவு. இவைகளை நல்ல கரும்புகளுடன் சேர்த்து ஆலையாடினால் வெல்லம் கெட்டுப் போகும். வ்யவஸாயிக்கு நஷ்டம் ஏற்படும். களியாய் வடிகால் குறைந்துள்ள நன்செயில் விளையும் கரும்புகளுக்கு செம்புள்ளி கரும்புள்ளி போன்ற நோய்கள் வருவது ஸுலபம். ஆகவே கரும்புக்கு நிலம் தெரிந்தெடுப்பதில் மூன்று விஷயங்களை கவனிக்க வேண்டும். (1) நிலம் செழிப்புள்ளதாக இருக்க வேண்டும். (2) ஜலம் பாய்ச்சுவது ஸுலபமாயிருக்க வேண்டும். (3) ஸுலபமாக ஜலத்தை வடிக்க ஸாத்யப்பட வேண்டும்.

வடிகால்.

நிலத்தை வடிப்பது ஸுலபமாயிருந்தாலும், மழை ஜலமாவது பாசன ஜலமாவது நில மட்டத்துக்கு மேல் ஓடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டியது அவச்யமாகும். நிலம் களிப்பாயிருந்தால் கரும்புகளுக்கு இடையில் ஆழமான கிடங்குகள் தோண்டி ஜலம் ஸுலபமாக வடியும்படி செய்யவேண்டும். இதனால் கரும்பை வரிசைவரிசையாக நடவேண்டுமென்பது புலப்படும். அநேக இடங்களில் கரும்பை வரிசையாக நட்டாலும், வரிசைகள் நெருக்கமாயிருப்பதால், அவைகளுக்கு இடையில் கால்கள் வெட்ட முடிவதில்லை. ஆகவே வரிசைகளை மூன்று நான்கடி தூரம் இடை வெளிவிட்டு அமைக்கவேண்டும். சில இடங்களில் கிடங்குகள் ஆழமாக இருப்பதில்லை. இதனால் மழை ஜலம் கிடங்கில்ரொம்பி மேலே வழிகிறது. இது கரும்பு சரிவர வளருவதற்குக் கெடுதலாகும். கிடங்குகளை எவ்வளவு ஆழமாக வெட்டவேண்டுமென்றால், பாசன ஜலம் கிடங்கில் தரை மட்டத்துக்கு ஒரு அடி கீழே இருக்கும்படியாக அவ்வளவு ஆழமாக வெட்டவேண்டும்.

எரு.

தக்க எருவை தக்க அளவில் கரும்புக்கு இடுவது லாபகரமானது. பசுந்தாள் எருவை நிலத்தில் போட்டு உழுவதால், பயிருக்கு உணவு கிடைப்பதோடு, நிலமும் திருந்தும். பசுந்தாள் எருப்போட்ட நிலத்தில் ஜலம் நன்றாக வடியும். கரும்பின் வேர்களும் நிலத்தில் ஆழமாகச் செல்லும். ஆட்டுக்கிடை வைப்பதும், தொழுவத்தெரு வைப்பதும் நல்லது. நரகலெருவும் ச்ரேஷ்டமானது. கரும்பை நடுமுன் எருப் போடுவது அவச்யம். அப்படிச் செய்தால்தான் கரும்பு நன்றாக வளரும். ஆனால் எரு முழுமையும் ஒரேதடவையில் போடுவது நல்லதல்ல. கொஞ்சம் கொஞ்சமாகக் காலமறிந்து போடுவது நல்லது. இரண்டாந்தடவையாக கரும்பு நட்ட $1\frac{1}{2}$ அல்லது 2 மாஸத்திற்குப் பிறகு எருப் போடலாம். மூன்றுவது அல்லது நான்

காவது மாஸத்தில் கரும்புக்கு மண் அணைக்கு முன் கடைசி தடவையாக ஒருமுறை எரு போடவேண்டும்.

ஒரு ஏக்கருக்கு பிண்ணாக்கு எரு அல்லது மீன் எரு 3 அல்லது $3\frac{1}{2}$ பாரம் வேண்டியிருக்கும். ஆமணக்கு, நிலக்கடலை, புன்கம் பிண்ணாக்குகளைப் போடலாம். கொளுஞ்சி, புன்கம், அவுரி முதலிய தழை எருக்களைப் போடுவதானால், கரும்புக்கு மண் அணைக்குமுன் போடவேண்டும்.

விதைக் கரும்பு

கரும்புத் தோகையின் துண்டுகள் நன்றாய் முளைக்கின்றன. ஆகையால் அவைகளே சிறந்தவை. விதைக்கவேண்டிய கரும்புக்கு நல்ல திடமுள்ளதும் செந்நிறமில்லாததுமான செடிகளையே எடுத்துக்கொள்ளவேண்டும். இதற்குக் கரும்பை வெட்டுவதற்குமுன் வேண்டிய கரும்புகளைத் தெரிந்துவைத்துக்கொண்டு, தோட்டத்திலேயே அவைகளைத் துண்டுகளாக நறுக்கிவைத்துக்கொள்ளவேண்டும்.

கரும்பு வகைகள்

ரொம்ப விஸ்தீர்ணமுள்ள நிலங்களில் ஒரே வகைக் கரும்பை நடுவது யுக்தமல்ல. ஒரே வகையை நட்டால் அவைகள் முற்றினதும், எல்லாவற்றையும் சீக்ரம் ஆலையாடுவது கஷ்டம். முற்றினபிறகு நிலத்தில் விட்டிருந்தால், கரும்பில் சாறு குறைந்துபோய், நஷ்டமேற்படும். ஒவ்வொரு துண்டு நிலத்துக்கும் வெவ்வேறுவகைக் கரும்புகளை நடவேண்டும். சில நிலங்களில் சில உகைகள் சீக்ரம் முற்றிவிடும். சில வகைகள் தாமதித்து முற்றும். முதலில் முற்றினவைகளை வெட்டி ஆலையாடி வருகையில் மற்ற வகைகளும் முற்றி முதல் வகைகளை ஆலையாடினபிறகு வெட்ட ஸௌகர்யமாயிருக்கும். இதனால் மாஸூலில் நஷ்டம் ஏற்படாது; புதிதாகவந்திருக்கும் பிஜீ 'பி' கரும்பும், 'பி' 208-ம் முற்றின பிறகு சிறிதுகாலம் நிலத்தில் இருந்தால் அதிகக் கெடுதியடைவதில்லை. பி 1529, ஜே 247-ம் மற்றவைகளைவிட ஒரு மாஸத்துக்கு முன்னாலேயே முற்றுகின்றன. சிவப்பு மோரிசுக்கரும்பும் பி-147-ம் சற்றுப் பிந்தி முற்றுகின்றன. ஆனால் பிஜி பி, பி. 208 இவைகளுக்கு சற்று முன்னால் முற்றுகின்றன.

கரும்புகளை நடுதல்.

ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தில் ரொம்ப அதிகமாக கரும்புத் துண்டுகளை நட்டால், கரும்பு வளருவதற்குப் போதுமான இடவஸதி இருக்காது. கிளைகள் அதிகமாக உண்டாகமாட்டா. மேலும் விதைக் கரும்பில் ஐந்தில் ஒரு பாகம் முளைத்த பின் இறந்து போகின்றன. மேலும் கரும்பு ஒரே சீரான பருமனும் உயரமுமாய் இருப்பதில்லை. மேலும் விதைக் கரும்பு வாங்குவதில் அனாவச்யமான செலவு ஏற்படுகிறது. 3 அடி தூரம் விட்டு, வரிசைவரிசையாகக் கரும்பை நட்டால் பழைய முறையை விட ஏக்கருக்கு 70-ரூபாய் விதையிலேயே மிச்சமாகும். மதனப்பள்ளியில் முன்பு ஏக்கருக்கு 30,000 துண்டுகள் நட்டுவந்தார்கள். இப்போது அவர்கள் இந்த முறைப்படி நடுவதில் 10000 துண்டுகள் போதும்.

கரும்புகளை நட்ட பிறகு நிலத்தை அடிக்கடி கொத்திக் களையெடுக்கவேண்டும். மேல் மண்ணை புலபுலப்பாக வைத்திருக்கவேண்டும். இப்படிச் செய்தால், வேர்கள் நன்றாய்ப் பரவி பூமியிலுள்ள உணவை க்கரகித்து கரும்பை நன்றாக வளரச் செய்யும். பயிருக்கு ஜலம் பாய்ச்சும்போது ஜலம் கிடங்குகளின் மேல் வழிந்துபோகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். சித்தூர் ஜில்லாவில் ரயத்துகள் கரும்பின் பழுத்து சாய்ந்த இலைகளை கருப்பங்கழியைச் சுற்றி மூடிக் கட்டுகிறார்கள். இப்படிச் செய்வது நரிகள் கரும்பைத் தின்னாமலிருக்கவும், கரும்பு உயர்ந்து வளரவுந்தான். சில இடங்களில் கரும்புக்குத் தாங்குகோலாக மூங்கில்களை நட்டு அவைகளோடு கரும்பைக் கட்டிவைக்கிறார்கள். ஆனால் இது கரும்புகளை நெருக்கமாய் நட்ட இடங்களிலும், வடிகால் வஸதியில்லாத இடங்களிலுந்தான் வேண்டியிருக்கும். இந்த முறைகளுக்கு செலவு பிடிக்கும். நெல்லிக்குப்பத்தில் ரயத்துகள் ரொம்ப கெட்டியான தோலுள்ள கரும்புகளைப் பயிரிடுகிறார்கள். இந்தக்கருப்புகளை நரிகள் கடிக்க முடிவதில்லை. அங்கே கரும்புகளை இலைகளால் மூடிக் கட்டவேண்டியிருப்பதில்லை. மேலும் அங்கே நிலத்தை ஆழ உழுது, ஜலத்தை நன்றாய் வடிக்க ஏற்பாடு செய்து கரும்பை அதிக இடைவெளி விட்டு நடுகிறார்கள். இதனால் கரும்பின் வேர்கள் பூமிக்குள் ஆழமாகப் போகின்றன. கரும்பில் பலகிளைகள் உண்டாகின்

றன. இவைகளுக்கு தாங்கு கோலாக மூங்கில் நடவேண்டியது அவச்யமில்லை.

புது தினுஸுகளின் மேன்மை.

புது தினுஸுகளாகிய பி. 208-ம், பிஜி பி-யும் குட்டையும் பருமனுமுள்ளவை. பக்க வாட்டில் பல கிளைகள் விடக்கூடியவை. ஜாவா கரும்புகள் உறுதியுள்ளவை. காற்றுக்குத்தாங்கக்கூடியவை. இந்த மூன்று தினுஸுகளிலும் வெல்லம் அதிகம் கிடைக்கும். இவைகளுக்கு நோயுண்டாவதும் குறைவு. இவைகளைப் பயிரிட்டால் லாபம் அதிகமாகக் கிடைப்பதோடு சாகுபடிச் செலவும் குறையும். மூங்கில் பற்றுக்கோல்கள் நடவேண்டிய செலவும் ச்ரமமும் குறையும்.

கரும்பு வெட்டுதல்.

கரும்பை வெட்டு முன் நிலத்தில் யதேஷ்டமாக ஜலம் பாய்ச்ச வேண்டும். இதனால் வெல்லம் குணமடையும். ரயத்துகள் கரும்பை பூமியிலிருந்து நாலைந்து அங்குலம் விட்டு வெட்டுகிறார்கள். இது பிசகு. அடிக்கட்டையில் தான் சாறு அதிகம். கரும்பை பூமிமட்டத்துக்கு சரியாக ஒரு மண்வெட்டிகொண்டோ, பெரிய அரிவாள்கொண்டோ வெட்ட வேண்டும்.

வெல்லம் செய்தல்.

வெல்லம் செய்வதில் என்ன சீர்திருத்தங்களை அனுஸரிக்க வேண்டுமென்பதைப் பற்றி வ்யவஸாய டிபார்ட்மெண்டார் ஒரு துண்டுப் பத்ரிகை ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். (அதன் நம்பர் 22. வேண்டுவோர் சென்னை, எழும்பூர், பப்ளிஸிடி ஆபிஸருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்). அதில் சொல்லியிருக்கிற மாதிரி வெல்லம் காய்ச்சுவது லாபகரமானது. வெல்லங் காய்ச்சும் தொட்டி லேசாயிருக்க வேண்டும், இப்போது வெல்லம் காய்ச்ச, கரும்புச் சக்கையோடு, 10 டன் விறகு செலவழிகிறது. மெல்லிய தகட்டால் செய்யப்பட்டிருந்தால் ஆறேழு டன் விறகு லாபமாகும்.—விளம்பர ஸபையின் ப்ரசுரத்திலிருந்து சுருக்கி எழுதினது.

HELP IN DISTRESS.

ஆபத்தில் உதவி.

ஒரு ப்ராம்மணர் ஒரு ஸன்யாஸியைக்கண்டு அவருடன் இகலோக பரலோக விஷயங்களைப் பற்றி வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். கடைசியில் ஸன்யாஸி ப்ராம்மணரைப்பார்த்து "குழந்தாய்! உலகத்தில் பந்து என்பது கிடையாது. எவரையும் ஆபத்தில் நம்புவதற்கில்லை" யென்றார். ப்ராம்மணர் இந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ளவில்லை. ராப்பகலாய் யாருடைய ஸம்ரக்ஷணைக்காகத்தான் உழைக்கிறாரோ, அவர்கள் அதாவது தனது குடும்பத்தார் தன்னை ஆபத்துக்காலத்தில் கைவிடுவார் என்று அவர் ஸந்தேகிக்கவேயில்லை. ஆகவே அவர் ஸன்யாஸியைப் பார்த்து, "ஐயா, எனக்குத் தலைவலியெடுக்கும்போது, எனது தாயார் எவ்வளவு துக்கப்படுகிறாள். அவள் எனக்காக, என்னை ஸந்தோஷமான நிலைமையில் வைப்பதற்காகத் தன் உயிரையும் கொடுப்பாள். அப்படிப்பட்ட என் தாயார் ஸ்நேகிதரல்லவென்றால், நான் நம்பமாட்டேன்." என்றார். அதற்கு ஸன்யாஸி "அப்படியானால், அவர்கள் உண்மையில் உனது ஆப்த மித்ரர்கள்தான். ஆனால் நீ தப்பெண்ணம் கொண்டிருக்கிறாய். உனக்காக உன் தாய் மனைவி, மகன் ஆகியஇவர்கள் உயிரை விடத் தயாராக இருப்பார்கள் என்று ஒருபோதும் நம்பாதே. வேண்டுமானால் பரீக்ஷை செய்து பார். வீட்டில் போய் ப்ரமாதமாக வலியுடனிருப்பதாகப் பாசாங்குசெய்து அலத்து. நான் வந்து வேடிக்கையைக் காட்டுகிறேன்" என்றார்.

ப்ராமம்ணர் வீட்டுக்குப் போய் ஸன்யாஸி சொன்னவாறே செய்தார். அநேக வைத்யர்கள் வந்து பார்த்தும் ப்ராம்மணருக்கு நோய்குறைவதாக இல்லை. எல்லாரும் துக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த ஸமயம் ஸன்யாஸி அங்குவந்து ப்ராம்மணனுடைய தேக நிலைமையைப் பரிசோதிப்பது போல் பாசாங்கு செய்து பிறகு, "இந்தவ்யாதி ரொம்பக் கடுமையானது, பிழைப்பது அபூர்வம், ஆனால் யாராவது தனது ஆயுளை இவருக்குத் தத்தம் செய்தால், அவர்

பிழைத்து விடுவார். இல்லாவிட்டால் இறப்பது நிச்சயம்,'' என்றார். எல்லாரும் திடுக்கிட்டார்கள். பிறகு ஸன்யாசி, ப்ராம்மணரின் கிழத் தாயாரைப் பார்த்து, ''அம்மா, இந்தத் தள்ளாத வயதில், உனக்கும், மற்றவர்களுக்கும் பொருள் ஸம்பாதித்துப் போடும் உனது பிள்ளை இறந்து போனால், நீ உயிரோடு இருப்பதும் இறப்பதும் ஒன்றுதான். நீ உனது ஆயுளை உனது பிள்ளைக்குக்கொடுத்தால் அவனைக் காப்பாற்றுகிறேன். தாயாராகிய நீ அவனைக் காப்பாற்றாவிட்டால், வேறுபார் அவனைக்காப்பாற்றப் போகிறார்கள்.'' என்று சொன்னார். தாயார் கண்ணும் கண்ணீருமாக 'யதிகளே, நீர்சொல்லுகிறபடி செய்யஎனக்கிஷ்டந்தான். ஆனால் நான் இறந்து போனால் சிறு குழந்தைகளின் கதி என்னவாகும். அது தான் என்னை பயங்காளியாகச் செய்கிறது.'' என்று சொல்லி விட்டாள். ப்ராம்மணனுடைய மனைவியோ, இந்த ஸம்பாஷணையைக் கேட்டதும், தன் தாயார் தகப்பனாரைப் பார்த்து, '' உங்களை நினைக்கும் போது, நான் உயிரிழக்க இஷ்டப்பட வில்லை'' என்றாள்.

ஸன்யாசி அவளைப் பார்த்து, அவள் ஆயுளை இழக்க இஷ்டப்படுகிறாளா என்று கேட்டார்.

''ஐயோ! நான் ஒருபாவி, நான் விதவையாக இருக்க வேண்டுமென்று தலைவிதி இருந்தால், அதை அநுபவிக்க வேண்டியது தான். நான் செத்துப் போனால் என் தாய் தந்தையர்கள் என்ன துக்கப்படுவார்கள். ஆகையால் ஆயுளை தத்தம் செய்ய என்னால் முடியாது ''என்றாள் மனைவி. இப்படியே எல்லாரும் கைவிட்டு விட்டார்கள்.

அதன் மேல் ஸன்யாசி, ப்ராம்மணரைப் பார்த்து, '' பார்த்தாயா, ஒருவராவது உனக்காக உயிரை விடத் தயாராக இல்லை. முன்பு நான் உலகத்தில் ஆப்தமான பந்துக்கள் எவருமில்லையென்று சொன்னது நன்றாய் விளங்குகிறதா'' என்றார்.

உடனே ப்ராம்மணர் எழுந்து தனது குடும்பத்தை வெறுத்து விட்டு ஸன்யாசியுடன் துறவியாகப் போனார்.

BOYS AND GIRLS OF JAPAN

By R GOVINDA ROW.

ஜப்பான் தேசத்துச் சிறுவர் சிறுமிகள்.

ஜப்பான் தேசத்திலுள்ள சிறுவர்களுக்குள்ள ஸௌக்யமும், ஸந்தோஷமும், இதர நாடுகளிலுள்ள சிறுவர்களுக்குக் கிடையாது. ஜப்பானியச் சிறுவர்களுடைய பெற்றோர்கள் அவர்களிடத்தில் மிகவும் விச்வாஸமாயும் அன்பாயும் இருக்கிறார்கள். குழைந்தைகளும்அப்படியே நல்ல குழந்தைகள். ஜப்பான் தேசத்தவர்களுடைய குழந்தைகள், வயது முதிர்ந்து, லோகானுபவம் ஜாஸ்தியாக உள்ள வ்ருத்தாப்யர்களைப் போல, சாந்தமாயும், அமரிக்கையாயும், கம்பீரமாயும் நடந்து கொள்வார்கள். கொஞ்சம் அறிவு தெரியுங்கால முதலே அந்தக் குழந்தைகளுக்கு, தங்கள் மனதை அடக்கி வசம் செய்து கொள்ள கற்றுக்கொடுக்கிறார்கள். விஸனத்தினாலாவது, அல்லது வலியினாலாவது அவைகள் வருத்தப்பட்டுச் கொண்டிருந்தால், அந்த குழந்தைகள் கத்தவும் கூடாது; சொல்லவும் கூடாது; ஸந்தோஷமாயாவது அல்லது உத்ஸாகமாகவாவது இருந்தால், நகைக்கலாகாது. அப்படி அன்யர் வந்திருக்கும்பொழுது செய்தால் மர்யாதைக் குறைவென்று நினைக்கிறார்கள்.

அவர்களுக்கு, இளமைப் பருவத்தில் அநேக விதமான விளையாட்டும், பள்ளிக்கூடங்களில் மற்ற தமாஷாகளுமுண்டு. நகரங்களிலும் சரி, நாடுகளிலும் சரி, தெருதான் அவர்களுக்கு விளையாடுமிடம். பந்து விளையாடுவார்கள். பட்டம் விடுவார்கள்.

ஒவ்வொரு பெண்ணும் தன் முதுகின்மேல், தன்னுடைய ஸகோதரியையாவது, ஸகோதரனையாவது ஒரு சால்வையினால் கட்டி. தூக்கிக் கொண்டு போவாள். அவள் ஸதாகாலம் விளையாடுவது வழக்கம். அவள் இங்குமங்கும் ஓடுவாள். தன் ஸ்நேகிதர்களை துரத்திக்கொண்டு பின் தொடருவாள். அப்பொழுது அவள் முது

கின்மேல் படுத்திருக்கும் சிறு குழந்தை கீழே விழுந்து விடும் போலத் தோன்றும். ஆனால் அது மிகவும் ஸந்தோஷமாக தன்ஸகோதரி விளையாடுவதைப் பார்க்கும்; சிலதடவை தூங்கவுந் தூங்கும்.

சிறுவர்களும், பெரியவர்களும் ஒரே மாதிரியான உடைகளைத்தான் தரிக்கிறார்கள். அவர்களுடைய முக்ய உடை ஒரு தளர்ச்சியான நெடுஞ் சட்டையும், கிமோனோ (Kimono) என்கிற ஓர் விதமான சட்டையுந்தான். இந்த ஆடைகள் தேகத்துக்கு பிடிப்பாயிருக்கும்படி ஒபி (Obe) என்கிற இடை கச்சினால் இருகக் கட்டுவார்கள். பெற்றோர்கள் தனவான்களாய் இருந்தால், இந்த இடைவார் விலை யுயர்ந்ததாயும் ஜரிகை வேலை செய்ததாயும் இருக்கும். சிறுவர்களுடைய உடைகள் மஞ்சள். சிறுமிகளுடைய உடைகள் சிவப்பு. கால்களில் சிறு மேஜோடுகளை போட்டுக் கொள்ளுகிறார்கள்.

பிறகு, தக்கவயது வந்ததும் வாலிபர்கள் பள்ளிக்கூடங்களுக்கு போவார்கள். பள்ளிக்கூடம் போனதும் தன் உபாத்யாயருக்கு வந்தனமளித்துவிட்டுத் தான்உட்காருவார்கள். பிறகு பாடங்களை படிக்கத் தொடங்குவார்கள். அவர்களுடைய புஸ்தகங்களோ ரொம்ப விசித்ரமானவை. பெரிய எழுத்துக்களில் அச்சிட்டவையாய் இருந்தபோதிலும் அதைப் பார்க்க தலைகீழாகத் தோன்றும். புஸ்தகத்தின் ஆரம்பம் புஸ்தகக் கடைசியில்தான் இருக்கும். அதாவது முதல் பக்கம் கடைசியில் இருக்கும். இன்னும் வரிகளையும் கடைசியில் இருந்துதான் படிக்கவேண்டும். நம்முடைய வழக்கங்களுக்கு இது முழுமையும் விரோதமானது. இன்னும் நாம் எழுதுவதைப்போல் எழுதாமல், கடுதாசியின் குறுக்காக எழுதுகிறார்கள். ஒரு ஜப்பான் பாஷை புஸ்தகத்தைப் பார்க்க ரொம்ப விநோதமாய் இருக்கும். அவர்களுக்கு பேனாவுமில்லை, பென்ஸிலுமில்லை. ஆனால் ஓர் மயிர் கற்றையை மைத்துக்கொண்டு, மையில் தோய்த்து, சித்ரம் எழுதுபவர் போல பெரிய எழுத்துக்களை எழுதுவார்கள். அவர்கள் மேல்விலாஸம் எழுதவேண்டுமானால், நாம சில தடவை தமிழில் எழுதுவதுபோல், இன்னஊர், இன்ன தெருவு, இன்னாருக்குக் கொடுப்பது என்று எழுதுவார்கள். இவர்கள் பள்ளிக்கூடங்களில், கணிதம், பூகோளம், தேசசரித்ரம் முதலியவைகளைகற்கிறார்கள். அந்தஸ்துக்குத் தக்கபடி அவரவர்களுக்கு வந்தனமளிக்கவும், நல்ல சிலர்களாக இருக்கவும் சிறுவர்கள் நன்றாய் தயாரிக்கப்படுகிறார்கள். ஒரு கன்னிகையின் அந்தஸ்தை அவள் விருந்தாளிக்கு தேயிலைப்பானம் கொடுக்கும் விதத்தினால் வெகு ஸுலபமாய் அறியலாம். ஒருதடவை ஒரு கனவான் ஒரு ஜப்பான் தேசத்துக் கடையில் புகுந்தாராம். அப்பொழுது, யஜமானன், அவன் மனைவி, அவன் குழந்தைகள் இன்னும் அவன் ஸேவகர்களும் அவரை வணக்கமாக வணங்கினார்கள். அங்கு அவருடைய மற்றொரு குழந்தை தன் தமக்கையின் முதுகின் மேல், வழக்கம்போல் நித்ரை செய்துகொண்டிருந்தது. அதையும் தட்டி எழுப்ப அது எதற்காக எழுப்பினார்கள் என்பதை அறிந்து, அவரை வணங்கிற்று. மறுபடியும் தூங்க ஆரம்பித்தது இந்தச் சிறு உதாரணத்தால் ஜப்பான் தேசத்தவர்கள் குழந்தைப் பருவமுதலே எவ்வளவு வணக்க முள்ளவர்கள் என்பதை அறிந்துகொள்ளலாம்.

வீடுகளில் ஒவ்வொரு ஸாமானையும் அந்தந்த விடத்திலும், சுத்தமாகவும் வைத்திருப்பார்கள். புஷ்பங்களை, கொத்துகளாகவும் இன்னும் மற்ற மாதிரிகளாகவும் தொடுக்கவும் தெரியும். விசித்ரமாயும், விநோதமாயும் சித்ரங்களும் எழுதுவார்கள்.

என். கோவிந்தராவ்.

நூதன ப்ரசுரங்கள்.

ஞானசம்பந்தம்	1	4	0
தி. ம. பொன்னுசாமி பிள்ளை இயற்றியது (படங்களுடன்).			
184. ஞானப்ரகாசம்	1	8	0
தமிழ் நாவல் ஷெ யார் இயற்றியது			
சிவ ஞானம்	1	4	0
தமிழ் நாவல் ஷெ யார் இயற்றியது			
ஸ்ரீ ரவீந்திர ராத்டாகூர் எழுதிய சிறு கதைகள் 3-ம் தொகுதி	0	12	0
16. தன்னம்பிக்கை	0	8	0
எமர்ஸன் எழுதிய ஆங்கில வியாசத்தினின்று வெ. ஸா. அய்யரால் மொழி பெயர்க்கப்பட்டது.			
19. நீகளேஸ்வரி	0	8	0
இனிய தமிழ் நாவல ராஜம்மாள் ராஜப்பன் இயற்றியது			
148. ப்ரஹ்லாதன்	1	0	0
அல்லது உத்தம பக்தன் பி. துரைசாமி அய்யங்கார் நாடக ரூபமாக எழுதியது			

ஜீ. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டி செட்டி தெரு, மதராஸ்

PRESERVATION BY QUICKLIME.

சுண்ணாம்புக்கல்லால் பொருள்களை பத்ரப்படுத்திவைத்தல்.

சுண்ணாம்புக்கல்லைக் கொண்டு சீக்ரம் அழுகக்கூடிய பல வ்யவஸாயப் பொருள்களை கெடாமல் காப்பாற்றி வைத்திருக்கலா மென்று பரீக்ஷைகளால் தெரிகிறது. வெங்காயத்தை தாளிக்காத சுண்ணாம்புக் கல்லின் மேல் பரப்பி பத்ரப்படுத்துவதால், அது வெகுகாலம் கெடாமலிருக்கு மென்று தெரிய வந்திருக்கிறது. பழவர்க்கங்கள், காய்கள், கிழங்குகள், தான்யங்கள் ஆகிய இவைகளையும் சுண்ணாம்புக் கல்முறையால் பத்ரப்படுத்திவைக்க லாம்.

பத்ரப்படுத்தி வைப்பதில் கவனிக்க வேண்டிய ஒரு முக்யமான விஷய மென்ன வென்றால், எல்லாப் பொருள்களும் நன்றாய் முற்றியோ பழுத்தோ இருக்க வேண்டும். பிறகு அவைகளை அதிகப்படியான ஈரம் போகும்படி செய்யவேண்டும். இந்த முறையில் பத்ரத்தப்படுத்த வகைக் கொரு உதாரணம் கொடுக்கிறோம்.

எலுமிச்சை.

எலுமிச்சம் பழத்தைப் பறித்த பிறகு நல்ல காற்றோட்ட முள்ள நிழலான இடத்தில் பரப்பி வைத்திருக்க வேண்டும். சுண்ணாம்பை காற்றில் சற்றுத் தாளிக்கவிட்டு, அதை ஒருமரப் பெட்டியில் பரப்பி அதில் எலுமிச்சம் பழங்களை ஒன்றின் மேலொன்று படாமல் வைத்து அதன் மேல் சுண்ணாம்புக்கல் போடவேண்டும். பழங்களை நெருக்கமாய் வைத்தால் மறுபடியும் ஒரு வாரத்துக்கெல்லாம் எடுத்து, புதிதாக பத்ரப்படுத்தவேண்டியிருக்கும். பெட்டியின் உள்புறத்தில் கெட்டிக் கடுதாசியைக் கொடுத்து மூடியின் உள்புறத்திலும் கடுதாசி கொடுத்து மூடினால் பெட்டியில், காற்றுப் புகாமல் இருக்கும். மரப்பெட்டியைவிட தகரப் பெட்டிகள் இன்னும் ச்லக்யமானவை. ஒருபரீக்ஷையில் ஆகஸ்ட் மாஸத்தில் பத்ரப்படுத்தின பழங்கள் டிஸம்பர்மாஸக் கடைசியில், எடுத்துப் பார்த்தபோது நல்ல நிலைமையில் இருந்தனவாம்.

எலுமிச்சம் பழங்களை, நன்றாய் உலர்ந்த மணலில் பத்ரப்படுத்தினால், அவை கெடாமலிருக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

வள்ளிக்கிழங்கு.

சர்க்கரை வள்ளிக்கிழங்கு நன்றாய் முற்றியதாக இருக்கவேண்டும். கிழங்கு முற்றி யிருக்கிறதா இல்லையா என்பதைப் பரீக்ஷிக்க கிழங்கை ஒடித்து காற்று வாட்டத்தில் வைத்து அரைமணிநேரம் கழித்துப் பார்க்கவும். கிழங்கு கறுப்பாகவோ, பசுமை நிறம் பாய்ந்த கறுப்பாகவோ இருந்தால், அது முற்றவில்லையென்று சொல்லவேண்டும். ஒடித்தபோது எவ்வளவு வெண்மையாக இருந்ததோ அப்படியே இருந்தாலும், சற்று மங்கின வெண்மையாக இருந்தாலும் கிழங்கு முற்றினதென்று சொல்லவேண்டும்.

பிறகு அதைக் காற்றில் தாளித்த சுண்ணாம்பு போட்டு பெட்டியில் பத்ரப்படுத்தினால் ஆறுமாஸம் வரையில் கெடாமலிருக்கும். வேறு ஒரு விதமாகவும் பத்ரப்படுத்தலாம். கிழங்குகளை முதலில் சுண்ணாம்புத் தூளில் புரட்டி ப்பிறகு, 4 பங்கு மணலும் ஒருபங்கு சுண்ணாம்பும் கலந்து, அதைக்கொண்டும் பெட்டியில் அடக்கம் செய்யலாம். பெட்டியில் காற்றுப் புகாதபடி ஜாக்ரதை எடுத்துக்கொள்ளவேண்டியதுகூட இல்லை. ஸ்வல்ப காலத்துக்கு பத்ரப்படுத்திவைக்கவேண்டுமானால், சுண்ணாம்பில் புரட்டி, குளிர்ந்ததும் ஈரமில்லாததுமான இடத்தில் வைத்திருந்தால், கிழங்கு பழுதடையாது.

விதை தான்யங்கள்

விதை தான்யங்களை அந்து முதலியனவைகள் கெடுக்காமல் காப்பாற்றவேண்டுமானால், அவைகளை காற்று உள் செல்லாத தொட்டிகளிலும் குதிர்களிலும் வைக்கவேண்டும். அடிக்கடி புகைபோடவேண்டும்.

தான்யத்தில் கொஞ்சமும் ஈரமில்லாவிட்டால் அந்துகள் வ்ருத்தியாக மாட்டா.

தான்யங்களில் ஈரம் குறைந்திருக்கும்படி செய்ய, அவைகளைக்காயவைத்து காற்றுப்புகாத பாத்ரங்களில் போட்டு வைக்கவேண்டும். அதில் புதிதாய் சூளையிலிருந்து வந்த சுண்ணாம்பை மேலேபோட்டு வைக்கவேண்டும். இல்லாவிட்டால் தான்யத்தோடு சுண்ணாம்புக்கல்லைக் கலந்தும் விடலாம். சுண்ணாம்பில் கலப்பதால் விதைகளுக்கு முளைக்கும் தன்மை குறைவதில்லை.

SENSE IN PLANTS

மரஞ்செடிகளின் உணருந் தன்மை

ஸ்தாவரங்களின் வளருந்தன்மையும் நகருந் தன்மையும் மனிதர்கள் நன்றாய் கவனிக்கும்படி வேகமாய்க் காணப்படுவதில்லை. இவ்வித தன்மையை பதினாயிரம் மடங்கு பெரிதாக காண்பிக்கக்கூடிய கருவியை சில வர்ஷங்களுக்குமுன் ப்ரொபஸர்போஸ் உண்டுபண்ணினார். பதினாயிரம் மடங்குக்குமேல் பெரிதாகக் காட்டும் யந்த்ரம் செய்யவேண்டுமென்றெண்ணமிருந்தும், சிலவித தடைகளால் அவரால் உடனே செய்ய முடியவில்லை. ஆயினும் கொஞ்சகாலத்துக்கெல்லாம் மின்ஸாரசக்தி முதலிய ஸாதனங்களால் 10 கோடி மடங்கு டெரிதாகக் காட்டும் யந்த்ரத்தைத் தயார்செய்தார். இந்த யந்த்ரத்தால் ஒரு நத்தை நகருவது பந்தயத்தின் முதல் குதிரை ஓடுவதைக்காட்டிலும் வேகமானதாகவும், ஒரு செடி வளருவது பீரங்கியிலிருந்து கிளம்பும் குண்டைக்காட்டிலும் வேகமுள்ளதாகவும் காணப்படும். இத்தகைய யந்த்ரங்களின் உதவியால் மேற்கூறிய ப்ரொபஸர் பலவகை உத்தீபனங்களால் ஒரு செடியின் வளர்ச்சி, உணர்ச்சிகள் அல்லது ஆரோக்யம் இவைகள் அடையும் மாறுதலை நன்றாய் கவனிக்க மார்க்கம் ஏற்பட்டது.

சில ஸ்தாவரங்கள் உத்தீபனங்களால் அடையும் மாறுதல்களை விசேஷ யந்த்ர ஸாதனமில்லாமலே நாம் கவனிக்கலாம். வங்காளத்தில் பரீத்பூரில் ஒரு பனைமரம் இருந்தது. இப்போது அது பட்டுப்போய்விட்டது. அது ஸாயங்காலம் கோவில் மணி அடிக்கும்பொழுது தலையை வணங்கிக்கொண்டும் விடியற்காலம் ஸூர்யோதயமாகும்பொழுது தலையை நிமிர்த்திக்கொண்டும் இருந்தது. இதனால் இதற்கு ஜடம்செய்யும் மரமென்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. ப்ரொபஸர் போஸ் தம்முடைய யந்த்ரத்தால் அந்த மரம் அசைவதை அளக்க அனுமதி கேட்டதற்கு கோவில் பூசாரி ஸுலபத்தில் அனுமதி கொடுக்கவில்லை. ஆயினும் அனுமதியைப்பெற்றுப் பரீக்ஷைசெய்ததில் பின்சொல்லிய ஸங்கதிகளை அறிந்தார். ஒரு புயல் காற்றால் மரம் சாய்ந்துபோனதாகவும், சுமார் மூன்றடி நீளத்திற்குள் தலையை உயர்த்திக்கொண்டாவது தாழ்த்திக்கொண்டாவது இருக்கிறதாகவும் கண்டார். இந்த மரத்திற்கு தலையை நிமிர்த்தி தாழ்த்துவதிலுள்ள சக்தி ஒரு மனுஷ்யனை பூமியிலிருந்து உயர்த்தக்கூடிய வல்லமையுள்ளதென்றும் கணக்கிட்டார்.

இந்திய தந்திச்செடி (Desmodium Genas) பென்னும் செடியின் சிறிய இலைகள் மேலும் கீழுமாய் ஹ்ருதயம் துடிப்பதைப்போல் துடித்துக்கொள்ளும். இந்த செடியோடுபட்டு நூலால் ஒரு சிறிய கருவியைப் பிணைத்து பரீக்ஷைசெய்ததில் வெளியிலிருந்து உண்டாகும் சிலவகைத் தூண்டுதல்களால் இலைகள் துடிக்கின்றனவென்றும், அவ்விதத் தூண்டுதல்கள் ஏற்படாதபடி செய்துவிட்டால், துடிப்பது கொஞ்சங்கொஞ்சமாக நின்றுவிடுகிறதென்றும் கண்டுபிடித்தார். தொட்டாற்சுருங்கி யென்று சொல்லப்படும் செடியின் விஷயம் ஸகலருக்குந் தெரிந்ததே.

ப்ரொபஸர் போஸ் செய்த ஆராய்ச்சிகளால் செடிகளும் ப்ராணிகளைப்போல் உறங்குகின்றனவென்று தெரியவந்திருக்கிறது. மரஞ்செடிகளுக்கு பகலில் வெளியிலிருந்து ஏற்படும் தூண்டுதல்கள் ஸாயந்த்ரமும் இரவிலும் செடியை மாறுபடும்படி செய்வதில்லை. மேலும் மரஞ்செடிகள் குளிர்காலத்தில் ஒருவித மயக்கத்தை அடைகின்றன. பலமான உத்தீபனங்களால் பெரும்பாலும் செடியின் உத்ஸாகம் குறைந்தபோதிலும் சில ஸமயங்களில் உத்ஸாகம் தூண்டப்பட்டு அதிகரிக்கிறதென்றும் டாக்டர்போஸ் காண்பித்திருக்கிறார்.

ஸந்தோஷத்தால் கிழவன் முகமலர்ந்து உத்ஸாகமடைவதுபோல் கிழச்செடிகளும் உத்ஸாஹமடைகின்றனவாம். மனுஷ்யர்களுக்கு ஸ்வல்ப அளவில் கொடுத்தால் சில விஷங்கள் சிறந்த ஔஷதங்களாக ஆரோக்பத்தை உண்டுபண்ணுகிறபடி தாவரங்களுக்கும் ஸ்வல்ப அளவு பாஷாணம் அவைகளின் சக்திகளை அதிகரிக்கச்செய்து கெடுதலான பூச்சிகள் அணுகாதபடி காத்துக்கொள்ள உதவுகிறது. ஜாஸ்தி விஷத்தை ப்ராணிகள் புஜித்தால் மரிப்பதுபோல ஸ்தாவரங்களும் மரிக்கின்றன. ஆனால் எல்லாச் செடிகளும் ஒரே நிலைமையில் இருப்பதில்லையாகையால் ஒரு செடிக்கு ஸ்வல்ப அளவாக இருக்கும் ஒரு விஷம் இன்னொரு செடிக்கு அதிக அளவாக இருக்கலாம்.

ஆகவே ஒரு செடிக்கு ஒரு குறிப்பிட்ட அளவு விஷம் தாங்கக்கூடியதாயும் உபயோ

மாகவும் இருந்தாலும், அது இன்னொரு செடிக்கு தாங்கமுடியாத அளவாய்ப் போய்ச் செடியைக் கெடுத்துவிடும். ப்ரொபஸர் போஸ் இரண்டு செடிகளில் ஒன்றின் வீர்யத்தை சில ஸாதனத்தால் வ்ருத்திசெய்து மற்றொன்றின் வீர்யத்தை சில ஸாசனங்களால் குறையச்செய்தார். பிறகு ஒரே அளவில் கொஞ்ச பாஷாணம் கொடுத்தார். வீர்யம் அதிகரிக்கப்பட்ட செடியாதொரு கெடுதியையும் அடையவில்லை; அதன் வளருந்தன்மை அதிகரித்ததேயொழிய குறையவில்லை. மற்றொரு செடியோ தத்க்ஷணமே ஜீவனை இழந்தது.

ஸ்தாவரங்களும் சாராயம் முதலிய பானங்களால் மனுஷ்யர்களைப்போலவே மாறுதல்களடைகின்றனவென்றும் தெரியவருகிறது. மனிதர்களுக்கு சாராயம் தத்ஸமயத்திற்கு அதிக உத்ஸாகத்தைக் கொடுத்து கொஞ்சநேரத்திற்கெல்லாம் எவ்வளவுக்கெவ்வளவு உத்ஸாஹமுண்டாயிற்றோ அவ்வளவுக்கவ்வளவு தெம்புக் குறைவைக் கொடுக்கிறதுபோல, செடிகளும் சாராயம் முதலியவற்றால் அதே மாதிரியான மாறுதல்களை யடைகின்றன. புதியகாற்று ஜாஸ்தியிருந்தால் செடிகளுக்கு சாராயம் முதலியவற்றால் மயக்கந்தெளிகிறதாகவும் தெரியவருகிறது.

ஒரு செடி ஒரு அங்குலத்தில் 10 கோடியில் நான்குபாகம் வளருவதை காட்ட ஒரு கருவி கண்டுபிடித்திருக்கிறார். மேற் சொல்லிய கருவியால் விநாடியின் சதாம்சத்தில் ஒரு செடி வளருவது எவ்வளவென்றும் கவனிக்கலாம். அழற்சியால் வளருந்தன்மை தடைபடுகிறதென்றும் சொரசொரப்பான வஸ்துவுடன் ஸம்பந்திப்பதால் வளருந்தன்மை பாதி மடங்கு குறைகிறதென்றும் பழையபடி வளருந்தன்மை பூராவும் ஏற்பட ஒரு மணிநேரம் ஆகிறதென்றும் பரீக்ஷைகளால் தெரிகிறது. குண்டூசியால் ஒரு செடியைக் குத்தினால் அதன் வளருஞ் சக்தியில் மூன்றில் இரண்டு பங்கு குறைகிறது. அநேக மணி நேரத்திற்குப் பிறகுதான் செடி ஸ்வஸ்தமடைகிறது. மனுஷ்யர்களைப்போலவே செடிகளுக்கும் உணர்ச்சி நரம்புகள் இருக்கின்றன.

ஸ்தாவரங்களுக்கு மருந்துகளால் மயக்கங் கொடுத்து அந்த மயக்கம் தெளிவதற்கு முன் அவைகளை வேருடன் பெயர்த்து மற்றொரு இடத்தில் நட்டால் அவை பட்டுப் போகாமல் நன்றாய் வளருகின்றனவென்று ப்ரொபஸர் போஸ் தெரிவிக்கிறார். மயக்கங் கொடுக்காமல் பெயர்த்தால் பெயர்க்கும் போது உண்டாகும் அதிர்ச்சியால் மரங்கள் மரணமடையும். ஆனால் மயக்கங் கொடுத்து வேறிடத்தில் நடப்பட்ட மரங்கள் கொஞ்ச காலம் வரையில் சில புது வழக்கங்களை யனுஸரிக்கின்றன. இப்படி நடப்பட்ட மரங்களில் சில ஒரு வர்ஷம் வரையில் வஸந்த காலத்தில் இலைகளை உதிர்த்தும் இலையுதிர்காலத்தில் இலைகள் விட்டும் வருகின்றன. ப்ராணிகளைப் போலவே மரஞ் செடிகளுக்கும் மரணகாலத்தில் பலவித வேதனைகள் உண்டென்று டாக்டர் போஸ் கண்டு பிடித்திருக்கிறார்.

அவர் தொட்டாற் சுருங்கி யென்னும் செடியை கண்ணாடிக்குள் வைத்து வெளியிலிருந்து வரும் அதிர்ச்சிகள், உத்தீபனங்கள் ஏற்படாதபடி பாது காத்து வந்ததில், செடிபருத்து நன்றாய் வளர்ந்த போதிலும் உத்தீபனங்களால் மாறுதலடையும் சக்தி அதற்கு குறைந்து விட்டது. அதிகமாக வெளிக்கிளம்பாமலும் தேகப் பயிற்சி எடுத்துக்கொள்ளாமலுமிருக்கும் பணக்காரர்கள் தேகம் பருத்தாலும் கடின வேலைக்கு உதவாதது போல, அந்தச் செடியும் ஆகிவிட்டது. அந்தச் செடிமேல் பலமான அடிகள் அடித்து இன்னும் பலவித கஷ்டங்களுக்கு அச்செடியை உட்படுத்தின பிறகு தான், அதற்கு சுறுசுறுப்பு வந்தது.

தமிழ் நாவல்கள்.

ஸ்த்ரீரத்னம் ...	...	...	1 4
விஜய பாஸ்கரன்	...	...	1 0
ஞானாம்பிகை ...	...	...	1 8
ஞானஸம்பந்தம்	...	...	1 4
ஞானப்ரகாசம்	...	...	1 8
சிவஞானம் ...	...	...	1 4
மங்களேச்வரி ...	...	...	0 8

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் சரிதை.

ஸ்வாமி விவேகாநந்தரின் குருநாதரும் வேதாந்தத்தை இக்காலத்தில் நிலைநிறுத்த அவதரித்தவருமான பரமஹம்ஸரின் ஜீவிய சரிதம் ஆங்கிலத்திலிருந்து எளிய தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டது. விலை அணா 14 (செட்டி பைண்டு.)
பரமஹம்ஸர் படம் அடங்கியது ரூ 1-4-0.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.

HOW TO PREPARE COCOA

கோகோ பானம் தயார் செய்தல்.

கோகோ என்னும் பானம் இப்போது வழக்கத்துக்கு வந்து கொண்டிருக்கிறது. சோக்கோலேட் என்னும் தின் பண்ட வகைகளும் கோக்கோ ஸம்பந்தப் பட்டவையே கோக்கோ என்பது அப்பெயர் கொண்ட ஒரு மரத்தின் விதைகளாகும். விதைகளைத் தக்கவாறு பக்வப்படுத்தி வறுத்து, மாவாக்கி உபயோகிக்கிறார்கள். இந்த மா சுத்தமாகக்கிடைப்பது அரிது. கோகோப் பொடியோடு இதரப்பொடிகளையும் கலந்து விடுகிறார்கள். அரிசி, கோதுமை முதலியவற்றின் மா கலக்கப்படுவதுண்டு.

நாம் குடிக்கும் காபி, தேயிலை பானங்களில் காப்பிக்கொட்டை அல்லது தேயிலையைத் தவிர வேறு வஸ்து சேர்க்கப்படுவதில்லை. கோகோவிலோ அநேக வஸ்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வித சேர்க்கையால் ருசி அதிகமானாலும் சுத்த கோகோவைக்காட்டிலும் ஆரோக்யக் குறைவு ஏற்படுகிறது. ஷாப்களில் விற்கப்படும் பலவஸ்துக்கள் சேர்க்கப்பட்ட கோகோ பலஹீனமான ஜீர்ணக் கருவிகளுடையவர்களுக்கொத்துக்கொள்ளாது. சுத்த கோகோவோ வென்றால் அவர்களுக்குக் கூட யாதொரு கெடுதியுஞ் செய்யாது. அப்படியிருந்தும் வ்யாபாரிகள் வெகு நாளாய் பலவஸ்துக்களடங்கிய கோகோவை அமித விளம்பரத்தால் பரவச்செய்து ஜனங்களை அவ்வித கோகோவை சாப்பிடும்படி வழக்கப் படுத்தி விட்டபடியால், இந்த வழக்கம் நடந்து வருகிறது.

சுத்த கோகோ தயார் செய்யும் விதம்:— நல்ல தினுஸு விதைகள் அரை ராத்தல் எடுத்து ஒரு பாணலியில் போட்டு ஸுமார் 10 நிமிஷம் வறுக்க வேண்டியது. வறுக்கும்போது கிளறிக் கொண்டிருக்க வேண்டியது. கையால் தோலை எடுக்கக் கூடிய பதமானவுடன் விதைகளை அடுப்பிலிருந்து இறக்கி கொஞ்சநேரம் குளிரவைத்து கையால் கசக்கி ஒவ்வொரு விதையின் தோலையும் அகற்ற வேண்டியது. ரொம்ப ஜாஸ்தி குளிர வைத்தால் தோலை எடுப்பது மிகவும் கஷ்டமாய்விடும். நிதானமாக உஷ்ண மிருக்கும் போதே தோலை அகற்றவேண்டும். ஒவ்வொரு விதையையும் இந்த மாதிரி செய்வது நச்சு வேலை யென்றும், ஜாஸ்தி நேரம் பிடிக்குமென்றும் எண்ணக்கூடாது. சாதுர்யமாய் கையை உபயோகிக்கிறவர்கள் ஒரு நிமிஷத்திலேயே அரை ராத்தல் விதைகளின் தோல்களையும் அகற்றலாம். பிறகு விதைகளில் கொஞ்சம் உஷ்ண மிருச்கும்போதே அவைகளை காபிப் பொடி செய்யும் யந்த்ரத்திலாவது அம்மியிலாவது வைத்து அரைத்துப் பெருந் தூளாக்கவேண்டியது. தூளில் ஒவ்வொரு துணிக்கையும் கிட்டத் தட்ட ஒரு குண்டூசியின் தலையளவு இருக்கலாம். பொடிசெய்வதும் ஒன்று அல்லது இரண்டு நிமிஷத்திற்குள் ஆய்விடும். பிறகு தூளை ஒரு ஜாடி அல்லது ஸீஸாவில் போட்டு காற்று உள் செல்லாதபடி மூடிவைத்துக்கொண்டு தினம் கொஞ்சம் எடுத்து உபயோகிக்கவேண்டும்.

ஒரு டம்ளர் கோகோ பானத்திற்கு மூன்று அல்லது நான்கு தேக்கரண்டி தூள் உபயோகிக்கலாம். இத்தூளை ஒரு பாத்ரத்தில் போட்டு எவ்வளவு பானம் வேண்டுமோ அதற்கு $1\frac{1}{4}$ மடங்கு ஜலம் விட்டு அடுப்பில் தீக்கு நேர் மேலே வைக்காமல் சற்று தள்ளி வைக்கவும். உதாரணமாகக் கொடியடுப்பில் இரண்டு தீக்களுக்கும் இடையில் வைக்கலாம். ஒன்றரை அல்லது இரண்டுமணிநேரம் கொதித்த பிறகு அடுப்பிலிருந்து இறக்கி ஒரு துணியில் வடிக்கட்டினால் சுத்தமானபழுப்பு நிறமுள்ள கஷாயம் கிடைக்கும். இதில் எண்ணெய்ப் பசை முதலிய தேகத்திற்குக் கெடுதியைத் தரக்கூடிய வஸ்துக்களிரா. பிறகு வேண்டிய அளவு சர்க்கரையும் ஒரு கோப்பையில் மூன்றிலொருபாகம் பாலோ அல்லது இன்னும் ஜாஸ்தி அளவோ சேர்த்து பானஞ்செய்யலாம். இது கடை கோகோ பொடியால் செய்யப்படும் பானத்தைக் காட்டிலும் ஆரோக்ய முள்ளதாக இருக்கும்.

குளிர்ச்சியான தேசங்களிலும், குளிர்ச்சியான காலங்களிலும் கோகோ டிகாக்ஷனை இரண்டு மூன்று நாளுக்கு வரும்படி தயார்செய்து வைத்துக் கொள்ளலாம். அப்போதைக் கப்போது டிகாக்ஷனை சுடவைத்துக் கொள்ளலாம். காப்பி, தேயிலை டிக்காக்ஷன்களை இப்படி சுடவைத்து உபயோகிக்க முடியாது.

PERFUME FROM BITTER ORANGES

நாரத்தையிலிருந்து வாஸனை தயார் செய்தல்.

கசக்கும் குணமுள்ள நாரத்தையின் பூவிலிருந்தும் இலைகளிலிருந்தும் உயர்ந்த வாஸனை எடுக்கலாமென்று தெரிகிறது. அந்த வாஸனையை ஆதாரமாகக் கொண்டு பலவகை வாஸனைப் பொருள்கள் தயார் செய்கிறார்கள். உயர்ந்த ஸ்நான ஸோப்புகளுக்கு வாஸனை கொடுக்கிறார்கள். நாரத்தையிலிருந்து வாஸனைப் பொருள் இறக்கும் தொழில் தென்னமெரிக்காவில் விசேஷமாக நடக்கிறது. அங்கே நாரத்தை வகை மரங்கள் ஏராளமாகக் காடுகள் போல் வளர்ந்திருக்கின்றன. எலுமிச்சை வகையைச் சேர்ந்த மரங்களெல்லாம் அங்கே [illegible]மாக வளருகின்றன. அங்கே வாஸனை இறக்கும் தொழில்சாலைகள் 30-க்கு மேலிருக்கின்றன. உலகத்தில் உற்பத்தியாகும் நாரத்தை வாஸனையில் முக்கால்வாசி அங்குதான் உண்டாகிறது.

முதல் முதலில் ஒரு ப்ரெஞ்சுக்காரர் 187 -ம் வர்ஷத்தில் அந்த நாட்டுக்குப் போய் தமது தாவரசாஸ்த்ர அறிவை வ்ருத்தி செய்யலானார். அங்கே ஏராளமான புஷ்பங்கள் ஒருவருக்கும் பயன் படாமல் வீணாவதைக் கண்டு, அவைகளிலிருந்து வாஸனை இறக்கினால் நல்ல லாபம் கிடைக்குமென்று எண்ணி அங்குள்ள புஷ்பங்களை சேகரித்து வாஸனை இறக்கலானார். அதற்கு ஸாதாரண வாலையையே உபயோகித்து வந்தார். ஆனால் இந்த வாலையில் ஸ்வல்ப அளவுதான் வாஸனை தயார் செய்ய முடிந்தது.

அதிகமான அளவில் தயார் செய்ய புஷ்பங்கள் அதிகமாகக் கிடைக்க வேண்டும். புஷ்பங்கள் மலர்ந்ததும் மலராததுமாக இருக்க வேண்டும். அவைகளைக் கையால் தொடக்கூடாது. கையாண்டால் மணம் குறைந்து போகும். தோட்டங்களாகப் பயிர் செய்த மரங்களில் புஷ்பங்கள் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் மலருகின்றன. மரங்களின் அடியில் துணிகளை விரித்து மரங்களை அசைத்தால் புஷ்பங்கள் துணியில் விழும். அவைகளை எடுத்து வாஸனை தயார் செய்ய உபயோகிக்கலாம். ஆனால் யதேச்சையாகக் காட்டில் வளரும் மரங்கள் எல்லாம் ஒரே காலத்தில் புஷ்பிப்பதும், காப்பதும், பழுப்பதும் கிடையாது. அந்த மரங்களை ஆட்டினால் மொட்டுகள், பூக்கள், பிஞ்சுகள் வாடின பூக்கள் ஆகிய எல்லாம் விழும். புஷ்பங்களைக் கையால் சேகரிக்க வேண்டும். இதற்கு ஆள் கூலி அதிகமாகும். மேலும் பூவின் மணமும் மேலே சொன்னபடி குறைந்து போகும். ஆகையால் மரங்களைத் தோப்பாக வளர்த்தாலொழிய வேண்டிய அளவு நல்ல புஷ்பங்கள் கிடைப்பது கஷ்டம்.

மேலே சொன்ன ப்ரெஞ்ச் தாவர சாஸ்த்ரி தனது எண்ணம் நிறைவேறத் தடை ஏற்பட்டதைக்கண்டு, பூவுக்காக ச்ரமப்படாமல் இலையிலிருந்து வாஸனை எடுக்க முயன்றார். இலையிலிருந்து கிடைத்த வாஸனை புஷ்பத்தின் வாஸனையைப் போலவே இருந்தது. அது செய்யும் முறைவருமாறு.

அடியில் சில த்வாரங்களும் மேலேமூடியும், மூடியிலிருந்து இன்னொரு பாத்ரத்துக்குப்போக ஒரு குழாயுமுள்ள ஒரு பெரிய தொட்டியில் நாரத்தை இலைகளைக்கொட்ட வேண்டும். தொட்டியின் அடியிலுள்ள த்வாரங்கள் வழியாக நீர் ஆவியை தொட்டிக்குள் செலுத்தினால், ஆவி இலைகளிலுள்ள வாஸனையை க்ரகித்துக்கொண்டு குழாய்வழியாகப் போய் மேலே சொன்ன பாத்ரத்தில் சேரும். அந்தப்பாத்ரத்தைக் குளிரச்செய்தால் ஆவி ஜல ரூபமாகும். ஜலத்தின் மேலே வாஸனைத்தைலம் மிதக்கும். அதைக் கரண்டிகளால் எடுத்துக் கொள்ளலாம். அந்தத் தைலத்தை சில தொழில் சாலைக்காரர்கள் அப்படியே விற்று விடுகிறார்கள். வேறு சிலர் அதிலுள்ள எண்ணெய்ப் பசையை நீக்கிவிட்டு சுத்த வாஸனைப் பொருளாகத்தயார் செய்து விற்கிறார்கள்.

500 அல்லது 600 ராத்தல் இலையிலிருந்து பட்டணம் படியால் அரையே அரைக்கால் படி வாஸனைத்தைலம் இறக்கலாம். யுத்தத்துக்கு முன்னால் ஒரு ராத்தல் தைலம் 8-ரூபாய் முதல் 10.ரூபாய் வரை விற்றது. பாராகுவே நாட்டிலிருந்து யுத்தத்துக்கு முன்னால் 71,322 ராத்தல் தைலம் ஏற்றுமதியாயிற்று. இதில் 23,400 ராத்தல் ப்ரான்ஸுக்கும் 8,378 ராத்தல் இட்டலிக்கும், 7430-ராத்தல் ஆஸ்ட்ரியாவுக்கும் 5,137-ராத்தல் ஜெர்மனிக்கும் 16,831-ராத்தல் அமெரிக்க ஐக்ய மாகாணங்களுக்கும் போயிற்று.

PROGRESS OF SCIENCE AND INDUSTRY.

சாஸ்த்ரம், கைத் தொழில்களின் அபிவ்ருத்தி.

யுத்தத்தில் சாஸ்த்ரமும் கைத் தொழிலும் எவ்வளவு தூரம் வ்ருத்தியடைந்தன என்பதைப் பற்றி சில விவரங்கள் கிடைத்திருக்கின்றன. வாடர்லூ சண்டையில் மொத்தம் உபயோகிக்கப் பட்ட குண்டுகளின் நிறை 37·3 டன் தான். போயர்யுத்தம் முழுமையிலும் 2,800டன் குண்டுகள் தான் செலவழிந்தன. ஆனால் இந்த யுத்தத்திலோ மேற்குப் போர் முனையில் ப்ரிட்டிஷ் யுத்த அரங்கத்தில் ஒரு நாளில் மட்டும் 18,080 டன் குண்டு வகைராக்கள் செலவழிந்தன. ப்ரான்ஸில் நடந்த சண்டை முழுவதிலும் ப்ரிட்டிஷ் பீரங்கிகள் 35 லக்ஷம் டன் குண்டுகளை ப்ரயோகித்தன.

யுத்தத்தில் பல நூதன யந்த்ரங்களும் ஸாதனங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. ஒரு திமிங்கிலத்தின் காது எப்படி யமைந்திருக்கிறதென்பதை சாஸ்த்ரஜ்ஞர்கள் நன்றாய் ஆராய்ந்து, அதன் அமைப்பை அனுஸரித்து, ஒரு சப்தம் கண்டு பிடிக்கும் கருவியைக் கண்டு பிடித்தார்கள். அதை க்ரூஸர்கப்பலில் கொண்டு போவார்கள். அதன் உதவியால் பக்கத்தில் ஸப்மரீன் கப்பல்கள் இருக்கின்றனவா என்று கண்டுபிடித்து விடலாம்.

இன்னொரு சப்த ஸாதனத்தால் $1\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள எதிரி பீரங்கிகளை (50 கஜம் ஏறக் குறைய இருக்கும்படி) எங்கிருக்கின்றனவென்று கண்டு பிடித்து விடலாம். கடலின் அடித்தரையில் ஒரு உலோகக் கம்பியைப் போட்டு, அதன் உதவியைக் கொண்டு கப்பல்கள் கடல் வெடி குண்டுகளின் மேல் படாமல் போகும்படி ஒரு ஸாதனம் செய்தார்கள். இது யுத்தத்திலேயன்றி ஸமாதான காலங்களிலும் ப்ரயோஜனப்படும். ராத்ரிக் காலங்களிலும், மூடுபனிக்காலங்களிலும் கப்பல்கள் இந்த ஸாதனத்தின் உதவியால் துறைமுகத்திலிருந்து வெளியேயும், வெளியிலிருந்து துறை முகத்துக்குள்ளேயும் பத்ரமாகப் போகலாம். இதேமாதிரி ஆபத்துள்ள ஜல மார்க்கங்களின் வழியாகப் போகவும் இந்த ஸாதனம் உபயோகப்படும்.

ப்ரிட்டிஷாருக்கு யுத்தத்தில் செலவழிந்த தொகை 800 கோடி பவுன். இதைக்கொண்டு, உலகத்தில் மின்ஸார சக்தி உண்டு பண்ண உதவக் கூடிய ஜலா சயங்களை யெல்லாம் மின் ஸார சக்திக்கு உபயோகிக்கலாம்.

பூமியின் உட்புறத்தில் உள்ள உஷ்ணத்தைக் கொண்டு யந்த்ரங்களை நடத்தலாமென்று சொல்லப்படுகிறது. இட்டலியில் பூமியில்பெரிய நீண்ட த்வாரங்கள் செய்து, அதிலிருந்து வரும் நீராவியைக்கொண்டு 100,00 குதிரைபலமுள்ள டர்பைன் எஞ்ஜின்களை நடத்தி வருகிறார்கள். பூமியில் 12 மைல் ஆழம் த்வாரம் செய்தால் யதேஷ்டமான நீராவியோ உஷ்ணமோ கிடைக்கும். ஆனால் அந்த வேலைக்கு 50 லக்ஷம் பவுன் செலவு பிடிக்கும். வேலை பூர்த்தியாக 85-வர்ஷம் செல்லும்.

இங்க்லண்டில் மார்கரைன் என்னும் செயற்கை வெண்ணெய் செய்து உபயோகிக்கிறார்கள். இப்போது அது அதிகமாக அங்கே உபயோகிக்கப்பட்டு வருகிறது. அது வெண்ணெய்க்கு பதிலாக உபயோகப்படுகிறது. ஆனால் அது வெண்ணெயின் குணங்களெல்லாம் உடையதல்ல. வெண்ணெயில் வைட்டமைன் என்னும் ஒரு ஆகார உபகரணமிருக்கிறது. அது இல்லாவிட்டால் தேகவளர்ச்சி குன்றிவிடும். தாவர எண்ணெய்களில் வைட்டமைன் கிடையாது. மார்க்கரைன் பெரும்பாலும் தாவர எண்ணெய்களைக் கொண்டே செய்யப்படுவதால், இந்தக்குறையை நீக்கவேண்டி வைட்டமைன் உள்ள மிருகவர்க்கத்து கொழுப்புகளில் சிறிது சேர்க்கவேண்டுமென்று ஆகாரசாஸ்த்ர வித்பன்னர்கள் சொல்லுகிறார்கள்.

ஆமணக் கெண்ணெய்க்கு ஒரு புது உபயோகம் ஏற்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு மார்கரைன் செய்வது ஸாத்யமாயிருக்கிறது. இந்த எண்ணெய் சேர்த்து மார்கரைன் செய்வதை ஜனங்கள் அறிந்தால், அவர்கள் மார்கரைனைப் பார்க்கும் போது, ஆமணக் கெண்ணெயின் ஞாபகமும், வாஸனையும் ஏற்பட்டு அருவருப்பு உண்டாகலாம். இந்த நூதன உபயோகம் பலமடைந்தால், ஆமணக்கு வ்யவஸாயம் லாபகரமாகும். தேங்காய் எண்ணெயின் விலை உயர்ந்திருப்பது போலவே ஆமணக்கின் விலையும் உயரலாம்.

CO-OPERATIVE MILK SUPPLY

கோவாபரெடிவ் பால் விற்பனை.

பெரிய பட்டணங்களில் பால் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. அதை நீக்க எவ்வளவு முயற்சி செய்தாலும் நல்லதே. கல்கத்தாவில் கோவாபரேஷன் முறையில் பால் ஸப்ளையை அதிகரிக்கச்செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள். அந்த முறை த்ருப்திகரமாக இருந்தால் அதை சென்னைபோன்ற இதர பட்டணங்களிலும் பரீக்ஷை செய்துபார்க்கலாம்.

கல்கத்தாவில் 10 லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். சராசரியில் ஒருவருக்கு தினம் ½ பைண்ட் அதாவது பட்டணம் படியில் ஆறில் ஒரு பாகம் பால் வேண்டியிருக்குமென்றால், மொத்தத்தில் லக்ஷத்து 66 ஆயிரம் படி பால் வேண்டியிருக்கும். இவ்வளவு பால் ஸப்ளை செய்ய பால் பண்ணை ஏற்படுத்துவதானால் கோடிக்கணக்கில் முதல் வேண்டியிருக்கும். சென்னையில் 5 லக்ஷம் பேர்களிருப்பதால் இந்த ஊருக்கும் ஏராளமான முதல் வேண்டியிருக்கும். அவ்வளவு பெரிய தொகையை மூலதனமாக ஏற்படுத்தி பால் ஸப்ளை செய்வது என்பது ஸாத்யமான காரியமல்ல.

வங்காளத்துக் கோவாபரெடிவ் ரெஜிஸ்ட்ரார் இது விஷயமாக வெகுகாலம் யோசனைசெய்து பார்த்தார். பட்டணங்களில் பசுக்களின் தொகையை அதிகரிக்கச்செய்வது முடியாதென்று தீர்மானித்தார். நாட்டுப்புறங்களில்தான் பசுக்கள் வ்ருத்தியாகும். வங்காளத்தில் புல் நிலங்கள் அதிகமில்லை. உள் நாட்டுப் பசுக்களை வைத்துக்கொண்டுதான் பால் விஷயத்தை கவனிக்கவேண்டும்; இதற்காக மேல்நாட்டுப் பசுக்களைக் கொண்டுவந்து நாட்டுப்பசுக்களை வ்ருத்திசெய்து பிறகு பால் ஸப்ளை விஷயத்தை கவனிப்பதென்றால் நாளாகும். க்ராமவாஸிகளுக்கு பசு ஸம்ரக்ஷணம் இரண்டாம் பக்ஷமான தொழில்தான். என்ன லாபம் கொடுக்கக்கூடியதென்று ரூபித்துக் காட்டினாலும், அவர்கள் முக்யமான வேலையாகிய வ்யவஸாயம் முதலியவைகளை விட்டுவிட்டு, பசு வளர்ப்பதை முக்யமாக கவனிக்கப்போகிறதில்லை. ஆகவே இருக்கப்பட்ட நிலைமையைக்கொண்டே பால் ஸப்ளையை அதிகமாக்க முடியுமா என்பதுதான் அந்த ரெஜிஸ்ட்ராரினுடைய முக்ய ப்ரச்னையாக இருந்தது.

அவர் ஒரு ஸமயம் கல்கத்தாவிலுள்ள பாரஸட் ஸப் டிவிஷனில் இதுவிஷயமாக ஆராய்ச்சி செய்தபோது, அந்தக்ராமவாஸிகள் தங்கள் பாலைக் கல்கத்தாவுக்கு தினந்தோறும் அனுப்புவதாக அறிந்து, அதை சீர்திருத்த முயன்றார்.

பணக்கார இடையன் க்ராம வாஸிகளுக்கு முன் பணம் கொடுத்து தன் ஆட்களை விட்டுப் பால் கறந்து அதை கல்கத்தாவுக்குக் கொண்டு போய் விற்கிறான். அநேக இடையர்கள் முதலிலேயே பாலில் ஜலம் கலந்து விடுகிறார்கள். பாத்ரத்தில் கொண்டு போகும் பால் தளும்பாமலிருக்க, பாலில் வைக்கோலைப் போட்டு வைக்கிறார்கள். வைக்கோல் சுத்தமாயிருக்குமென்பதில்லை. ஒரு மூங்கிலில் இரண்டு பாத்ரங்களைத் தொங்க விட்டுக் கொண்டு போவார்கள். பாத்ரத்தில் பாலினுள் படி முதலிய அளவுகளும் இருக்கும். ஊரிலிருந்து இரண்டொரு மைல் நடந்து ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போனால், அங்குள்ள ரெயில்வே ஸிப்பந்திக்கு பால் லஞ்சம் கொடுக்க வேண்டும். வண்டி நேராகப் போகாமல் இடையில் வேறு வண்டி மாறவேண்டியிருந்தால் அங்கும் பால் லஞ்சம் கொடுக்க வேண்டும். சில வண்டித் தொடர்களில் இடையர்களுக் கென்று தனி 3-வது வகுப்பு வண்டியிருக்கிறது. கல்கத்தா வந்ததும் அங்கும் பால் லஞ்சம் கொடுக்க வேண்டும். வியர்வையுள்ளதும் அழுக்கடைந்ததுமான தன் கையை பாலில் விட்டு, பாத்ரத்தின் அடியில் வைத்திருக்கும் ஆழாக்கையோ உழக்கையோ ஒவ்வொரு தடவையும் எடுக்கையில், அவனது கையின் அழுக்கும் வியர்வையும், அவன் தொட்டிருக்கக் கூடிய பொருள்களின் அசுத்தமும் பாலில் சேருவது நிச்சயம். இன்னும் சில இடங்களில் அவன் லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கும். இதற்கெல்லாம் ஈடு செய்ய இடையன் வேண்டிய அளவு ஜலம் கலந்து கொள்வான். காலையில் பாலெல்லாம் விற்றானதும் பிற்பகலில் தனது க்ராமத்துக்குத் திரும்புவான்.

ஒவ்வொரு க்ராமத்திலிருந்தும் கிடைக்கும் ஸுமார் ஒருமணங்கு பாலுக்குதினம் ஒரு ஆளை

கல்கத்தாவுக்கு அனுப்புவதாலும், ஒவ்வொரு ஆளுக்கும் கல்கத்தாவில் அதிகச் செலவாவதாலும்ரெயில் செலவு ஆவதாலும், வழியில் பால் லஞ்சம் கொடுப்பதாலும் க்ராமவாஸிக்கு முன் பணம் கொடுக்க இடையன் கடும் வட்டி கொடுத்துப் பணம் கடன் வாங்கவேண்டியிருப்பதாலும், இந்த செலவை யெல்லாம் ஈடுகட்ட பாலில் ஜலம் கலக்காமலிருக்க முடிவதில்லை.

மிஸ்டர் டானவன் முதலில் ஒரு க்ராமத்தில் கோவாபரேஷன் முறையில் பால் வ்யாபாரம் செய்ய ஒரு ஸங்கம் ஏற்பாடு செய்தார்.

அந்த க்ராமத்தில் இடையர் விஷமமாக ஒரு தகராறு ஏற்பட்டு அதனால் மேலே சொன்ன பால் விற்பனை ஏற்பாடு தடை பட்டிருந்தது. முன்பு இடையன் கொடுத்து வந்த விலையை விட சற்று அதிகமான விலை கொடுக்க ஏற்பாடு செய்தார். பால் கறக்க ஸங்கத்தில் தனியாக ஆள்கள் ஏற்பாடு செய்தார். பாலை முதலில் ரெயில் மூலமாகக் கல்கத்தாவுக்கு அனுப்பி வந்தார். ஆனால் பெரிய தகரக் குவளைகளில் ஊற்றி மூடிப் பூட்டி, ஸீல்வைத்து அனுப்பிவந்தார். அதனால் பால் வழியில் அசுத்தமடைய வழியில்லை.

இந்தக் கோவாபரெடிவ் ஸங்கம் முதல் வர்ஷத்தில் 3 ரூபாய் லாபமே அடைந்தது. ஆனால் இரண்டு விஷயங்கள் ஊர்ஜிதப்பட்டன. முதலாவது க்ராமவாஸிகளுக்கு அதிகவிலை கிடைத்தது. இரண்டாவது பால் கலப்படமில்லாமல் ஸங்கத்துக்குக் கிடைத்தது. இந்த ஸங்கம் த்ருப்திகரமாக ஆறுமாஸம் நடைபெறவே அந்தப் பக்கத்து ஊர்களில் இன்னும் 5 ஸங்கங்கள் ஏற்படலாயின. கல்கத்தாவுக்கு ஸங்கங்கள் அனுப்பிவந்த பாலின் அளவும் தினம் 20 சேரிலிருந்து ஆறுமணங்காயிற்று. 1919-ம் வர்ஷம் மார்ச்சுமாஸத்துக்குள் 9-மணங்காயிற்று. கல்கத்தாவிலும் ஸங்கத்துப் பாலுக்கு க்ராக்கி ஏற்பட்டது. க்ராமங்களிலும் ஸங்கங்கள் ஏற்படுத்த ஊக்கம் ஏற்பட்டது. 1919 ம் வர்ஷம் ஜூன்மாஸத்துக்குள் 13 புதிய ஸங்கங்கள் ஏற்படலாயின. தினப்படி பால் ஸப்ளையும் ¾ டன்னுக்கு உயர்ந்தது. இந்த ஸங்கங்கள் கல்கத்தாவில் ஒரு யூனியன் ஏற்படுத்திக்கொண்டு மெடிகல் காலேஜ், மேயோ ஆஸ்பத்ரி, பெல்காசியா ஆஸ்பத்ரி இவைகளுக்கு பால் ஸப்ளை செய்ய கண்ட்ராக்ட் எடுத்துக்கொண்டன. மழைகாலத்தில் பால் கிடைப்பது குறைவதால், அதற்காக இன்னும் 12 ஸங்கங்கள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன. இந்த ஸமயத்தில் ஸங்கங்களுக்கும் இடையர்களுக்கும் போட்டி ஏற்பட்டது. இடையர்கள் கல்கத்தாவில் சேர் 6 அணாவாக விற்க முனிஸிபாலிடியிடம் அதிகாரம் பெற்றார்கள். ஸங்கங்களோ 4 அணா வீதம் விற்றுவந்தன. இடையர்களுக்கு அதிக லாபம் வந்ததால், அதைக் கொண்டு மாடுவைத்திருப்பவர்களுக்கு பாலுக்கு அதிக விலைகொடுத்து வாங்கி, ஸங்கத்தின் வ்யாபாரத்தைக் கெடுக்கத் தலைப்பட்டார்கள். ஆனால் ஸங்கம் போட்டியில் கடைசியில் ஜயம் பெற்றது. 1919-ம் வர்ஷக் கடைசியில் இன்னும் சில ஸங்கங்கள் ஏற்படலாயின. இப்போது மொத்தம் ஸங்கங்கள் 34 இருக்கின்றன. அவைகளின் மூலதனம் 30,000 ரூபாயாகும். இப்போது அவைகள் தினம் 10,000 ரூபாய்க்குப் பால் வாங்கி விற்கின்றன. அவைகளுக்கு இப்போது மாஸம் 1-க்கு ஸுமார் 1,200 ரூபாய் லாபம் கிடைத்து வருகிறது.

ஸங்கங்கள் பால் கொண்டுபோவதற்காக 13000 ரூபாய்க்கு ஒரு மோட்டார் வண்டி வாங்கியிருக்கின்றன.

இப்போது இந்த ஸங்கங்கள் தினம் ஒரு டன் நிறையுள்ள பால் கல்கத்தாவுக்கு அனுப்பி வருகின்றன. இந்த ஏற்பாட்டுக்கு 20,000 ரூபாய் முதல் வேண்டியிருந்தது. கல்கத்தாவுக்கு முன்சொன்னபடி 100 டன் பால் தினப்படி ஸப்ளைசெய்ய 20 லக்ஷம் ரூபாய் முதல் வேண்டும். ஆனால் 100 டன் பால் தினந்தோறும் சுற்றுப்புறத்து க்ராமங்களில் கிடைப்பது கஷ்டம். அதற்கு வேறு மார்க்கம் தேடவேண்டும்.

இனி இந்தக் கோவாபரேஷன் முறையால் என்னென்ன ஸௌகர்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று பார்ப்போம். க்ராமவாஸிகள் தங்கள் பசுவால் நல்ல லாபம் கிடைக்கிறதென்று கண்டு, அதை சரிவர போஷித்து வருகிறார்கள். மேலும் அவர்கள் அதிகமாக பசு வாங்க ஆரம்பித்திருக்கிறார்கள். முன்பு ஒரு பசு வைத்திருந்தவர்கள் இரண்டு பசுவும், இரண்டு பசுவைத்திருந்தவர்கள் 3 பசுவும் வைத்துக் கொள்ள ஆரம்பித் திருக்கிறார்கள். மேலும் அவர்கள் பசுக்களை உயர்ந்ததாக வாங்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். முன்பு ஒரு சேர் இரண்டுசேர் பால் கொடுத்துவந்த பசுக்களுக்குப் பதிலாக மூன்று

நான்கு சேர் கொடுக்கும் பசுக்களை வாங்கி வருகிறார்கள். அவர்கள் ஸங்கத்தில் சேர்ந்திருப்பதால் பசுக்கள் வாங்கப் பணம் ஸுலபமாகக் கிடைக்கிறது.

ஜனங்கள் கோவாபரேடிவ் ஸங்கத்தில் சேர்ந்து கொண்டிருப்பதால், அவர்கள் ஒழுங்காக வேலை செய்யவேண்டி யிருக்கிறது. ஸங்கத்தின் விதிகளுக்குக் கட்டுப் பட்டு நடக்கவேண்டியிருக்கிறது. பாலில் மோசம் செய்வதற்கில்லை.

7 - JUN 1920
MADRAS.

SAYINGS FROM GREAT MEN.

பெரியோர் வாக்கு:

இலவச கல்வி.

சென்ற சில காலமாக இலவசக் கல்வியைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தோம்......... கல்விக் காகட்டும், வேறெந்த நிர்வாக கார்யங்களுக் காகட்டும் அகப்படக் கூடிய பணம் மட்டாகவே இருக்கிறது. இலவசக் கல்வி விஷயமாகத் தீர்மானிக்க வேண்டிய முக்ய விஷயமென்ன வென்றால், அகப்படக் கூடிய பணத்தை பள்ளிக் கூடங்களின் ஸங்க்யை அதிகப் படுத்துவதில் செலவழிப்பது நல்ல கொள்கையா அல்லது இலவசக் கல்விக்காகச் செலவழிப்பது நல்ல கொள்கையா என்பதே. ஒரு எலிமெண்டரி பள்ளிக்கூடத்தில் வஸூலாகும் சம்பளத் தொகை குறைவாக இருந்தாலும் பெற்றோர்களால் சம்பள ரூபமாகக் கொடுபட்டுவருவதும், கல்விக்காக உபயோகிக்கப்பட்டு வருவதுமான மொத்தத் தொகை வர்ஷந் தோறும் 8-லக்ஷமாகும். இந்தத் தொகை கவர்ன்மெண்டினிடமாவது ஸ்தல ஸ்தாபனங்களிடமாகவாவது போய்ச் சேருவதில்லை. இதில் பெரும்பாகம் உதவி பெறும் பள்ளிக் கூடங்களில் வஸூலாகும் சம்பளத் தொகையாகும். பப்ளிக் ஸ்கூல்களில் கல்வியை இலவசமாக ஆக்கி விட்டால், உதவி பெறும் பள்ளிக் கூடங்களும் சம்பளம் வாங்குவதை நிறுத்த வேண்டி வரும். இங்கிலண்டிலும் இப்படியே நேர்ந்தது. இப்படி நேருமிடங்களில் உதவி பெறும் பள்ளிக் கூடங்களுக்கு ஒரு வரும்படி இனம் போய் விடுகிறது. இந்த வரும்படி நஷ்டத்துக்கு எவ்விதத்திலாவது தக்க ஈடு கிடைக்காவிட்டால், அவைகள் மூடப்பட்டுப் போகலாம். அந்த நஷ்ட ஈடு கவர்ன்மெண்ட் பணத்திலிருந்து தான் கொடுபட வேண்டியிருக்கும். ஆகவே ஸர்க்கார், ஸ்தலஸ்தாபனங்கள் இவைகளின் ஆதீனத்திலுள்ள ஸ்கூல்களில் சம்பளம் வாங்குவதை ஒழித்து விட்டால், இப்போது ப்ரைவேட் ஆதாரங்களிலிருந்து கிடைத்து வருவதும், கல்விக்காக உபயோகப்பட்டு வருவதுமான ஒரு பெருந் தொகையை இழப்பதோடு, உதவி பெறும் ஸ்கூல்களுக்கு கவர்ன்மெண்டார் அதிகப்படியாக உதவி செய்ய வேண்டி வரும். இந்தக்கடினமான விஷயத்தில், மேற்சொன்ன இரண்டு கொள்கைகளில் பள்ளிக்கூடங்களின் தொகையை அதிகரிப்பதே இப்போது நல்லவழி யென்று எனக்குத் தோன்றுகிறது. இது ஒரு புறம் இருக்க, அடுத்த வர்ஷம் இந்த ஸமயத்தில் கல்வி விஷயம் ஒரு மந்த்ரி வசம் இருக்கு மென்பதை நாம் இப்போது நினைத்துக் கொள்ள வேண்டும். இப்போதுள்ள அமைப்பில் இந்தக் கௌன்ஸில் இந்த விஷயத்தைப்பற்றி தீர்மானமாக ஒரு கொள்கையும் ஏற்படுத்துவது கூடாதென்பதற்கு இதுவே ஒரு பலமான காரணமாகும். நாம் இப்போது இலவசக் கல்விதான் வேண்டுமென்று தீர்மானித்து விட்டால், அந்தத் தீர்மானத்தைமாற்ற மந்த்ரிக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கலாம். அவரை ஒன்றும் செய்யாதபடி நாம் தடுத்து விட்டதாக அவர் எண்ணலாம். எலிமெண்டரி கல்வி மசோதா நிறைவேறி, கல்வி வரியால் பணம் கிடைத்தால், மாணவர் சம்பளத்தை ஒழிப்பதால், கல்விக்காகச் செய்துவரும் வஸதிகள் குறையாமலிருக்கலாம். இருந்தாலும் பள்ளிக் கூடங்களின் தொகையை அதிகரிக்கச் செய்யும் ஸாதனம் குறைந்து தான் போகும். சில வர்ஷங்களாக இந்த கவர்ன்மெண்டுக்கு குறைவாகப் பணம் கிடைத்து வந்தது போலில்லாமல், இனிவரும் மந்தரிக்கு இன்னும் அதிகமாகப் பணம் அகப்படும் பாக்யமிருக்குமானால், அவர் ஏககாலத்தில் பள்ளிக் கூடங்களை அதிகப்படுத்தி, சம்பளத்தை ஒழித்து விடுவது ஸாத்யப் படலாம். ஆனால் இது வருங்காலத்தைப் பற்றிய விஷயம். இப்போ

தா கவர்ன்மெண்டுக்கு இரண்டுக்கும் பணமில்லை. வரப்போகிற மந்த்ரி தமது கல்விக் கொள்கையை யுக்தம் போல் நிர்ணயித்துக் கொள்ளும்படி அதாவது இரண்டுக்கும் போதுமான பணமில்லா விட்டால், பள்ளிக் கூடங்களின் தொகையை அதிகரிப்பதா, அல்லது மாணவர்களின் சம்பளத்தை ஒழித்து விடுவதா என்பதை நிர்ணயித்துக் கொள்ளும்படி விடாவிட்டால், நாம் அவருக்கு இப்போது சரியாக நடந்து கொண்டதாக ஆகமாட்டாது.—ஆனரபிள் மிஸ்டர் நாப்.

தேசீயக் கக்ஷியார் செய்யப்போகிறவை.

தேசீயக் கக்ஷியார் அதிகாரத்துக்கு வந்தால், என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் என்று என்னைக் கேட்கக்கூடும்........தேசீயக் கக்ஷியாரின் நோக்கங்கள் என்னவென்றால், வ்யவஸாயி, வேலையாள் இவர்களுடைய நிலைமையை ஸந்தோஷகரமாகச் செய்வதும், கட்டாய ப்ரைமரிப் படிப்பு விஷயத்தில் ஊக்கமான கொள்கையைக் கைக்கொண்டு, அவர்களிடம் கல்வியையும் அறிவையும் பரவச்செய்வதுமாகும். தேசமெங்கும், முக்யமாக வ்யவஸாய சீர்திருத்தம், வீட்டுக் கைத்தொழில்களின் அபிவ்ருத்தி ஆகிய இவைகளுக்காக, கோவாபரேஷனை வ்ருத்திசெய்து பரவச்செய்வதும் அந்தக் கக்ஷியாரின் கொள்கையாகவே இருக்கும். நிலத்தின் பொருளாதாரங்களை முற்றிலும் அனுபவிக்கும்படி வ்யவஸாயிகளைப் பழக்க வ்யவஸாய ஆராய்ச்சிப் பண்ணை ஏற்பாட்டை வ்ருத்திசெய்வதும் அவர்களுடைய கடமையாக இருக்குமென்று நான் எண்ணுகிறேன். ஸ்தலஸ்வய ஆட்சி விஷயத்திலோ, நல்ல ஆட்சிக்குக் கெடுதலேற்படாதபடி ஸ்தலஸ்தாபனங்கள் தங்களுடைய முன்னேற்றத்தைத் தாங்களே முயன்று அடையும்படி அவைகளுக்கு கூடுமான அளவு ஸ்வயாதீனம் கொடுக்கவேண்டுமென்பது அந்தக் கக்ஷியாரின் கொள்கையாக இருக்கும். வைத்ய இலாகாவைப்பற்றியோ என்றால், ஒவ்வொரு முக்யமான க்ராமத்திலும் ஒரு ஆஸ்பத்ரி இருக்கும்படிக்கு முயலுவதும், ஒவ்வொரு க்ராமத்துக்கும் வைத்ய உதவி கிடைக்கும்படி சுற்றித்திரியும் வைத்யசாலைகள் ஏற்படுத்துவதுமாகும். கலால் இலாகாவைப்பற்றியோ என்றால், தேசீயக் கக்ஷியார் மதுவிலக்கு ஏற்படும்படி செய்யக் கடமைப்பட்டவர்கள். ஆனால் கலால் வரி வருமானம், இந்த ராஜதானியில் மேஜர் வருமான இனத்தைச் சேர்ந்த தாகையால், இதுவிஷயத்தில் கார்யஸித்தி ஏற்படக் காலமாகும். ஆனால் இங்க்லண்டில் போல மதுபானக் கடைகள் திறந்திருக்கும் நேரத்தைக் குறைப்பது முதலிய உபாயங்களால் மதுபானத்தைக் குறைக்க இந்தக் கக்ஷியார் முயலுவார்கள் என்று நான் நிச்சயமாயிருக்கிறேன். கைத்தொழில் விஷயம் ஜன ஆட்சிக்குக் கொடுக்கப்பட்டவைகளுள் ஒன்று என்பது நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. அது மாற்றப்பட்ட அம்சமானால், கைத்தொழில் முயற்சிகளுக்கு உதவிசெய்து நாட்டின் தொழில் அபிவ்ருத்தியை துரிதப்படுத்துவதும், ராஜதானியில் உள்ள பொருளாதாரங்களைக் கொண்டு லாபகரமாக ஸ்தாபிக்கக்கூடிய கைத்தொழில்களை ஸ்தாபிப்பதும் இந்தக் கக்ஷியாரின் கொள்கையாக இருக்கும். இவைகள் அதிகாரத்துக்கு வரும் கக்ஷியார் கவனிக்கவேண்டிய முக்யமான விஷயங்களில் சில ஆகும்.
—சேலம் ஜில்லா கான்பரேன்ஸில் குமாரமங்கலம் ஜமீன்தார்.

மாற்றப்பட்ட அம்சங்கள்.

மாற்றப்பட்ட அம்சங்களில் நமக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அதுவே ஒரு பெரிய உபகாரம் என்றும் சிலர் சொல்லிவரும் இரண்டு அம்சங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். (அவை கல்வியும், கைத்தொழில்களுமாகும்.) இந்த இரண்டிலும், பலாபலன்களை யுத்தேசிக்கையில், சிலர் நினைக்கிறவாறு, ஜனங்களுடைய ஆதீனமும், அவர்களாக எதுவும் ஆரம்பிக்க முயலுவதும் அதிகமாக இருக்காது. உதாரணமாக கல்வி என்னும் அம்சம் மாற்றப்பட்டவைகளுள் ஒன்றாகும். ஆனால் எல்லா புது யூனிவர்ஸிடிகளும், பழைய யூனிவர்ஸிடிகளில் வங்காளமும் கல்கத்தாவும், ராஜகுமாரர்கள் காலேஜுகளும், ஐரோப்பியர்களுடைய ஸ்கூல்களும், வங்காளத்தில் ஸெகண்டரி கல்வியும், சாஸ்த்ரீய கைத்தொழில் ஆராய்ச்சி ஸ்தாபனங்களும் ஜன ஆதிக்யத்துக்கு மாற்றப்படமாட்டா. மந்த்ரியினுடைய பொறுப்பிலும் ஜனங்களுடைய ஆதீனத்திலும் விடுவதற்கு ஏற்ற ஒரு அம்சத்தின் அளவை இவைகள் குறைத்துவிடுகின்றன. கட்டாயப்படுத்துவது, வரிபோடுவது, ஆகிய வெறுப்புண்டாக்கக்கூடிய ப்ரைமரி கல்வியென்னும் பாகம் மந்த்ரியின் வசம் விடப்பட்டிருக்கிறது. ரிஸர்வ் டிபார்ட்மெண்டுகளிலிருந்தாவது, அவைகளின் வரும்

படியிலிருந்தாவது, கல்விக்கு பண உதவி கிடைக்குமென்று மந்த்ரி ஆசை வைப்பதற்கில்லை.

அதுபோலவே, வ்யவஸாயம் மாற்றப்பட்ட அம்சமாயினும், அப்படி மாற்றினதால் ஏற்படும் ஸாதகம், பாசனம், ஜலத்தேக்கம், நிலவரி ஆகிய இவைகள் ரிஸர்வ் அம்சங்களாயிருப்பதால் குறைந்துபோய்விடும். கைத்தொழில் அபிவ்ருத்தி மாற்றப்பட்ட அம்சமாகும். ஆனால் தொழில்சாலைகள் சுரங்கங்கள், ரெயில்வேக்கள், கப்பல், துறைமுகங்கள், வ்யாபார வரி, நாணய ஏற்பாடு, நாணயம் போடுதல் ஆகிய இவைகள் ரிஸர்வ் அம்சங்களாக வைக்கப்பட்டுள்ளன. தொழில்சாலைக ளில்லாமலும் மாற்றப்படாத அம்சங்களால் ஏற்படும் ஸாதகங்களில்லாமலும், கைத்தொழில்களில் என்ன வ்யக்தமான அபிவ்ருத்தி ஏற்படக் கூடுமென்பதைக் கண்டுபிடிப்பது யாவருக்கும் கஷ்டமாயிருக்கும்—மோடிலால் நேரு 1919-காங்க்ரேஸ்.

அரிசி விற்பனைக் கட்டுப்பாடு.

கவர்ன்மெண்டார் அரிசிவிற்பனையைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் ஸிலோனிலுள்ளவர்களுக்கு அரிசி விஷயமாய் சில ஸங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சில லங்கை வாஸிகள் இந்தியாவுக்கு வந்து வைஸ்ராயைக்கண்டு பேசி, தங்கள் விஷயமாக சில ஸாதகங்கள் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அப்போது வைஸ்ராய் அரிசிக்கட்டுப் பாட்டைப் பற்றிப் பின்வருமாறு பேசினார்.

1919-ம் வர்ஷத்தில் ஏற்படுத்தி யிருந்த அரிசி ஏற்றுமதி கட்டுப்பாட்டை 1920-ம்வர்ஷத்தில் நீக்கியிருந்தால், இதர தேசங்களிலுள்ள விலைக்கு சரியாக இந்தியாவிலும் பர்மாவிலும் அரிசி விலை ஏறியிருக்கும். இதனால் வ்யவஸாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்திருக்கும். அரிசி உணவு சாப்பிடுகிறவர்களுக்கு ரொம்ப கஷ்டம் ஏற்பட்டிருக்கும். உள் நாட்டு விலையைக் குறைக்க வேண்டி கவர்ன்மெண்டார் ஏற்றுமதியைக் குறைக்கலானார்கள். ஆனால் வ்யவஸாயிகளுக்குக்கூடியமட்டும்ச்ரமத்தைக்குறைக்கவிரும்பினார்கள். உள்நாட்டில் விலையை அதிகப்படுத்தாமல், வ்யவஸாயிகளுக்கு அரிசிக்கு சரியான விலை கிடைக்கும்படி செய்ய ஒரு முறை அகப்படுமானால், அந்த முறையை கவர்ன்மெண்டார் ஸந்தோஷத்துடன் அனுஷ்டிப்பார்கள். ஆனால் நேராக அப்படிச் செய்ய ஸாத்யப்படவில்லை. ஏற்றுமதி இவ்வளவு தான் செய்ய வேண்டுமென்று ஏற்படுத்தினால், வ்யவஸாயிகளுக்குக் கிடைக்கும் லாபம் ஏற்றுமதி வ்யாபாரிகளுக்குப் போய் விடக்கூடும். ஆகவே யாவருக்கும் லாபம் சரிவரக் கிடைக்கும்படி செய்ய வேண்டி கவர்ன்மெண்டார் நேராக இந்த அரிசி வ்யாபாரத்தில் தலையிட வேண்டியதாயிற்று. கவர்ன்மெண்டார் உற்பத்தி செய்பவர்களுக்கு ட்ரஸ்டீ போலிருக்கிறார்கள். இந்த வ்யாபாரத்தில் கிடைக்கும் நிகரான லாபத்தில் ஒரு பெரும் பாகத்தை, பர்மாவிலுள்ள வ்யவஸாயிகளின் ஸௌகர்யத்துக்காக உபயோகப் படுத்தும்படி பர்மா கவர்ன் மெண்டுக்குக் கொடுக்க ஸம்மதித்திருக்கிறார்கள். ஸிலோனுக்குஏதாவது ஸகாயம் செய்வதானால், அது பர்மாவுக்கு நஷ்டமாகும்.

கம்பெனிகள் அதிகமாக ஏற்படுவது.

இந்த வர்ஷத்தின் ஒரு முக்யமான விஷயம் கம்பெனிகள் அதிகமாக ஏற்படுவதாகும். சென்ற ஏப்ரல் மாஸம் முதல் நவம்பர் மாஸம் முடிய எட்டுமாஸத்தில் 535 கம்பெனிகள் $166\frac{1}{2}$ கோடி ரூபாய் மூலத்துடன் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. சென்ற 1918-ம் வர்ஷத்தில் இதே காலத்தில் $6\frac{3}{4}$ கோடி ரூபாயுடன் 158 கம்பெனிகளே ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. கம்பெனிகள் ஏற்படுவது இவ்வளவு அதிகரித்திருப்பதைப்பற்றிப் பலர் பலவிதமாக அபிப்ராயங் கொண்டிருக்கிறார்கள். நமது பண நிலைமை நன்றாயிருக்கிறதென்பதையும் கைத்தொழில் அபிவ்ருத்தி ஏற்படுவதற்கு இது ஒரு அறிகுறியாகுமென்பதையும் இது காட்டுகிறதென்று அநேகர் சொல்லுகிறார்கள். முன் யோசனையுள்ள சிலர் இது; பணம் வட்டிக்குப் போடும் பைத்யத்தால் ஏற்பட்டதென்றும், இதனால் பின்னால் பணக் கஷ்டமும், கம்பெனிகளின் முறிவும் ஏற்படுமென்றும் அபிப்ராயப்படுகிறார்கள். இரண்டு வித அபிப்ராயத்துக்கும் இடமிருக்கிறது. யுத்தமானது, இந்தியா கைத்தொழில் விஷயத்தில் எந்தவிதம் வ்ருத்தியடையலாமென்பதைக் காட்டியிருக்கிறது. நமது நாட்டில் கைத்தொழில்களுக்குச் சென்ற நான்கு வர்ஷங்களாக அதிக லாபம் கிடைத்து வந்திருக்கிறது. யுத்த ஸந்தர்ப்பத்தில் பணத்தைப் போட்டுவைக்க தக்க மார்க்கங்கள் கிடைக்கவில்லை. மேலும் புது யந்த்ரங்கள் வாங்குவதும், தேர்ந்த வேலையாட்கள் அகப்படுவதும் கஷ்டமாயின. ஆகவே யுத்தம் முடிந்ததும், கம்பெனிகள் ஏற்

படுவது ஸ்கஜந்தான். இந்தக் கம்பெனிகளுக்கு ஸுலபமாகப் பணம் சேர்ந்ததைக்கொண்டு, கைத்தொழில் அபிவ்ருத்திக்கு வேண்டிய பணம் இந்தியாவில் கிடைக்குமென்று தெரிந்துகொள்ளலாம்.

ஆனால் இதற்கு எதிரிடையாகச் சொல்லக் கூடியதும் இருக்கிறது. ஆனால் அதை அவ்வளவு வற்புறுத்திக் கூறுவது சரியல்ல. மற்ற வ்யாபார முழக்கங்களைப்போலவே, இந்தக் கைத்தொழில் முழக்கத்திலும் ஒரு ஆபத்து இருக்கிறது. நல்ல நிர்வாகமுள்ள கம்பெனிகளோடு கூட, வேறு சில ஸந்தேகப்படக்கூடிய கம்பெனிகளும் ஏற்படுகின்றன. இது அவச்யம் நேரத்தான் செய்யும். சீக்ரமாகவோ சிறிது காலத்துக்குப்பிறகோ அவைகள் நின்றுபோகும். அவைகள் எப்படி நிற்கும், அல்லது எத்தனை கம்பெனிகள் முறிந்துபோகுமென்று நான் சொல்லமுடியாது. ஆனால் பாங்கிகளுக்கும் நாணய நிலைமைக்கும் பாதகமுண்டாகும்படி அவ்வளவு பெரிய ஆபத்து நேர்ந்துவிடுமென்று சொல்ல இப்போது ஆதாரமொன்றுமில்லை—ஆனரபிள் மிஸ்டர் ஹேய்லி.

விலைவாசி ஏற்றம்.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றி மூன்று விஷயங்கள் கவனிக்க வேண்டியது. முதலாவது இதனால் ஸர்க்கார் செலவு அதிகரிக்கிறது. குறைந்த சம்பளத்திலுள்ள ஸர்க்கார் ஸிப்பந்திகளும் உத்யோகஸ்தர்களுக்கும் விலை வாசி ஏற்றத்தால் ரொம்ப கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வேலையாட்களை வைத்திருக்கும் மற்ற முதலாளிகளைப் போலவே இம்பீரியல் கவர்ன்மெண்டும், மாகாண கவர்ன்மெண்டுகளும் அதிக சம்பளம் கொடுக்க வேண்டியதாயிற்று. சில ஸந்தர்ப்பங்களில் படியாகக் கொடுக்கிறார்கள். சில ஸந்தர்ப்பங்களில் அதிக சம்பளமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இம்பீரியல் கவர்ன்மெண்டார் ஸிப்பந்திகளின் சம்பளத்தை இப்போது உயர்த்திக் கொண்டு வருகிறார்கள். இதனால் வருகிற வர்ஷத்துக்கு இதற்காக அதிகச் செலவு ஏற்படும்.

இரண்டாவது விஷயமென்ன வென்றால், ஒரு தடவை பருவமழை தவறி விலை வாசி ஏறிவிட்டால், மறுபடியும் அநேக வர்ஷங்கள் நல்ல மழை பெய்தாலொழிய விலை வாசிகள் பழைய நிலைமைக்கு வருவதில்லை.

மூன்றாவது முக்யமான விஷயம்—எல்லாவற்றிலும் முக்யமானது, என்ன வென்றால், நமது தேசத்தைச் சேராத பல காரணங்கள் நமது நாட்டின் விலைவாசியை உயர்த்தி விட்டன வென்பதே. 1918-ம் வர்ஷத்திய பருவமழை தவறாமலிருந்தாலுங் கூட விலைவாசி ஏறாமலிருக்குமா என்பது ஸந்தேகம். யுத்தத்தின் பயனாக உலக மெங்கும் விலை வாசிகள் ரொம்ப உயர்ந்து போய் விட்டன. இதற்குக்காரணம் செலாவணியிலுள்ள நாணயம் அதிகமாகியிருப்பதும், பொருள் உற்பத்தி குறைந்திருப்பதுமே. இந்தியா மற்ற தேசங்களுடன் வ்யாபார ஸம்பந்த மில்லாமல் தனித்திருந்தாலொழிய, இதர தேசங்களிலுள்ள விலை வாசி ஏற்றத்தால் இந்தியா பாதிக்கப் படாமலிருக்க முடியாது. வெளி தேசங்களில் பணத்துக்கு பொருள் வாங்கும் சக்தி குறைந்திருப்பதானது நமது நாட்டில் ரூபாயின் பொருள் வாங்கும் சக்தியைக் குறைப்பது நிச்சயம்—இம்பீரியல் சட்ட ஸபையில் ஆனரபிள் மிஸ்டர் ஹேய்லி.

வீண் தொல்லை.

அநேக ஜனங்கள் தங்களுடைய பழைய தொல்லைகளை நினைத்து வருத்தப்படும் துர்ப்பாக்யமான வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய ஜீவசக்திக்கு ச்ரமம் ஏற்படுகிறதென்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். சென்றவை, நடப்பவை, வரப்போகிறவை ஆகிய இவற்றுள் துக்கந்தராத உத்ஸாகமான அம்சங்களையே எண்ணியிருந்து ஜீவசக்தி குறையாமல் இருக்கும்படி செய்ய முயலவேண்டும்.

தடவைக்கு ஒரு தொல்லையே போதுமானது சிலர் மூன்று தொல்லைகளை—முன்பு நடந்த அவஸ்தைகளை கவனிப்பதால் ஒன்று, தற்போது ஒன்று, இனியும் அவஸ்தை ஏற்படுமென்று வருந்துவதால் ஒன்று ஆக மூன்று தொல்லைகளை—நினைத்து வருந்துகிறார்கள். அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை ஸந்தோஷமற்றதே. ஸ்நேகிதர்களுடைய ஸந்தோஷத்துக்கும் அது அனுகூலமாக இருக்காது.—ஜார்ஜ் வாஷிங்டன் பேகன்.

GENERAL NOTES.
பொதுக் குறிப்புகள்.

ஒரு புது மெடிகல் காலேஜ்.

கவர்ன்மெண்டார் விசாகப்பட்டணத்திலுள்ள வைத்ய ஸ்கூலைக் காலேஜாக உயர்த்தத் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஸெகண்டரி ஸ்கூல்களுக்கு க்ராண்ட்.

சென்னை கவர்ன்மெண்டார் இந்த மகாணத்திலுள்ள உதவி பெறும் ஸெகண்டரி ஸ்கூல்களில் உபகரணங்கள் வாங்குவதற்காக அவைகளுக்கு ஒரு லக்ஷம் ரூபாய் க்ராண்ட் கொடுக்க ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

கப்பலோட்டும் தொழில்.

வங்காள கவர்ன்மெண்டார் கப்பலோட்டும் தொழிலைக் கற்பிக்க ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதைப் பற்றி ஆலோசனை சொல்ல ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள்.

பாசனத்துக்கு ஆயில் எஞ்ஜின்கள்.

புதுக்கோட்டை கவர்ன்மெண்டார், வ்யவஸாயிகளுக்கு நீர் பாய்ச்ச ஆயில் எஞ்ஜின்கள் வாங்கி ஏற்படுத்த 2000-ரூபாய்வரையில் கடன் கொடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கடன்களை 10-வர்ஷம் முதல் 20-வர்ஷத்துக்குள் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்.

டெலிபோன்.

சென்னைக்கும் உதக மண்டலத்துக்கும் டெலிபோன் ஏற்பாடு வைக்கும் ப்ரேரணையை சென்னை கவர்ன்மெண்டார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வேலையை சீக்ரம் செய்து முடிக்கும்படி தென்ஸர்க்கிள் டெலிக்ராப் எஞ்ஜினியரிங் டிரெக்டரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 3-நிமிஷத்துக்கு மேல் படாமல் பேச $3\frac{1}{2}$ ரூபாய் சார்ஜ் செய்யப்படும்.

உணவுப் பொருள்களின் விலை யேற்றம்.

உணவுப் பொருள்களின் மொத்த பேரவிலை யுத்தத்துக்கு முன்னுலிருந்ததைவிட இப்போது ப்ரான்ஸிலும் இட்டலியிலும் 100-க்கு 300 வீதமும், ப்ரிட்டனிலும் ஜப்பானிலும் 100 க்கு 170 வீதமும், அமெரிக்காவில் 100-க்கு 120 வீதமும் அதிகரித்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.

ஒரு ஆகாச வாணம்.

ப்ரொபஸர் கோடார்ட் என்பவர் ஒரு நூதன ஆகாசவாணம் கண்டு பிடித்திருக்கிறார். அது $6\frac{1}{2}$ நிமிஷ நேரத்தில் 230 மைல் உயரம் போகுமாம். பூமியைச் சுற்றி 200 மைல் உயரத்துக்கு காற்று வ்யாபித்திருப்பதால், அந்த வாணம், காற்று மண்டலத்துக் கப்பால் 30 மைல் தூரம் போகும். அந்த வாணத்தில் சில வெடிமருந்து ஸாதனங்கள் வைத்திருக்கும். அவைகளின் உதவியால் தான் அது அவ்வளவு உயரம் போகிறதாம். சந்த்ரனுக்கு ஸமீபம் போகக்கூடிய தாகக் கூட வாணம் செய்ய முடியுமாம்.

போலி காளைகள்.

சென்ற மே மாஸத்து ஸஞ்சிகையில் சென்னையின் பால் வ்யாபாரத்தை அபிவ்ருத்தி செய்வதற்காக நல்ல பால் ராசியுள்ள அயர்ஷைர் பொலி காளைகள் நான்கு வாங்க வேண்டுமென்று கால் நடை டெப்யுடி டிரெக்டர் தெரிவித்த ப்ரேரணையை கவர்ன் மெண்டார் அங்கீகரித்ததாகச் சொன்னோம். இப்போது நான்கு காளைகளும் சென்னைக்கு வந்திருக்கின்றன. அவைகளிருக்க இன்னும் கொட்டில்கள்கட்டியாகவில்லையாகையால், அவை தற்போது கிண்டி [illegible]ர்க்கில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை [illegible]ன்னை நகரில் மாடு வைத்திருப்பவர்களுக்கு [illegible]ரம் கூலிக்கு விடப்படும்.

வ்யவஸாய டிபார்ட்மெண்டின் ப்ரசுரங்கள்.

வ்யவஸாய டிபார்ட் மெண்டார் பற்பல துண்டுப்பத்ரிகைகளையும் சிறு புஸ்தகங்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். ரயத்துகளுக்குப் பயன்படும் விஷயங்களடங்கிய ப்ரசுரங்கள் தேசபாஷைகளிலும் வெளியாகின்றன. துண்டுப்பத்ரிகைகள் இலவசமாகக் கொடுக்கப் படுகின்றன. வியவஸாய டிபார்ட் மெண்டின் ப்ரசுரங்களுக்கு விலை ஜாப்தா வேண்டுவோர் சென்னை எழும்பூர் விக்டோரியா பில்டிங்ஸில் இருக்கும் பப்ளிஸிடி பீரோவுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சட்டஸபை மெம்பர்களின் உத்யோககாலம்.

இம்பீரியல் சட்டஸபையிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் உத்யோக காலம்

அடுத்த ஜூலையோடு முடிவு பெறுகிறது. சென்னை ஒழிந்த இதரமாகாண சட்ட ஸபையில் உள்ள தெரிந் தெடுக்கப்பட்ட மெம்பர்களின் உத்யோககாலமும் அடுத்த ஏப்ரல் முதல் ஆகஸ்ட்மீ வரையில் முடிந்து போகிறது. சென்னையில் ஸமீபத்தில் எலெக்ஷன் நடந்ததால் அவர்களுடைய உத்யோக காலம் 1922-ம் வர்ஷம் ஆகஸ்ட் மாஸம் வரையில் இருக்கிறது. அடுத்த வர்ஷம் புது கௌன்ஸில்கள் வரும் வரை மெம்பர்களின் காலம் நீடித்திருக்கும்படி செய்ய இந்தியா கவர்ன்மெண்டுக்கும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் அதிகாரம் இருக்கும்படி கௌன்ஸில் ரெகுலேஷன்களை இந்தியா கவர்ன்மெண்டார் மாற்றியிருக்கிறார்கள்.

திருச்சினாப்பள்ளியில் ஒரு ஸிவில் இஞ்ஜினியரிங் ஸ்கூல்.

ஸப் ஓவர்ஸியர்களைப் பயிற்றுவிப்பதற்காக திருச்சினாப்பள்ளியில் ஒரு ஸிவில் இஞ்ஜினியரிங் ஸ்கூல் ஸ்தாபிக்க கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறார்கள். அது சென்னை இஞ்ஜினியரிங்காலேஜ் ப்ரின்ஸிபலின் மேற்பார்வையில் இருக்கும். அந்தப் பள்ளிக்கூடத்தில் நன்றாய்த் தேறிய மாணவர்கள் சென்னை இஞ்ஜினியரிங் காலேஜில் அப்பர் ஸபார்டினேட் (ஓவர்ஸீயர்) வகுப்பில் சேர்ந்து வாசிக்கலாம். அந்தப் பள்ளிக் கூடத்துக்குத் தனிக்கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படும். அது வரையில் அது [illegible]கைக் கட்டிடத்தில் நடந்து வரும்.

ம்ருகவைத்ய இலாகா.

தற்போது ம்ருகவைத்ய இலாகாவில் ஒரு ஸூபரிண்டண்டெண்ட் தானிருக்கிறார். அவர் கீழிருக்கும் ஸிப்பந்திகளோ 124. 1910-ம் வர்ஷத்தில் 41 பேர்கள் தானிருந்தார்கள். 1922-ம் வர்ஷ ஆரம்பத்தில் 180 பேர்கள் இருப்பார்கள் என்று தெரிகிறது. ஸாதாரணமாய் ஒரு ஸூபரிண்டெண்டண்ட் மேற்பார்வை செய்யக்கூடிய ஸிப்பந்திகளின் தொகை 80 என்று சொல்லப்படுகிறது. இப்போது 124 ஸிப்பந்திகளிருப்பதால், அதற்கு இன்னொரு ஸூபரிண்டெண்டண்ட் நியமிக்க இந்தியா மந்த்ரி 1917-ம் வர்ஷத்திலேயே ஸாங்க்ஷன் செய்தார். அவர் யுத்த நெருக்கடியில் முன்பே வர முடியவில்லை. இந்தவர்ஷக் கடைசியில் வேலைக்கு வரக்கூடும். மேலே சொன்னபடி 1922-ல் ஸிப்பந்திகளின் தொகை அதிகமாகுமாதலால் இன்னொரு ஸூபரிண்டெண்டண்ட் நியமிக்க இந்தியா மந்த்ரி ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இந்தியா கவர்ன்மெண்டின் வரவு செலவு திட்டம்.

1920-21-ம் வர்ஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டுக்கு 138-72 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். செலவு $135\frac{3}{4}$ கோடி ரூபாய். மிச்சம் 3 கோடிரூபாய். 60 கோடி ரூபாய் ராணுவத்துக்காகச் செலவழியும். இதர செலவுகளில் முக்யமானவை ரெயில்வேக்காக $31\frac{1}{2}$ கோடி ரூபாயும், பாசன வேலைகளுக்காக 87 லக்ஷம் ரூபாயும், டெல்லியில் ராஜதானி கட்டுவதற்காக 1·2-கோடிரூபாயும் ஆகும். இதுவரையில் போட்டுவந்த அதிக லாபவரியை எடுத்துவிட்டு, இப்போதுள்ள ஸூபர் டாக்ஸ் வரியை வேறுவிதமாகப் போடப்போகிறார்கள். இதனால் 44 லக்ஷம் ரூபாய் அதிக வரும்படி கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.

தென்னாப்ரிக்கா இந்தியர்களின் குறைகளைப் பற்றிப் பரிசிலனைசெய்ய ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அது விசாரிக்கப்போகிற விஷயங்களாவன. (1) தென்னாப்ரிக்காவிலுள்ள ஆசியாக்காரர்களும் அவர்களுடைய வம்சத்தார்களும் வ்யாபார நிமித்தமாகவும் இதர கார்யங்களுக்காகவும் நிலம் வாங்குவதைப்பற்றியும் அப்படி வாங்குவதில் உள்ள உரிமைகளைப்பற்றியும், அவர்கள் வ்யாபாரம் செய்வதைப்பற்றியும் உள்ள சட்டங்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்தல், (2) அது விஷயமாக சட்டத்தை மாறுதல் செய்யவேண்டுமா என்று ஆலோசித்தல் (3) 1-ல் சொல்லியவைகளைப்பற்றி ஆசியாக்காரர்களுக்கு உள்ள குறைகளைப்பற்றி சீர்திருத்தம் செய்தல்.

மேற்சொன்ன கமிஷன் மார்ச்சு மாஸம் மத்தியில் கேப்டௌனில் விசாரணையை ஆரம்பித்திருக்கும்.

ஆமணக் கெண்ணெய்.

நமது ராஜதானியிலிருந்து ஏற்றுமதியாகும் ஆமணக்கெண்ணெயை ஏற்றுமதிக்கு முன் பரிசோதித்து, உத்யோக முறையில் சுத்தமென்று ஸெர்ட்டிபிகேட் கொடுக்க கவர்ன்மெண்டார் வஸதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின் மேல், கவர்ன்மெண்டார்

இதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கெமிகல் எக்ஸாமினர் (ரஸாயன பரிசோதகர்) கைத்தொழில் டிரெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனிகளும் நபர்களும் அனுப்பும் ஆமணக்கெண்ணெயை செலவில்லாமல் பரிசோதித்து, அது எவ்வளவு சுத்தமென்பதைக் காட்டி ஒரு யோக்யதா பத்ரமும் கொடுப்பார். இந்த ஏற்பாடு பரீக்ஷார்த்தமாக சிலகாலம் நடக்கும்.

கண்ணிலுள்ள பூவை எடுத்தல்.

கண்ணில் பூ விழுந்திருந்தால், அதை எடுக்க மேல் நாட்டு முறையில் தக்க பயிற்சியுள்ளவர்களிடம் போகவேண்டும். நாட்டு முறையால் என்ன தீங்கு ஏற்படுமென்பதைப் பற்றி சென்ற 1915-ம் வர்ஷம் அக்டோபர் மீ -த்து ஸஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளோம். வெளியூர்களில் கண் வைத்யத்துக்கு தக்க வைத்யர்கள் இல்லாவிட்டால், ஏழையான கண் நோயாளிகளை ஸர்க்கார் செலவில் சென்னை கண் ஆஸ்பத்ரிக்கு அனுப்ப ஜில்லா மெடிகல் ஆபீஸர்களுக்கும் ஸிவில் ஸர்ஜன்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கண் நோயால் வருந்தும் ஏழைகளுக்கு இந்த ஏற்பாடு ரொம்பவும் உபகாரமானது.

விசாகபட்டணம், தஞ்சாவூர், மதுரை, ஆகிய இந்த இடங்களில் கண் ஆஸ்பத்ரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

திருவாங்கூரில் கோவாபரேஷன்.

திருவாங்கூரில் கோவாபரெடிவ் ஸங்கங்களுடைய 1094-ம் வர்ஷத்திய ரிபோர்ட்டின்படி அந்த வர்ஷத்தில் ஸங்கங்களின் தொகையும் மெம்பர்களின் தொகையும் இரண்டு மடங்காயின. ஸங்கங்களின் மொத்தத் தொகை 101-ஆகும். அவற்றில் ஒன்று ஸெண்ட்ரல் பாங்க், 82 ஸங்கங்கள் வ்யவஸாயிகளுக்கானவை. அவற்றுள்ளும் 72-நாணய ஸங்கங்கள். பாக்கி பன்னி[illegible]ண்டில் நாணயமேயன்றி, பொருள் உற்பத்தி விற்பனை வேலையும் நடந்தன. 18-ஸங்கங்கள் வ்யவஸாயிகள் அல்லாத இதரர்களுக்கானவை. அவற்றுள் 10 நாணய ஸங்கங்கள். 7-ல் கொள்வினை விற்பனை, நாணய வேலைகள் நடந்தன. ஒன்றில் விற்பனை வேலை மாத்ரம் நடந்தது. 23 ஸங்கங்களில் நாயர்களே மெம்பர்களாக இருந்தார்கள். 10 ஸங்கங்களில் கிறிஸ்தவர்களும் மூன்றில் வலையர்களுமே மெம்பர்களாக இருந்தார்கள்.

திருவாங்கூரில் ஆயுர்வேத வைத்யம்.

திருவாங்கூரில் ஆயுர்வேத வைத்யத்தை கவனிக்க ஒரு தனி டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அதன் கீழ் ஒரு ஆயுர்வேத ஆஸ்பத்ரியும் மருந்துச்சாலையும் ஆயுர்வேதத் தோட்டமும் ஒரு ஆயுர்வேத பாடசாலையும் இருக்கின்றன. ஆயுர்வேத பாடசாலையில் 98 மாணவர்கள் இருக்கிறார்கள். அந்த பாடசாலையைச் சேர்ந்த ஒரு மாணவர் உபகாரச் சம்பளம்பெற்று கல்கத்தா நாஷனல் மெடிகல் காலேஜில் ஆயுர்வேத வைத்யத்தில் விசேஷப் பயற்சியடைந்து வருகிறார்.

ஆயுர்வேத ஆஸ்பத்ரியிலும், மருந்துச் சாலையிலும் ஆயுர்வேத பாடசாலையைச் சேர்ந்த மருந்துச் சாலையிலும் சிகித்ஸை செய்யப்பட்டவர்களின் மொத்தம் 37, 170 பேர்களாகும்.

திருவாங்கூரில் 74 ப்ரைவேட் வைத்யசாலைகள் இருக்கின்றன. அவைகளுக்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்துவருகிறார்கள். வைத்யசாலைகளுள் 8 விஷவைத்யம் செய்பவை. எல்லா வைத்யசாலைகளிலும் மொத்தம் சிகித்ஸைக்கு வந்தவர்களின் தொகை 1,56,949 பேர்களாகும். ஆயுர்வேத டிபார்ட்மெண்டின் நிர்வாகச் செலவு 31,052 ரூபாயாகும்.

பள்ளிக்கூடங்களில் வைத்ய பரிசோதனை.

பள்ளிக்கூடங்களையும் மாணவர்களை[illegible] வைத்யசோதனை செய்வது விஷயமாய் [illegible]யான ஸ்கீம் தயார்செய்வதற்கு காலம்பிடிக்[illegible]யால், தற்போதைய அவச்யங்களை அ[illegible] வித்யா டிரெக்டர் வைத்யசோதனை செய்வதற்காகப் பின்வருமாறு ப்ரேரணைசெய்திருக்கிறார். ஒரு மாணவனை முதல்தடவை சோதனைசெய்ய 12 அணா செலவு ஏற்படும். மறுதடவைகள் ஒவ்வொன்றுக்கும் 6 அணாவாகும். இந்தச் செலவை கவர்ன்மெண்டாரும், பள்ளிக்கூட மானேஜர்களும், மாணவர்களும் கூடியமட்டும் சரிபாகமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். இதற்காக கவர்ன்மெண்டார் பள்ளிக்கூடங்களுக்கு ஒவ்வொரு பையனுக்கும் முதல் பரிசோதனைக்கு 4 அணா வீதமும், மறு பரிசோதனைகள் ஒவ்வொன்றுக்கும் 2 அணா வீதமுமாக வைத்ய சோதனைச் செலவில் மூன்றிலொன்றுக்கு மேற்படாமல் க்ராண்ட் கொடுக்கவேண்டும். பள்ளிக்[illegible]ட மானேஜர்கள் வைத்ய சோதனைக்காக மாண[illegible]ர்களிடமிருந்து சார்ஜ் வஸூல் செய்யா

விட்டால், க்ராண்ட்போக பாக்கி வைத்யச்செலவை பள்ளிக்கூட பண்டிலிருந்தே கொடுக்கவேண்டும். ஸ்தலஸ்தாபனங்களில் மாணவர்களிடமிருந்து சார்ஜ் வஸூலிக்கவேண்டும். இந்த ப்ரேரணையை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூட மானேஜர்கள் பரிசோதனைக்குத் தெரிந்தெடுத்த வைத்யரை வித்யா டிரெக்டர் அங்கீகரிக்கவேண்டும்.

பிச்சை எடுப்பதே தொழிலாக உள்ளவர்கள்.

இந்தியாவில் பல இடங்களில் அநேக ஏழைகள் வேலைசெய்து பிழைக்காமல், தங்கள் ஜாதித்தொழில் பிச்சையெடுத்து ஜீவிப்பது என்று சொல்லி அவ்விதமே பிச்சைஎடுத்து ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய உபத்ரவத்தை நீக்குவதற்காக வங்காள கவர்ன்மெண்டார் என்னசெய்யலாமென்று தெரிவிக்கும்படி ஸ்தலஸ்தாபனங்களை ஆலோசனை கேட்டார்கள். அதற்கு அவர்கள் இந்த நிலைமையை காலக்ரமத்தில் தான் சீர்திருத்தவேண்டுமென்றும், முன் ஏற்பாடாக அவர்களுக்கு உபயோகமாக சில ஸ்தாபனங்கள் ஏற்படுத்தவேண்டு மென்றும் தெரிவித்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் முதல்முதலில் அங்கஹீனர்களுக்கும் வயதானவர்களுக்கும் ஒரு தங்குமிடம் கட்டவேண்டும் என்றும், ஏழைகளுக்கு உதவியாக ஒரு கைத்தொழில் பள்ளிக்கூடம் ஏற்படு[illegible]வேண்டுமென்றும் அபிப்ராயப்பட்டு, அதுவி[illegible]மாக என்னசெய்யவேண்டும், என்ன செல[illegible], யார்நிர்வகிக்க வேண்டும் என்ற [illegible]ப்பற்றி ஆராய்ச்சிசெய்து தெரிவி[illegible]கமிட்டி நியமித்திருக்கிறார்கள்.

கால்நடை அபிவ்ருத்திப் பண்ணை.

நெல்லூர் ஜில்லாவில் சிந்தலதேவி என்னும் இடத்தில் கால்நடைப் பண்ணைக் கட்டிடம் கட்ட கவர்ன்மெண்டார் 2 லக்ஷம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். அந்தப் பண்ணை ஒங்கோல் மாடுகள் உள்ள ப்ரதேசத்தில் உள்ளது. ஒங்கோல் மாடுகள் சென்னை ராஜதானியில் எங்கும் பரவிவருகின்றன. டச்சு கவர்ன்மெண்டாரும் அமெரிக்கா கவர்ன்மெண்டாரும் ஒங்கோல் மாடுகளை வாங்கி ஜாவாவிலும் பிலிப்பைன் தீவுகளிலும் மாடுகளை வ்ருத்தி செய்யக் கொண்டுபோகிறார்கள். சில காலமாக மாடு வைத்திருப்பவர்கள் அதிக விலைக்கு ஆசைப்பட்டு தங்கள் மாடுகளில் உயர்ந்தவற்றை [illegible]யல் நாடுகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள் என்று புகார் உண்டாயிருக்கிறது. இந்தக் கால்நடைப் பண்ணையின் நோக்கம் மாடுகளின் உயர்ந்த நிலைமை கெடாமலிருக்கும்படி செய்வதும் வ்ருத்திசெய்வதுமே. இதற்காக 850 எக்கர் நிலம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த இடம் ஜலக்கஷ்டமில்லாத இடம். வர்ஷந்தோறும் 40 உயர்ந்த காளைகள் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறார்கள். அவைகளை நாட்டின் கால்நடை அபிவ்ருத்திக்கு ஏற்ற விதமாக உபயோகிப்பார்கள். இதுபோக பண்ணையிலுள்ள அதிகப்படியான மாடுகளை விற்பார்கள்.

சடம்பு.

வங்காளம், பேஹார், ஐக்ய மாகாணங்கள், பஞ்சாப், மத்யமாகாணங்கள் ஆகிய இவற்றில் சடம்பு விசேஷமாகப் பயிராகிறது. அந்த இடங்களில் சடம்பிலிருந்து நார் எடுக்கிறார்கள். வங்காளத்திலிருந்தும் மத்ய மாகாணங்களின் சில பாகங்களிலிருந்தும் நல்ல நார் உற்பத்தியாகிறது. சில இடங்களில் சடம்புத்தாளை ஜலத்தில் ஊறவைத்து நார் எடுப்பதில் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றனவாம். தாளிலிருந்து யந்த்ரங்களால் நாரெடுக்க ஒருவர் முயற்சிசெய்து வருவதாகத் தெரிகிறது. அது ஸாத்யமாகுமானால், நாரெடுத்தபிறகு நிற்கும் கழிவுகளை நிலத்திலேயே சேர்த்து விடலாம். ஒரு எக்கர் நிலத்தில் எடுத்த சடம்புப் பயிரிலிருந்து நாரெடுத்த பிறகு மீதியிருக்கும் கழிவுகளை நிலத்திற்கு இட்டால் அந்த நிலத்தில் 40 ராத்தல் நைட்ரொஜின் சேருகிறதாம். தாள்களை ஜலத்தில் அழுகவிடுவதால் இந்த நைட்ரொஜின் வீணாகப்போகிறது. ஆகவே இந்த முறை ஸாத்யமாகுமானால், ஒரேதடவையில் நிலத்துக்கு எருவும் நாரால் லாபமும் கிடைக்கும்.

சடம்பு நாரை ம்ருதுவாக்க ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ம்ருதுவாக்கப்பட்ட நாரைக்கொண்டு கான்வாஸ் என்னும் கித்தான் செய்யலாமாம்.

நல்ல வ்யவஸாயத்துக்கேற்ற அளவுள்ள நிலங்கள்.

நிலங்கள் சிறு துண்டுகளாகவும், வெவ்வேறு இடங்களிலும் இருப்பதால், பலவிதங்களில் கெடுதலாக இருக்கிறது. நிலங்கள் ஒரே இடத்தில் சேர்ந்தாற்போலிருந்தால், சீர்திருந்திய வ்யவஸாய முறைகளைக் கைக்கொள்வது ஸுலபம்.

வடக்கே ஐக்ய மாகாணங்களில் ஒரு ஜமீன்தார் தமது நிலங்களில் சீர்திருந்திய முறைப்படி வ்யவஸாயம் செய்துவந்தார். அதனால் லாபம் கிடைத்தது என்றாலும், நிலங்கள் துண்டு துண்டாக வெவ்வேறு இடங்களில் இருந்ததால் அனாவச்யமான வேலையும் தொந்தரவும் ஏற்பட்டன. அதன்மேல் அந்த ஜமீன்தார் சிதறியிருந்த தமது நிலத்துண்டுகளை அவ்வூர் வாஸிகளுக்குக் கொடுத்து, ஒரே இடத்தில் நிலம் கிடைக்கும்படியாக அவர்களிடமிருந்து நிலம் வாங்கிக்கொண்டார். இதர வ்யவஸாயிகள் ஸுலபத்தில் இப்படி நிலம் மாற்றிக்கொள்வதற்கு இஷ்டப்படவில்லை. நல்ல நிலத்தைக் கொடுத்துத் தாழ்ந்த நிலத்தை மாற்றிக்கொள்ளவேண்டியிருந்தது. கடைசியில் ஒரே இடத்தில் அவருக்கு நிலம் கிடைத்தது.

நிலத்தில் சில பாகங்கள் மட்டமாக இருந்தபோதிலும், சேர்ந்தாற்போலிருப்பது ஸாதகமாயிற்று. பாசன இலாகாவில் வேண்டிய ஸௌகர்யங்கள் செய்துகொடுத்தார்கள். வ்யவஸாயப் பண்ணைகளில் பயிரிடப்படும் பயிர்களை உபயோகித்ததில் நல்ல பலன் கிடைத்தது. சராசரியில் ஒரு ஏக்கருக்கு 50 ரூபாய் லாபம் கிடைத்தது.

விறகுக் கஷ்டம்.

சென்றவர்ஷ ஆரம்பத்திலும், மத்தியிலும், இந்த வர்ஷம் முதலிலும் தமிழ் ஜில்லாக்களின் முக்ய நகரங்களில் விறகு விலை எப்படியிருந்தது என்பதைக் கீழே கொடுக்கிறோம்.

பட்டணம்	விறகு வகை	டன்விலை 1919 ஜவனரி மீ 1-உ			டன் விலை 1919 ஜுலை 1-உ			1920 ஜனவரி 1-உ		
		ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
சென்னை	சவுக்கு	13	0	0	16	8	0	15	0	0
					முதல்			முதல்		
					17	0	0	16	0	0
	காட்டுக்கட்டை	17	8	0	17	0	0	16	[illegible]	0
சைதாப்பேட்டை	சவுக்கு	14	0	0	14	0	0	15	[illegible]	[illegible]
	காட்டு விறகு	12	0	0	...	...	...	13	[illegible]	[illegible]
சித்தூர்	(விறகு)	12	0	0	12	0	0	*16	[illegible]	[illegible]
வேலூர்	(விறகு)	11	4	0	10	0	0	11	[illegible]	[illegible]
கூடலூர்	காய்ந்த சவுக்கு	10	8	0	12	0	0	12	8	0
	ஷை ஈரம்	7	0	0	8	0	0	8	0	0
தஞ்சாவூர்	(விறகு)	13	0	0	13	0	0	†15	0	0
திருச்சினாப்பள்ளி	சவுக்கு	20	0	0	20	0	0	‡23	0	0
	கருவேலன்	15	0	0	16	0	0	15	0	0
	கலப்பு	14	0	0	15	0	0	15	0	0
மதுரை	கலப்பு	23	0	0	22	0	0	23	12	0
சேலம்	முதல்தரம்; புளி, துரிஞ்சி முதலியவை	15	0	0	15	0	0	15	0	0
	இரண்டாந்தரம்	12	8	0	12	8	0	12	8	0
கோயம்புத்தூர்	(விறகு)	18	0	0	16	0	0	16	8	0

*விடாமல் மழை பெய்ததால் விலை இவ்வளவு ஏறிற்று † டிஸம்பர் மாஸத்தில் மழையால் விறகு அதிகம் வராமல் போய் விலை ஏறிற்று ‡ ரெயில்வே வாகன்கள் கிடைப்பது கஷ்டமாயிருந்ததாலும், விறகு கொண்டுவர மாட்டுவண்டிக்குக் கூலி அதிகமானதாலும் விலை அதிகமாயிற்று.

சிசு மரணம்.

சென்ற 1918-ம் வர்ஷத்தில் சென்னை ராஜதானியில் சிசு மரண விகிதம் ரொம்ப அதிகமாக இருந்தது. க்ராமாந்தரங்களில் பிறந்த குழந்தைகளில் 1000-க்கு 230·2 வீதம் இறந்துபோயின. முனிஸிபல் ப்ரதேசங்களில் சிசு மரணம் 1000-க்கு-282·1 வீதமாகும். க்ராமாந்தரங்களில் பின்வரும் ஜில்லாக்களில் சிசு மரணம் ரொம்ப அதிகமாகும். நெல்லூர் 308·4; அநந்தபூர் 289·4; செங்கல்பட்டு 288·9; பெல்லாரி 278·8; தஞ்சாவூர் 275; கர்நூல் 275; முனிஸிபாலிடிகளில் மரண விகிதம் வருமாறு. உடுமலைப்பேட்டை 419; கோயம்புத்தூர் 416·1; பெஜவாடா 408·1; குண்டூர் 390; சென்னை 360·7.

இப்படி சிசுமரணம் அதிகமாக இருப்பதற்கு முக்ய காரணங்கள் வருமாறு:— ப்ரஸவத்துக்கு பயிற்சியும் அனுபோகமும் இல்லாத அம்பட்டச்சிகளை மருத்து வத்துக்கு வைத்துக் கொள்ளுவது. (2) கொடியறுக்க அசுத்தமான கத்தி உபயோகிப்பதாலும், ரத்தம் வெளிப்படுவதை நிறுத்த அசுத்தமான பொருள்களை உபயோகிப்பதாலும் இசிவு உண்டாவது. (3) தேர்ந்த மருத்துவச்சிகள் அகப்படக் கூடிய இடங்களில் அவர்களை மருத்துவத்துக்கு வைத்துக் கொள்ளாமை. (4) பிறந்த சிசுக்களுக்கு ரஸம் ஸம்பந்[illegible]ட்ட மருந்துகளைக் கொடுப்பது. குழந்தை[illegible] சரியாக வைத்யம் செய்யாமை.

[illegible] வர்ஷத்தில் உணவுப் பொருள் க[illegible]அதிகமாக இருந்ததும், இன்ப்ளுயன்ஸா தோன்றியதும் அதிகப்படி காரணங்களாகும்.

ஸ்தலஸ்தாபனங்களும் முனிஸிபாலிடிகளும் அம்பட்டச்சிகளை மருத்துவத்தில் பயிற்சி செய்விக்க ஏற்பாடு செய்ய வேண்டியது அவச்யமென்று கவர்ன்மெண்டார் தெரிவித்ததன் மேல், இப்போது சில ஜில்லா போர்டுகளும் முனிஸிபாலிடிகளும் இதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கின்றன.

விடுதலையான கைதிகளுக்கு உதவி.

குற்றம் செய்து சிறைவாஸம் அடைந்து விடுதலையான கைதிகள் மறுபடியும் குற்றம் புரியாமல் நல்வழியி லிருக்கும்படி செய்ய கவர்ன்மெண்டாரும் பொது ஜனங்களும் முயல வேண்டியது அவச்யமாகும். சில காலத்துக்கு முன்னால் சென்னை ஜெயில்களின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இது விஷயமாக சில யோசனைகள் தெரிவித்தார். சென்னை ராஜதானி முழுமைக்கு மாக ஒரு கைதிகள் உபகார ஸங்கம் ஏற்படுத்த வேண்டும். அதன் தலைமை ஸ்தானம் சென்னையி லிருக்க வேண்டும். ஸென்ட்ரல் ஜெயில், ஜில்லா ஜெயில், ஸ்பெஷல் ஜெயில் இவைகளுள்ள ஜில்லாக்களில் அந்த ஸங்கத்துக்குக் கிளைகள் இருக்க வேண்டும். அந்த ஸங்கத்துக்குப்பின் வரும் நோக்கங்கள் இருக்க வேண்டும். விடுதலையான கைதிகளுக்கு ஜாதி மதவித்யாஸ மில்லாமல் அவர்கள் யோக்யமாக ஜீவனம் செய்வதற்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும். குற்றம் செய்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளவர்களை, அந்த விதமான வாழ்க்கையை விட்டுவிடும்படி செய்ய முயல வேண்டும். (3) அடிக்கடி தொழிலாக இல்லாமல் ஏதோ ஸந்தர்ப்பத்தால் குற்றம் செய்தவர்களையும், பால்யக் குற்றவாளிகளையும் வழக்கமாகக் குற்றம் செய்பவர்களாக ஆகாமல் செய்ய விசேஷ ஏற்பாடு செய்ய வேண்டும். வேறு விதத்தில் போதுமான அளவு தண்டனை கொடுக்க முடியாத ஸந்தர்ப்பங்களைத் தவிர இதர கேஸுகளில் காவல் தண்டனைவிதிக்காமலிருக்கும்படி இப்போது இருக்கிற சட்டத்தை ப்ரயோகிக்கும்படிக்கும் புதுசட்டங்கள் செய்யும் படிக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். (5) இந்த நோக்கங்கள் நிறைவேறு வதற்காக பணம் சேகரித்தும் இதர கார்யங்களைச் செய்தும்வர வேண்டும். இந்த ப்ரேரணைகள் பொது ஜனங்களால் ஆதரிக்கப் படவில்லை யென்றும், அது இல்லாமல் இந்த ஸங்கம் ஏற்படுவதால் லாபம் ஒன்று மில்லை யென்றும் கவர்ன்மெண்டார் தெரிவித்திருப் பதாகச் சொல்லப் படுகிறது.

சென்னையில் கோவாபரேஷன்.

நமது ராஜதானியில் பல விடங்களில் கோவாபரேஷன் பரவ வில்லை. மொத்த முள்ள தாலுக்கா, டெபுடி தாசில்தார் டிவிஷன்களின் கால்வாசியில் ஒவ்வொன்றிலும் 10 ஸங்கங்களுக்குக் குறைவாகவே இருக்கின்றன. இன்னும் கால்வாசியில் ஸங்கங்களே கிடையா. இப்படி நாட்டில் பாதி பாகத்தில் கோவாபரேஷன் வ்ருத்தியடையாமலிருப்பதால், கோவாபரெடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் எல்லா விடங்களுக்கும் கோவாபரேஷனின் நன்மைகள் ஏற்படும்படி செய்ய ஒரு ஸ்கீம் தயார் செய்திருக்கிறார். கவர்ன்மெண்டாரும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது நமது ராஜதானியில் 3700 ஸங்கங்கள் இருக்கின்றன. இன்னும் இரண்டு வர்ஷத்துக்குள் 4500 ஸங்கங்கள் புதிதாக ஏற்படுத்த வேண்டும். இதற்காக 13 அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ரார்களும், 15 சீப் இன்ஸ்பெக்டர்களும், 177 இன்ஸ்பெக்டர்களும் அதிகப்படியாக நியமிக்கப் படுவார்கள். இதற் கேற்க குமாஸ்தாக்களும் இதர ஸிப்பந்திகளும் அதிகமாக நியமிக்கப் படுவார்கள். இந்த ஏற்பாட்டின்படி ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு மொத்தத்தில் இரண்டு அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ரார்களும், சென்னை, நீலகிரி, அஞ்ஜெங்கோ ஜில்லாக்களைத் தவிர இதர ஜில்லாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ராரும் இருப்பார்கள்.

கல்கத்தாவில் வீட்டு வாடகை

கல்கத்தாவில் வீடுகளின் விலையும் வீட்டு வாடகையும் ரொம்ப அதிகமாக இருக்கிறது. இவைகளைப்பற்றிப் பரிசீலனைசெய்த ஒரு கமிட்டியார் இப்படி அதிகமானதற்கு நான்கு காரணங்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவையாவன:—(1) வ்யாபார வகுப்பார்கள் யுத்தகாலத்தில் ஏராளமான ஸொத்து அடைந்தது. (2) யுத்தத்துக்குப்பின் வ்யாபார வ்ருத்தி அதிகமானது. (3) கல்கத்தாவின் ஜனத்தொகை அதிகமாயிருப்பது. (4) வீடுகட்ட செலவு அதிகமாயிருப்பது. இந்த நிலைமையால் ஏற்படும் தீங்குகளைப்போக்க ரங்கூன், பம்பாய், இங்க்லண்ட் இவைகளில் வீட்டு வாடகைச் சட்டம் செய்திருப்பதுபோல் கல்கத்தாவில் சட்டம் செய்வது சரியல்லவென்றும், வீட்டில் குடியிருப்பவர்களைக் காலிசெய்யும்படி சொல்லும் கேஸ்களை கவனிக்க ஒரு தனி உத்யோகஸ்தர் நியமிக்வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். வீட்டைக் காலிசெய்யும்படி நோட்டீஸ் பெற்றவர்கள் அந்த உத்யோகஸ்தரிடம் போய் காலிசெய்ய அதிக காலம் வாய்தா கேட்கலாம். அந்த அதிகாரி ஒரு வர்ஷம் வரையில் வாய்தா கொடுக்கலாம். ஆறு மாஸத்துக்குமேல் வாய்தா கொடுத்திருந்தால், வீட்டுக்கு உடையவர் ஸாதாரண கோர்ட்டுகளில் அப்பீல் செய்யலாம். இவைகளுக்காக கவர்ன்மெண்டார் ஒரு ஆக்ட் செய்யவேண்டும். இதைத்தவிர சுற்றார்களை வ்ருத்திசெய்து, கோவாபரெடிவ் கட்டிட ஸங்கங்களுக்கு நிலம் வாங்கிக்கொடுத்து உதவிசெய்யவேண்டும்.

ஸிலோனுக்கு இந்தியர்கள் குடியேறிப்போவது

லங்கைத் தோட்டக் காரர்கள் ஸங்கத்தின் ரிபோர்ட்டிலிருந்து, சென்னையிலிருந்து ஸிலோனுக்கு சென்ற வர்ஷத்தில் குடியேறிப் போனவர்களைப் பற்றிய சில விவரங்கள்தெரியவந்திருக்கின்றன. சென்ற வர்ஷத்தில் மண்டபத்தின் வழியாக 160,951 மூன்றாவது வகுப்புப் ரயாணிகள் ஸிலோனுக்குப் போனார்கள். அவர்களுள் 1,10,447-பேர்கள் தோட்டங்களின் கூலிகளாவர். அவர்களுள் 58,492 பேர்கள் ஆண்கள்; 24,747 பேர்கள் பெண்கள். 16,874 பேர்கள் சிறுவர்கள். 10,334 பேர்கள் கைக்குழந்தைகள். 1918-ம் வர்ஷத்தில் மொத்தத்தில் 85,441 பேர்கள்தான் ஸிலோனுக்குப் போனார்கள். ஆகவே சென்ற வர்ஷம் ப்ரயாணிகளின் தொகை நூற்றுக்கு 88 வீதம் அதிகம். இதற்குக் காரணம் யுத்த காலத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் மனைவியில்லாமல் ஆண்கள் தனியாக ஸிலோனுக்குப் போகக் கூடாதென்று கட்டுப்பாடு செய்திருந்தார்கள். இந்த நிர்ப்பந்தம் சென்ற வர்ஷம் ரத்து செய்யப்பட்டது. அதனால் அநேக கூலியாட்கள் தனியாகப் போக முன் வந்தார்கள். மேலும் கூலியாட்கள் கிடைக்கும் ஜில்லாக்களில் உணவுப் பொருள்கள் விலை யேறியிருந்ததாலும், அவர்களுக்கு வேலை கிடைப்பது ச்ரமமாயிருந்தாலும் [illegible]பா திக்க ஸிலோனுக்குப் போகலா[illegible]வ்வொரு ஜில்லாவிலிருந்தும் போ[illegible]களின் விவரம் வருமாறு:—

திருச்சினாப்பள்ளி		...	[illegible]
தஞ்சாவூர்	....	....	16,062
சேலம்	...	....	12,270
தென்னாற்காடு	...	...	10,089
வட ஆற்காடு	...	...	9,744
செங்கல்பட்டு	...	...	5,102
மதுரை	...	...	5,059
திருநெல்வேலி	...	...	2,467

ஜாதிவாரி விவரம் வருமாறு:—

பறையர்கள்	...	...	31,140
வெள்ளாளர்கள்	...	...	28,244
பள்ளர்கள்	...	...	11,019
மலையாளிகள்	...	...	1951
தெலுங்கர்	...	...	3967

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற டிஸம்பர் மாஸத்தில் டியில் கண்ட விவரப்படி 35 கோடி ரூபாய் மூலதனத்துடன் 99 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளும், ஜனவரி மாஸத்தில் 23 கோடிரூபாய் மூலதனத்துடன் 87 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளும் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

டிஸம்பர் 1919	ரூ
4 பாங்கிலேவாதேவிக் கம்பெனிகள்	2,45,000
2 கப்பல் கம்பெனி	6,00,00,000
4 அச்சடித்து ப்ரசுரம் செய்யும் கம்பெனி	18,25,000
52 இதர கம்பெனிகள்	5,50,38,000
6 பருத்திமில் கம்பெனிகள்	2,05,00,000
1 ஜூட்மில் கம்பெனி	50,00,000
1 பருத்தி ஜூட் ஸ்க்ரூவும் ப்ரெஸும்	1,50,000
1 அரிசிமில் கம்பெனி	5,00,000
2 இதர மில்லுகளும் ப்ரெஸுகளும்	300,000
13 தேயிலைத் தோட்டக் கம்பெனிகள்	57,50,000
1 இதர தோட்டக் கம்பெனி	2,00,000
1 நிலக்கரிச்சுரங்கக் கம்பெனி	5,00,000
4 இதர சுரங்கக் கம்பெனிகள்	1,85,25,000
2 [illegible]க் கம்பெனி	1,30,00,000
1 [illegible] செய்யும் கம்பெனி	1,50,000
1 [illegible] கம்பெனி	15,00,000
[illegible]பெனிகள்	18,00,000
99 மொத்தம்	35,17,08000

ஜனவரி, 1920	
6 பாங்கி லேவாதேவி கம்பெனிகள்	19,50,000
1 கப்பல் கம்பெனி	10,00,00,000
1 கோவாபரேடிவ் ஸங்கம்	20,000
2 அச்சடிக்கும் கம்பெனிகள்	15,00,000
46 இதர கம்பெனிகள்	6,73,75,000
4 பருத்திமில்கள்	1,18,00,000
1 ஜூட்மில்	3,00,000
1 பருத்தி ஜூட்ஸ்க்ரூ ப்ரெஸ் கம்பெனி	15,00,000
1 அரிசி மில்	75,000
1 மாவுமில்	2,50,000
1 இதர மில்லுகள்	25,00,000
4 தேயிலைத்தோட்டக் கம்பெனிகள்	16,50,000
1 இதர தோட்டக் கம்பெனி	1,00,000
4 நிலக்சுரிச் சுரங்கக் கம்பெனி	11,50,000
3 இதர சுரங்கக் கம்பெனிகள்	65,50,000
1 நிலம் கட்டிடக் கம்பெனி	2,00,00,000
9 இதர கம்பெனிகள்	93,00,000
87 மொத்த	22,60,20,000

காட்டுப் பஞ்சாயத்துகள்.

சென்ற 1918-19-ம் வர்ஷத்தில் சென்னையிலுள்ள காட்டு நிர்வாகப் பஞ்சாயத்துகளின் தொகை 319-லிருந்து 366-ஆகவும், அவைகளின் நிர்வாகத்திலிருந்த காடுகளின் விஸ்தீர்ணம் 496 சதுர மைலிலிருந்து 534 சதுரமைலாகவும் அதிகரித்தன. ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை பஞ்சாயத்துகளிருந்தன வென்பதைக் கீழே கொடுக்கிறோம்.

க்ருஷ்ணா	14
குண்டூர்	31
நெல்லூர்	2
செங்கல்பட்டு	24
கடப்பை	19
கர்நூல்	1
பல்லாரி	60
அனந்தபூர்	9
சித்தூர்	16
கோயம்புத்தூர்	18
வட ஆற்காடு	69
தென்னாற்காடு	34
சேலம்	18
தென்கன்னடம்	3
தஞ்சாவூர்	1
திருச்சினாப்பள்ளி	31
மதுரை	12
ராமநாதபுரம்	1
திருநெல்வேலி	3
மொத்தம்.	366

மொத்தம் 366 பஞ்சாயத்துகளில் 68 பஞ்சாயத்துகள் சரிவர நடக்கவில்லை. அவைகளில் இரண்டை கவர்மெண்டார் நிறுத்தி விட்டார்கள். அவைகளுள் ஒன்றில் க்ராமவாஸிகள் தங்கள் வேலையைச்செய்ய ப்ரியப்படவில்லை. மற்றதில் நிர்வாகம் சரிவர நடக்கவில்லை. வேறு மூன்று பஞ்சாயத்துகளில் பஞ்சாயத்தார்களை மாற்றியிருக்கிறார்கள்.

சில பஞ்சாயத்துகள், முக்யமாக குண்டூர் ஜில்லாவிலுள்ளவை த்ருப்திகரமாக நடந்தன. நெல்லூரில் காரெடு பஞ்சாயத்தார் சரியான கணக்குகள் வைத்து வருகிறார்கள். அவர்கள் அந்த இடத்து குளம் ஒன்றைச் செப்பனிட 250 ரூபாய் கொடுத்து உதவினார்கள். தென்கன்னடத்திலுள்ள ராம ஸமுத்ரங்காடு பஞ்சாயத்தில் ஒரு போலிகாரை வாங்கியிருக்கிறார்கள்.

இந்த வர்ஷத்தில் பஞ்சாயத்துகளால் காடுகளில் மேய்ச்சல் அளவுக்கு மீறியிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. கவர்ன்மெண்டார் காட்டு நிர்வாகப் பஞ்சாயத்துகளில் பெரும் பாகம் த்ருப்திகரமாக நடக்க வில்லையென்றும் நன்றாக நடப்பவை வெகு ஸ்வல்ப மென்றும் அபிப்ராயப்படுகிறார்கள். இப்போது 213 ரிஸர்வு காடுகள் பஞ்சாயத்துகளின் நிர்வாகத்திலிருக்கின்றன. இன்னும் 222 ரிஸர்வுகள் இருக்கின்றன. அவைகளை பஞ்சாயத்துகளிடம் விடலாம். ஆகையால் இன்னும் 200 அல்லது 300 பஞ்சாயத்துகள் ஏற்படுத்தலாம். இப்போதுள்ள பஞ்சாயத்துகளை பலப்படுத்தி, அந்த ஏற்பாட்டைப் பரவச் செய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டார் விரும்புகிறார்கள். இந்தக் காரியங்களுக்காக கவர்ன்மெண்டார் ஒரு தனி உத்யோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். அவர் முதல் முதலில் காட்டு நிர்வாகப் பஞ்சாயத்துகள் சரியாக நடக்காமைக்குக் காரணமின்னதென்பதை ஆராய அவைகளை சீர்திருத்த என்ன செய்யவேண்டுமென்பதைப்பரிசிலனை செய்யவேண்டும்.

பழைய பஞ்சாயத்துகளை சீர் திருத்தவும் புதுப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தவும், அவைகளை மேற் பார்வை செய்யவும் ப்ரத்யேகமான உத்யோகஸ்தர்கள், ஸப்பந்திகள் இவர்கள் எத்தனை வேண்டியிருக்குமென்பதைத் தெரிவிக்க வேண்டும்.

மாஸூலில் மதிப்புகள்.

நெல்:—1919-20-ம் வர்ஷத்திய நெல் படியைப்பற்றிய கடைசிக் கணக்குகள் ஸ[...]த்தில் வெளியாகியிருக்கின்றன. அதன[...] ப்ரஸ்தாப வர்ஷத்தில் 1,17,973,00 எக்கர் வி[...]தீர்ணத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டதாகத் தெரிகிறது. அதற்கு முந்திய வர்ஷத்தில் 97,11,000 எக்கர் சாகுபடி செய்யப்பட்டது. ஆகவே ப்ரஸ்தாப வர்ஷத்தில் சாகுபடி விஸ்தீர்ணம் முந்திய வர்ஷத்தியதைவிட நூற்றுக்கு 12·7 வீதம் அதிகமாகும். 1907-08-ம் வர்ஷத்துக்குப் பிறகு இந்த வர்ஷந்தான் சாகுபடி விஸ்தீர்ணம் ரொம்ப அதிகம். இதற்குக் காரணம் உணவுப்பொருள்கள் குறைவாயிருப்பதே. குண்டூரில் மாத்ரம் தென்மேற்குப் பருவ மழை தட்டிப்போனதால், அங்கே சாகுபடி ரொம்ப குறைவு.

விசாகப்பட்டணம், கோதாவரி, க்ருஷ்ணா, வட ஆற்காடு, சித்தூர், ஆகிய ஜில்லாக்களில் மாஸூல் குறைந்துபோகுமென்று தெரிகிறது. இதர இடங்களிலெல்லாம் மாஸூல் அதிகமாகும். மேற்குக்கரை ஜில்லாக்களில் மாஸூல் ரொம்ப அதிகமாகும். இந்த வர்ஷம் [...]
கக்கூடிய மாஸூல் 11,87,02,000 [...]
அரிசியாகும். போன வர்ஷம் கி[...]
8,40,60,600 அந்தராகும் [...]
வர்ஷத்திய மாஸூல் முந்திய [...]
விட 100-க்கு 41-வீதம் அதி[...]
சரி வர்ஷத்தில் மாஸூல் 10 6[...]
தர் என்று மதிப்பிட்டிருக்கிறா[...]
இந்த வர்ஷத்திய மாஸூல் [...]
விட 1 கோடியே 20 லக்ஷ[...]
அதிகமாகும்.

பருத்திப் பயிர்:—1[...]
சென்னையில் பருத்தி[...]
நிலத்தின் விஸ்தீர்ண[...]
சென்றவர்ஷம் 31[...]
பருத்திப்பயிர் [...]
ஆகவே இந்த வ[...]
நூற்றுக்கு 26·5[...]
சென்ற வர்ஷம் [...]
தற்குக் காரண[...]
ரொம்ப அதிக[...]
ஸர்வீகள் [...]
விட்டு [...]
மில்லை

…கி சர்குபடி செய்யலானார்கள். அதனால்
…றவர்ஷம் சாகுபடி விஸ்தீர்ணம் ரொம்ப
…கமாக விருந்தது. ஸாதாரண காலங்களில்
…த்தி சாகுபடியின் விஸ்திர்ணம் 23,03,000
…க்கராகும்.

இந்தவர்ஷம் பருத்தி சாகுபடி குறைந்ததற்
… காரணம் உணவுப் பயிர்கள் அதிகமாக
…குபடி யானதே. உணவுப் பொருள்களுக்கு
அதிக விலை கிடைப்பதாலும், பருத்தி விலை
குறைந்திருப்பதாலும், வ்யவஸாயிகள் உணவுப்
பயிர்களை அதிகம் கவனிக்க லானார்கள். இந்த
வர்ஷம் பருவ நிலைமைக் கோளாறால் சில இட
ங்களில் கொஞ்சம் பாதகமேற் பட்டாலும் விளை
ச்சல் சராசரி திட்டத்துக்குக் குறையாதென்று
சொல்லப்படுகிறது. ஆகவே இந்த வர்ஷம்
4,13,000 பேல் பருத்தி கிடைக்கும். ஒரு
பேல் 400 ராத்தலாகும். ஆனால் இது சராசரி
மாஸூல் திட்டத்தைவிட 28,800 பேல்குறைவு.
இப்படிக் குறைந்ததற்குக் காரணம் அதிக
மாஸூல் கொடுக்கும் கம்போடியாப் பருத்தி
சாகுபடி குறைந்திருப்பதே.

…ங்கடலை:-சென்னை ராஜதானியில் 1919-
…ர்ஷத்தில் வேர்க்கடலை சாகுபடியான
… விஸ்தீர்ணம் 11,59,300 ஏக்கராகும்.
… வர்ஷத்திய விஸ்தீர்ணத்தைவிட
…·6 பங்கு வீதம் அதிகமாகும்.
… தஞ்சாவூர். செங்கல்பட்டு, பல்
…, கோதாவரி ஜில்லாக்களைத்
…ங்களி லெல்லாம் சாகுபடி அதி
…ட்டில் எள் சாகுபடி அதிக
…லெ சாகுபடி குறைந்து விட்
…ல் மானாவாரி நிலங்களில்
…க நெல் சாகுபடி செய்
… ஜில்லாக்களைத் தவிர
…லைமை பயிருக்கு ஸா
…வர்ஷம் 6,53,200
… மதிப் பிட்டிருக்
…4,41,500 டன்

…ஸை.

…, அது பழுப்
…ழக வறுத்து
…ல் ஒரு
…ளுக்
…வந்நீ

ரிற் கரைத்துக் காய்ச்சல் வந்து விட்ட அடுத்த
நாள் வெறும் வயிற்றில் குடிக்கவேண்டும். கா
ய்ச்சலிருக்கும்போது குடிக்கப்படாது. ஒவ்
வொரு நாளுங் காய்ச்சல் வந்தால் விட்டுக் கொ
ஞ்சநேரத்துக்குப் பின் குடிக்க வேண்டும். இது
வும் வெறும் வயிற்றில்தான். ஆகையால்
அது குடிக்குமுன் சாப்பிடக் கூடாதென்பதை
நினைத்துக் கொள்ளுக. குடித்த பின்னும் பட்
டினி கிடைப்பதே நல்ல பத்யம். தாகம் இரு
ந்தால் கொஞ்சம் வெந்நீர் கொண்டு நாவை நனை
த்துக் கொள்ளவேண்டும். பசி கடுமையாய்
உண்டானால் 48-மணி நேரத்துக்குப் பிறகு மெ
ல்லிய கஞ்சித்தெளிவு அல்லது கோழிக் குஞ்சு
ப்ருத்து கொஞ்சங் குடிக்கலாம். இத்தோடு தே
கத்திலே குளிர் பிடியாமல் காத்துக் கொள்வ
தும் ஓர் பத்யமாம்.-சத்தியவேத பாதுகாவலன்.

முழுகிப்போன கப்பலின் தபால்கள்.

தபால் கொண்டுபோகும் கப்பல்கள் எந்தக்
காரணத்தாலாவது மூழ்கிவிட்டால், அவைகளி
லுள்ள தபால்களும் விலையுயர்ந்த பொருள்க
ளும் நாசமடையாமலிருக்கச்செய்ய ஒரு ஏற்
பாடு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

தபால்களை மிதக்கும் இரும்புப்பெட்டிகளில்
போட்டுவைப்பார்கள். கப்பல் மூழ்கும்போது
பெட்டி தானாகவே கப்பலிலிருந்து விலகி மிதக்
கும். அது பன்னிரண்டு மணிக்கு ஒரு தடவை
ஒரு வாணத்தை வெளியிடும். அடிக்கடி உர
த்த சத்தத்தை வெளியிட பெட்டியில் ஸாத
னம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாடுகளால்
பெட்டிக்கு அருகாமையில் போகும் கப்பல்கள்
அதைப் பார்த்து எடுத்துக் கொள்ளலாம்.
அதோடு கப்பல் உடைந்த பிறகு மூன்று மா
ஸம் வரையில் பெட்டியிலிருந்து ஒரு வெளிச்
சம் ஸதா தெரிந்து கொண்டிருக்கும்.

மாடுகள் இல்லாமல் தொழுவத்தெரு செய்தல்.

இங்க்லண்டிலுள்ள ராதம்ஸ்டெட் வ்யவ
ஸாயப் பண்ணையில் வைக் கோலைக் கொண்டு
தொழுவத் தெரு செய்யவழி கண்டு பிடிக்கப்
பட்டிருக்கிறது. இந்த வேலை செய்யக் கூடிய
பாக்டீரியா ஒன்று கண்டு பிடிக்கப் பட்டிருக்கி
றது. வைக்கோலில் காற்றும், ஜலத்தில் கரை
யக்கூடிய நைட்ரொஜின் ஸம்பந்தமானஉணவும்
சேர்த்தால், அந்த பாக்டீரியா வைக் கோலைப்
பக்வம் செய்து தொழுவத் தெரு போலிருக்கும்
படி செய்துவிடுகிறது.